கல்வயல் வே. குமாரசாமி

# கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் வே.குமாரசாமி

# கவிதைகள்

**பதிப்பாசிரியர்கள்**

**திரு. சிவ. முகுந்தன்**
**திரு. கு. றஜீபன்**

**வெளியீடு :**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கல்வயல் வே. குமாரசாமி கவிதைகள் |
| ஆசிரியர் | : | கல்வயல் வே. குமாரசாமி |
| உரிமை | : | திருமதி. வே. குமாரசாமி |
| பதிப்பாசிரியர்கள் | : | திரு. சிவ.முகுந்தன் (பிரதேச செயலகம், துணுக்காய்)<br>திரு. கு. றஜீபன் (பிரதேச செயலகம், சாவகச்சேரி) |
| முதற் பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | xiv + 384 |
| பிரதிகள் | : | 500 |
| வெளியீடு | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்<br>இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| அச்சுப் பதிப்பு | : | எவகிறீன் அச்சகம்,<br>இல. 693, கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே : 021 221 9893 |
| ISBN | : | 978 - 955 - 7331 - 10 - 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | வான் விளக்கு | 1 |
| 02. | பங்குனிக் கனல் பதமற மறைந்ததும் | 3 |
| 03. | அந்திக்கூத்து | 4 |
| 04. | ஓ! யாது? ஓயாது? | 5 |
| 05. | பிரம்மாக்கள் | 7 |
| 06. | தடம் புரட்டல் | 9 |
| 07. | கவிஞன் | 10 |
| 08. | எண்ணத் துணைவி | 11 |
| 09. | சிரமம் குறைகிறது | 13 |
| 10. | நம்பிக்கை | 15 |
| 11. | சித்திரம் | 17 |
| 12. | உறவு | 18 |
| 13. | போதும் அடி | 20 |
| 14. | தீராத் தொல்லை | 21 |
| 15. | பாகு மொழி பேசாயோ? | 22 |
| 16. | ஏங்கும் இதயம் | 23 |
| 17. | தேர்வு | 25 |
| 18. | முடியாத காரியம் | 27 |
| 19. | பாடல் புனைந்து வைப்பேன் | 29 |
| 20. | பா ஆவாய் | 31 |
| 21. | தொலைபேசி | 33 |
| 22. | அந்தரங்கம் | 34 |
| 23. | விட்டில் | 36 |
| 24. | அரும்பும் மலரும் | 37 |
| 25. | நிறைவு | 38 |
| 26. | நியதியோ? | 39 |
| 27. | க(வி)தையானாள் | 40 |
| 28. | துறவி | 43 |
| 29. | நான் | 45 |
| 30. | யாழினி | 46 |
| 31. | சங்கமம் | 48 |
| 32. | மங்கை | 49 |
| 33. | ஏன் சுற்றுகிறாளோ? | 51 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 34. | முனைப்பூ | 53 |
| 35. | இன்பச் சுமை | 54 |
| 36. | உறுபயன் | 55 |
| 37. | இளமையில் கற்று உய்வோம் | 57 |
| 38. | அறிவு | 58 |
| 39. | நடு நிற்கும் வேர் அறிவூற்று | 59 |
| 40. | ஒற்றுமையாக இயங்கிடுவோம் | 60 |
| 41. | சகுனம் | 62 |
| 42. | தவிப்பு | 64 |
| 43. | நான் புரிந்த பாவம் | 66 |
| 44. | வாழ்வு | 68 |
| 45. | நினைவுச் சுமைகள் | 70 |
| 46. | புழுத்த சமுதாயம் | 72 |
| 47. | ஏளனம் | 74 |
| 48. | மாற்று இதயம் | 75 |
| 49. | மௌன சத்தியம் | 77 |
| 50. | காலம் வரும் | 78 |
| 51. | அழைத்துச் செல்லும் | 80 |
| 52. | அழிவொன்று தேவை! | 81 |
| 53. | நீ அழுதால்! | 83 |
| 54. | வழியனுப்பி வையுங்கள் | 85 |
| 55. | தெருவிளக்கு | 87 |
| 56. | நுளையலாமே | 88 |
| 57. | தேட்டம் | 89 |
| 58. | இதயத் தந்தியில் மீட்டவோ | 90 |
| 59. | ஏக்கம் | 91 |
| 60. | ஏன் சோலி? | 92 |
| 61. | வர்க்கம் ஒன்று வளர்கிறது | 94 |
| 62. | இசைவு | 96 |
| 63. | என்னை விடுங்கோ! | 97 |
| 64. | நிரைமீட்பு | 101 |
| 65. | சத்தியமூச்சின் முற்றுப்புள்ளி! | 103 |
| 66. | கட்டாயம் | 106 |
| 67. | சேவல் கோழிகள்... | 108 |
| 68. | மறுமொழி தெரியாக் கணக்குகள் | 110 |
| 69. | உங்களுக்கு விளங்குதோ? | 112 |
| 70. | பொங்கலாம் இன்றைக்கு! | 115 |
| 71. | நாய்களுக்கு வந்த நடப்பு | 118 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 72. | கணிப்பு | 122 |
| 73. | ஒரு கடிதத்தின் நடுப்பகுதி | 124 |
| 74. | கேலியில்லை | 126 |
| 75. | அக்கறை இல்லையோ? | 129 |
| 76. | மரண நனவுகள் | 133 |
| 77. | ஊர்க்கோலம் | 135 |
| 78. | ஆருக்காய் காவல் ஆண்டவரே ஆண்டவரே! | 136 |
| 79. | ஒரு தனி வீட்டின் சோகமும் முற்றமும் | 138 |
| 80. | காவல் | 140 |
| 81. | ஒரு கிராமத்தின் கோடைத் தழும்பு | 141 |
| 82. | அவள் சுதந்திரம் | 143 |
| 83. | அக்கினி ஹோமம் அல்லது வாடி இருந்த கொக்கு | 144 |
| 84. | ஊரின் நினைப்பு | 147 |
| 85. | குருக்ஷேத்திரம் அல்லது அறி - குறி - கள் | 151 |
| 86. | காப்பு - ஆற்று | 154 |
| 87. | யாழ்ப்பாலை | 155 |
| 88. | உபாதைகள் | 157 |
| 89. | வாழும் அயல் சாட்சி | 158 |
| 90. | ஊழ் வாய் | 159 |
| 91. | பாம்புகள் ஊர் ஊராய்... | 160 |
| 92. | தனிமை தரும் ஆர்வம் | 162 |
| 93. | தூண்டு சுடர்... | 164 |
| 94. | ஒரு வீட்டின் மினி ஒலிப்பதிவு | 166 |
| 95. | ஊர் திரும்ப | 169 |
| 96. | ஒரு கவிஞனின் பிரிவு | 172 |
| 97. | மௌனமான கலகம் | 175 |
| 98. | புலம்பெயர்தல் | 176 |
| 99. | இருள் கவியும் மாலை முகம் | 178 |
| 100. | அக்கா தம்பி உறவுகள் அல்லது அதிகாரங்கள் | 179 |
| 101. | இருப்பும் தவிப்பும் | 182 |
| 102. | மனம் விட்டுப் பேச வேண்டும் | 185 |
| 103. | தூண்டிலும் இரையும் அல்லது நடப்பு | 187 |
| 104. | ஊரின் சோகம் | 189 |
| 105. | நாயும் நடுத்தெருவும் | 191 |
| 106. | ஊர் அவலம் அல்லது பணயம் | 192 |
| 107. | வளர்ப்பு | 193 |
| 108. | ஓர் கோலமோ! | 195 |
| 109. | பொன்னண்ணை கொஞ்சம் பொறு | 196 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. விண்ணில் எழுதுதல் 198
111. புதுப் பஞ்ச தாண்டகம் 201
112. விண்ணப்பமொன்று... 203
113. பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி! 206
114. புதியதோர் உலகஞ் செய்வோம்! 209
115. பாவம் நாசம் 213
116. ஊமை உணர்வுகள் 215
117. மேய்ப்பர்கள் 217

**முறுகல் சொற்பதம்**

118. காப்பு 221

**மனித விழுமியப் பாடல்கள்**

119. வாழும் வழி 251
120. அம்மா அப்பா 252
121. நற் செல்வம் 253
122. கடமை 254
123. வேண்டுதல் 255
124. ஆவல் 256
125. அன்பு 257
126. நடத்தைகள் 258
127. உயர்வின் வழி 259
128. பெற்றார் அருமை 260
129. பயில் பலன் 261
130. தாழ உரைத்தல் 262
131. நல்லியல்புகள் 263
132. நற்பண்பு 264
133. நற்பண்பு 265
134. ஒழுக்கம் 266
135. அறிவு 267
136. உண்மை பேசுவோம் 268
137. ஒற்றுமை 269
138. செய்ய வேண்டியன 270
139. ஆசான் 271
140. கல்வி 272
141. நட்பு 273
142. விடாமுயற்சி 274
143. தவிர்க்க வேண்டுவன 275
144. வாழும் வழி 276
145. நல்வழி 277




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 146. | நித்திய கருமம் | 278 |
| 147. | உண்மை பேசுவோம் | 279 |
| 148. | நன்றி மறவாதீர் | 280 |
| 149. | முயற்சி | 281 |
| 150. | பெரியோரை மதித்தல் | 282 |
| 151. | புறங்கூறாமை | 283 |
| 152. | நன்றி செய் | 284 |
| | **குழந்தைப் பாடல்கள்** | |
| 153. | கடிதமும் கதையும் | 287 |
| 154. | பம்பரம் சுற்றுது | 288 |
| 155. | முயலார் ஓட்டம் | 289 |
| 156. | பட்டம் பார் | 290 |
| 157. | கொக்கு மச்சாள் | 291 |
| 158. | நத்தையாரே! | 292 |
| 159. | ஈயாரே! | 293 |
| 160. | நிலாத்தோணி | 294 |
| 161. | அணில் அண்ணா | 295 |
| 162. | ஆமை மாமா | 296 |
| 163. | குஞ்சுகளும் கோழியும் | 297 |
| 164. | பூனைக்குட்டியார் | 298 |
| 165. | வண்டுக் கப்பல் | 299 |
| 166. | நண்டின் வருகை | 300 |
| 167. | ஆட்டுக்குட்டி | 301 |
| 168. | இடிமின்னல் | 302 |
| 169. | குருவி அக்கா | 303 |
| 170. | பாப்பாப்பா | 304 |
| 171. | பசுவும் கன்றும் | 305 |
| 172. | ஊஞ்சல் ஆட்டம் | 306 |
| 173. | புறா | 307 |
| 174. | வௌவால் தம்பி | 308 |
| 175. | மயிலார் நடனம் | 309 |
| 176. | காகமும் பசுவும் | 310 |
| 177. | எங்கள் வீட்டு நாயார் | 311 |
| 178. | ஆட்டைக் கோச்சு | 312 |
| 179. | நுளம்பார் | 313 |
| 180. | தலைகீழாய் தொங்குவதேன் | 314 |
| 181. | கண்ணிறைந்த தோகை விரித்து | 315 |
| 182. | குரங்கார் கூத்து | 316 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 183. | மாமி குயில் மாமி | 317 |
| 184. | பாலரெல்லாம் கூடுவோம் | 318 |
| 185. | படலையிலிருந்து மணிச்சத்தம் | 319 |
| 186. | வயலருகே | 320 |
| 187. | பம்பரம் சுத்துது | 321 |
| 188. | அண்ணா வளர்க்கும் முயல்குட்டி | 322 |
| 189. | வீடு நல்ல வீடு | 323 |
| 190. | பாட்டா வெளியே வாருங்கள் | 324 |
| 191. | அம்மா தோசை சுடுகின்றார் | 325 |
| 192. | பாலர் நாங்கள் | 326 |
| 193. | அம்மா | 327 |
| 194. | பள்ளிக்கூடம் | 328 |
| 195. | விளையாட்டுப் படிப்பு | 329 |
| 196. | நோக்கு | 330 |
| 197. | வணக்கம் | 331 |
| 198. | ஆந்தையாரே! | 332 |
| 199. | பாடம் படித்திடுவோம் | 333 |
| 200. | வீட்டுக் குஞ்சுக்கிளி | 334 |
| 201. | மைனாக் குஞ்சே! | 335 |
| 202. | குரங்கார் | 336 |
| 203. | நாயார் வேலை | 337 |
| 204. | சிரிப்பு | 338 |
| 205. | குட்டி ஆடு | 339 |
| 206. | கோழியார் | 340 |
| 207. | கோழிக் குஞ்சாரே! | 341 |
| 208. | பல்லியும் பூனையும் | 342 |
| 209. | தம்பளப் பூச்சி | 343 |
| 210. | வழியைச் சொல்லும் | 344 |
| 211. | நான் சொல்வேன் | 345 |
| 212. | குஞ்சு மீனாரே | 346 |
| 213. | மீன் பட்ட பாடு | 347 |
| 214. | அணிலார் | 348 |
| 215. | மின்மினி | 349 |
| 216. | என்ன தாளம்? | 350 |
| 217. | பட்டம் | 351 |
| 218. | கடல் அலை | 352 |
| 219. | நட்சத்திரம் | 353 |
| 220. | மாமா தந்த குதிரை | 354 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 221. | ஒழுங்கு | 355 |
| 222. | பனித்துளி | 356 |
| 223. | தாமரை | 357 |
| 224. | மாணவர் | 358 |
| 225. | ஏன்? | 359 |
| 226. | பெரியவர் சொல் | 360 |
| 227. | பிந்தாமல் வாருங்கள் | 361 |
| 228. | பாட்டியும் பூட்டியும் | 362 |
| 229. | ஆடுவோம் வா | 363 |
| 230. | தேன் குடிக்கும் குருவி | 364 |
| 231. | குருவிப் பாட்டு | 365 |
| 232. | செண்பக மாமி | 366 |
| 233. | தோகை மயில் | 367 |
| 234. | பெரிய மழை | 368 |
| 235. | குரங்குக்குட்டிக் கூட்டம் | 369 |
| 236. | பழப்பாட்டு | 370 |
| 237. | வாழையும் நாமும் | 371 |
| 238. | வினாவும் விடையும் | 372 |
| 239. | மாலை வானம் | 373 |
| 240. | ஊர் சுற்றி.... | 374 |
| 241. | வெள்ளிப் பூக்கள் | 375 |
| 242. | சாய்ந்தாடு | 376 |
| 243. | கோழிக் குஞ்சே! | 377 |
| 244. | முயல் குட்டி | 378 |
| 245. | யானைத் தாத்தா | 379 |
| 246. | அழகு பார் | 380 |
| 247. | குரங்காரின் கூத்து | 381 |
| 248. | தவளை அண்ணா | 382 |
| 249. | பூனைக்குட்டியார் | 383 |
| 250. | சிங்கத்தார் | 384 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீட்டு முயற்சியில் கல்வயல் வே.குமாரசாமியின் கவிதைகளையும் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கல்வயல் வே.குமாரசாமி அவர்கள் சாவகச்சேரியின் கல்வயல் பிரதேசத்தில் பிறந்து சங்கத்தானையில் வாழ்ந்தவர். அஞ்சல் அதிபராகவும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் வருகைதரு விரிவுரையாளராகவும் விளங்கிய இவர். தமிழ் இலக்கியத்திற்கு கனதியான பங்களிப்பினை வழங்கி உள்ளார்.

தமிழ் இலக்கியப்பரப்பில் மரபுக்கவிதைப்புலத்தில் நிறைந்த ஆளுமை கொண்ட இவர் பேச்சோசைப்பாங்கினை கவிதைகளில் நயமுற கையாண்டுள்ளார். மரபுக்கவிதை என்ற ஒரு தளத்தில் மட்டும் நில்லாது குழந்தைப்பாடல்களிலும் முதன்மையானவராக விளங்கி இருக்கின்றார். இத்தகைய பன்முக ஆளுமை கொண்ட இவரது கவிதை கள் எதுவும் முழுமையாக இதுவரை தொகுக்கப்படவில்லை முதன் முதலாக பண்பாட்டலுவல்கள் திணைக்களமே இவரது கவிதைகளை முழுமையாக தொகுத்து வெளியிடுவது பராட்டுக்குரியது.

மரபுக்கவிதை, குழந்தைப்பாடல், இசைப்பாடல்கள் என பல கவிதைத்தளங்களில் இயங்கி பல விருதுகளையும் பெற்றிருக்கின்றார் மிக அண்மையில் மறைந்த கல்வயல் வே.குமாரசாமி அவர்களின் கவிதைகளை தேடிப்பெற்று வெளியிடுகின்ற பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் அதன் உதவிப்பணிப்பாளர் அவர்களுக்கும் இதற்கு பதிப்பாசிரியர்களாக இருந்து செயற்பட்ட திரு.சிவ.முகுந்தன், திரு.கு.றஜீபன் அவர்களுக்கும் இவரது கவிதைகளை வெளியிட அனுமதி தந்த திருமதி. குமாரசாமி மற்றும் அவரது பிள்ளைகளுக்கும் எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சி.சத்தியசீலன்**
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர்விவகார அமைச்சு
வடக்குமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2018ஆம் ஆண்டு ஆவணப்படுத்தல் செயற்றிட்டத் தினை முதன்மையான பணியாக கொண்டு செயற்படுகின்றது. எமது கலை இலக்கிய பண்பாடு, பாரம்பரியங்கள் என்பன ஆவணப்படுத்தப் பட்டு அதனை அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் நோக்கில் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தவகையில் வடக்கு மாகாணத்தில் வாழ்ந்த அறிஞர்கள், புலவர்களினுடைய ஆக்கங்களை வெளிக்கொணர்வதன் மூலம் புதிய தலைமுறை இவற்றினை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். நூல் தொகுப்புப்பணி, பதிப்புப்பணி, மீள்பதிப்புப்பணி என பல்வேறுபட்ட தளங்களில் எமது பதிப்புப் பணியினை பல வகைகளில் செயற்படுத்தி இருக்கின்றோம்.

நூல் தொகுப்புப் பணி என்ற வகையில் இங்கு சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயல் வே. குமாரசாமி அவர்களுடைய கவிதைகளை தொகுத்து ஒரு தொகுப்பு நூலாக வெளியிடுவதே இந்த தொகுப்புப்பணி யினுடைய பணியாகும். கல்வயல் வே. குமாரசாமி என்பவர் ஈழத்தின் புகழ்மிக்க கவிஞர்களின் ஒருவர். தமிழ்க் கவிதைத் துறையில் மரபுக் கவிதைத்துறையில் ஆழமாக இயங்கிய ஒருவர். மரபுக்கவிதைப் புனைவுக்கு அப்பால் குழந்தைப் பாடல்கள், குழந்தைக் கவிதைகள் எழுதுவதிலும் வல்லவராக விளங்கி இருக்கின்றார்.

இவரது கவிதைகள் அனைத்தும் இதுவரை முழுமையாக தொகுக்கப்படாது இருந்திருக்கின்றது. எனவே இவற்றினை முழுமை யாக தொகுப்பதன் மூலம் எனது குழந்தைப் பாடல் மரபு, தமிழ்க் கவிதை மரபு என்பவற்றினை முழுமையாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினருக்கு ஏற்படும் என்ற நோக்கிலேயே இவரது கவிதைகளை எமது திணைக்களம் தொகுத்து வெளியிடுகின்றது.

இத்தொகுப்புப்பணியில் தொகுப்பாசிரியர்களாகவும், பதிப்பாசிரியர்களாகவும் எமது திணைக்கள கலாசார உத்தியோகத்தர்களான திரு முகுந்தன், திரு றஜீபன் ஆகிய இருவருமே செயற்பட்டிருக்கின்றார்கள் இப்பணியினை சிறந்த முறையில் மேற்கொண்டமைக்காக எனது பாராட்டுதல்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அவரது கவிதைகளை வெளியிடுவதற்கு அனுமதி தந்த வே. குமாரசாமி அவர்களின் துணைவியாருக்கும் அவரது மகனுக்கும் எமது நன்றிகள். மேலும் இச்செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியினை அளித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.பத்தினாதன் அவர்களுக்கும் இச்செயற்றிட்டத்திற்கு அனுமதியளித்த கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு.சத்தியசீலன் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி . அபிராமி பாலமுரளி**<br>
உதவிப் பணிப்பாளர்,<br>
பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ,<br>
வடக்குமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் புதிய திசைகளை அடையாளப்படுத்திய காலமாகும். பல இலக்கிய ஆளுமைகள் இந்தக் காலப்பகுதியில் தோன்றி தமிழ் இலக்கியத்தின் புதிய போக்குகளை அடையாளப்படுத்தினர். நவீன தமிழ் இலக்கியம் இவர்களது படைப்புக்களால் அலங்காரமானது.

இத்தகைய மரபும் நவீனமும் கொண்ட ஈழத்து படைப்பாளிகளில் முக்கியமாக அடையாளப்படுத்தப்படக் கூடியவராக கல்வயல் வே.குமாரசாமி விளங்குகின்றார். சாவகச்சேரி கல்வயலை பிறப்பிடமாகவும் சங்கத்தானையினை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் அஞ்சல் அதிபராகவும் பிற்காலங்களில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் வருகைதரு விரிவுரையாளராகவும் இருந்திருக்கின்றார். யாப்பிலக்கணத்தில் நன்கு பரீச்சயமுள்ள இவர் மரபுக் கவிதை புனைவதில் கைதேர்ந்தவராக இருந்திருக்கின்றார். பேச்சோலைப்பாங்கான கவிதைகளை புனைவதில் வல்லர். எள்ளலும், நையாண்டியும், கிராமத்து அழகும் இவரது கவிதைகளுக்கு அழகு சேர்த்திருக்கின்றன.

சுமார் முப்பதாண்டுகளுக்கு மேலாக கவிதைத்துறையில் இயங்கிய கவிஞராவர். பத்திரிகைகள், சஞ்சிகைகள் என பலவற்றில் இவரது கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. கவிதை, குழந்தைப் பாடல்கள், இசைப்பாடல்கள் என கவிதையின் பல தளங்களில் இயங்கி இருக்கின்றார் ஈழத்து குழந்தைக்கவிதை மரபிலும் அடையாளப்படுத்தக் கூடிய ஒருவராக இவர் விளங்குகின்றார்.

இவரது மறைவுக்குப் பின் இவரது கவிதைகளை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் எமக்கு ஏற்பட்டு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு இது தொடர்பான முன்மொழிவுகள் வைக்கப் பட்டபோது கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் ஆகியோர் இதற்கான அனுமதியினை தந்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் வே.குமாரசாமியின் கவிதைகள் அனைத்தும் இதுவரை முழுமையாக தொகுக்கப்படாமல் இருந்தது கவிதைகள் தொகுப்புப்பணியின்போது தான் அறிய முடிந்தது. எனவே இந்த தொகுப்பு முயற்சியில் இவர் எழுதி வெளிவந்த கவிதை நூல்களில் உள்ள கவிதைகளும், குழந்தைப்பாடல்களாக வெளிவந்த கவிதை தொகுப்புகளில் உள்ள கவிதை களும், இவரால் பல்வேறு காலங்களில் சஞ்சிகைகள், மலர்கள் போன்றவற்றில் எழுதிய கவிதைகளும் எம்மால் முடிந்தவரையில் தேடிச் சேகரிக்கப்பெற்று தொகுத்துள்ளோம் இவர் எந்தக் காலங்களில் எவை எவற்றில் எழுதி உள்ளார் என்ற தகவல் எவருக்கும் தெரியாத படியால் எம்மால் முடிந்தவரை தேடிப்பெற்று தொகுத்துள்ளோம். இது முழுமையான தொகுப்பு முயற்சி அன்று இன்னும் பல இருக்கலாம்.

இதுபற்றிய தகவல்களை தெரிந்தவர்கள் எமக்கு தருமிடத்து வருங்காலத்தில் அவற்றி னையும் உள்ளடக்கி முழுமையான ஒரு தொகுப்பாக அவற்றினையும் சேர்த்து வெளியிட லாம். அவரது இறுதிக்காலத்தில் மூன்று கொப்பிகளில் கவிதைகள் எழுதி வைத்திருந்து அவற்றினை நூலாக பதிப்பித்து தருமாறு என்னிடம் கேட்டிருந்தார். அவர் இருக்கும் காலத்தில் அது கைகூடாமல் போனது அவரது மறைவுக்குப் பின்னர் அந்த கொப்பிகளை அவரது வீட்டில் சென்று பார்த்தபோது அது கிடைக்கவில்லை ஆகவே அந்தக் கவிதைகளும் இங்கு தொகுக்கப்படாமல் இருப்பதை வாசகர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். இதனைவிட இவர் எழுதிய இசைப்பாடல்களும் எமக்கு கிடைக்கவில்லை.

எனவே கல்வயல் வே.குமாரசாமியின் இந்த தொகுப்பானது ஒரு ஆரம்ப முயற்சி யாகும். நீண்டகாலமாக கவிதைத்துறையில் இயங்கி நிறையவே எழுதி ஒரு படைப்பாளியின் படைப்புக்கள் அனைத்தும் எம்மால் முழுமையாக தொகுக்கப்படவில்லை என்பது ஒரு குறை யாகவே படுகிறது. ஆய்வுலகம் இதனை மன்னித்தருளவேண்டும். எதிர்வரும் காலங்களில் எமக்கு கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் அடுத்த பதிப்புக்களில் இவற்றினை இன்னும் முழுமைப்படுத்தலாம் என நினைக்கின்றோம்.

எமது இந்த முயற்சிக்கு அனுமதி வழங்கிய கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு.சத்தியசீலன் அவர்களுக்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இந்த கவிதைகளை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய அவரது குடும்பத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆய்வுப்பணியில் ஈடுபட்ட போது உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாது ஒரு கவிஞனின் படைப்புக்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டுள்ளது என்ற மனநிறைவடைகின்றோம்.

**பதிப்பாசிரியர்கள்**
சைவப்புலவர் கு.றஜீபன்
(கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சாவகச்சேரி)
**திரு.சிவ.முந்தன்**
( கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம் துணுக்காய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் விளக்கு

ஞாலப் பெருவெ ளிமீதிலே
நாடிடும் மீனிடை யோடிடும்
சாலவும் ஓங்கி வளர்ந்திடும்
சாய்ந்து குறைந்தும் மறைந்திடும்.

எங்கும் பரந்தக டலினை
இறைத்திடும் இன்ப வெளியினைப்
பொங்கிப் பெருகிடச் செய்திட்டே
பூரிப்பாற் பேரெழில் தந்திடும்.

தென்றலோ டின்பம் இணைந்திட்டே
தேமழை காணிற் கரந்திடும்
குன்றைத் தழுவிக் குலவியே
கோலப் பனிமல ராகிடும்.

கூடிய காதலர் இன்பமாய்க்
கொஞ்சி மகிழ்ந்திடும் வேளையில்
நீடிய நல்லொளி நல்கிடும்
நீலப்பு காருள் உறைந்திடும்.

கட்டிக் கலந்து களிக்கையில்
கம்மென் றொளியை உமிழ்ந்திடும்
வட்டக் கருவிழி மங்கையின்
வண்ண முகங்கண்டே யேங்கிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தெனத் தோற்றுமோர் நாளிலே
பாங்குட னேநிறைப் பொன்னுடல்
வங்கம் போலச்சில நாளிலே
வானிலே தோன்றிடக் காணுவோம்.

'இச்'செனச் சப்பினைக் கொட்டிடும்
இன்னமு துண்ண மறுத்திடும்
பச்சிளம் பாலகன் கண்டதைப்
பார்த்து மனமகிழ்ந் துண்கின்றான்.

மங்கை இரவை மயக்கிடும்
மாநிலத் தேயொரு மாபெரும்
தங்கத் தகட்டினை யாவனோ
தட்டித் தினமலை கின்றனன்.

விட்டுப் பிரிந்தநல் அன்பினர்
வெம்பியே நைந்து வருந்திட
சிட்டென வானிலே சீரொடு
சுற்றிச் சுழன்று சுடர்விடும்.

கண்ணிற் குளிர்மையைப் பாய்ச்சியே
கருத்திலி னிமையைத் தேக்கியே
வண்ண நிலவதன் சீரொளி
வான்விளக் காயதோர் பேரொளி!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிக் கனல் பதமற மறைந்ததும்

பங்கு னிக்கனல்
பதமற மறைந்ததும், வேனில்
மங்கை என்பவள்
மிளிர்ந்தனள், உலகுளோர் உவப்ப
எங்கும் இன்னிசை
குயிலெனும் குமரியர் பரவல்
பொங்க இன்புடன்
சிரிக்கிறாள் சித்திரைச் சிட்டு.

ஆடல் மங்கையின்
கரமெனும் தளிரதாம் துளிரின்
ஊடல் தீர்த்திட
எனவரும் மெருகுசேர் தென்றற்
பாடல் ஓசையில்
வெண்ணிலா ஒளியிலே கூடி
வாடல் ஒட்டிட,
தழுவிடச் சித்திரை வளைத்தாள்

பின்ப னிக்குளிர்
வெதுப்பினைப் பிறழ்த்திட, பின்னர்த்
தென்ப ளித்திடப்
பிறந்தனள் பெருமுணர் வூட்ட
பொன்க திர்வெயில்
பூத்திட வரும்இள வேனில்
தன்முனைப் பினால்
விடுக்கிறாள் திருமண அழைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திக் கூத்து

காசினி மங்கையைக் கொள்ளஇருட்
கண்ணன் அழைத்தனன் கண்ணினால் மெல்ல
ஆசையை நானம் குலுக்க - கன்ன
மாமெனும் வானம் சிவப்புக் கலக்க
பாசப் பெருக்க மரிக்க - எழில்
வாசனை மல்லிகை பார்த்துச் சிரிக்க
பூசனிக் கீற்றினைப் போலே - நிலா
பூத்து நிமிர்ந்தது வானதன் மேலே

ஆத்திரம் உற்றவன் ஆக - இருள்;
அள்ளி இறைத்தனன் வெள்ளியை: மேகப்
பாத்திரத்தில் அவை ஒட்டி - அவன்
பான்மையை எண்ணி நகைத்த; கைகொட்டி
சாத்திர காரர்கள் பார்த்தும் - அதைச்
சேர்ந்தனர் தங்கள் வரும்படிக் காக
கூத்துக்க ளாமிவை கண்டு வெண்
குறுநகை செய்தன முல்லையாம் செண்டு

வெள்ளி முளைத்ததை விண்ணில் - நில
மின்மினி தன்னின மாம் என எண்ணித்
துள்ளிப் பறந்தது வானில் - பெரும்
தூரம் கடக்கத் துடித்திட வீணில்
அள்ளிப் பறந்தது கொண்டு - ஓர்
அழகிய தூக்கணம் குருவியாம் பெண்டு
மெள்ள இணைத்திடக் கூட்டில் - ஒளி
பீட்டி அழுதது பாவம்! தன்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! யாது? ஓயாது!!

ஓ! யாது? என் றென்றே
ஒலியெழுப்பிக் கேட்கின்ற
ஓயாத சத்தமது
ஒன்றாகிக் கூடுகுது

காயாத மரங்களெனக்
கலங்குகின்ற ஏழைகளின்
கல்லடைசல் வாழ்க்கையினை
நன்னிலைக்குச் செல்லவைக்கும்

நேயக் கயிறதனின்
நெடுந்தொடர்ச்சி நீளுகுது
நாளும் உழைத்தலுத்து
நலன்காணா மக்களுக்கு

தூயவழி வருகின்ற
சாயலினைக் கண்ட எங்கள்
தொன்மைத் திறன்திரண்ட
தோள்வலிமை ஓயாது

...காமத்தின் நெடிபரவிக்
காதலெனும் பேருடனே
காலநெடும் பரப்பிற்
கட்டவிழ அச்சமின்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமரரிற் கேவலமாய்ப்
படித்தறிந்த பாவியர்கள்
போகின்ற மோகவெறி
வேகத்தைச் சிந்தனையின்
பூமலர உந்தியெழும்
புத்தெழுச்சிப் பாக்களது
போதை உலகத்துப்
பாதைமு ழுதும்பரவி

தீமைகளை மாய்க்கும்வரை
திண்டாட்டம் தீரும்வரை
தீராது நம்வேகம்
தீரமதும் ஓயாது

பேச்சளவில் இன்றுலகம்
காற்றிடையிற் காவோலை
போற்சலனம் எழுப்பலின்றி
ஆற்றும் பணியேது?

சீச்சீச்சீ என்னஇவர்
சின்னத் தனமாகக்
கூச்சமின்றி வார்த்தைகளைக்
கொட்டுகிறார் என்றாலும்

நோச்ச கருக்களையும்
நூறுநூ றாண்டுகளாய்ப்
போட்டடித்த னபற்றிப்
புளுகுகின்ற பொய்யர்களின்

கூச்சல் ஒழிந்து
தெளிந்த செழுந்தமிழில்
ஆக்கம் மிளிரும்வரை
அறிவுணர்ச்சி ஓயாது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மாக்கள்

புதிய தான உலகம் அமைக்கவும்
பூர ணச்சுட ரேற்றி மகிழவும்
விதி யனைத்தையும் மாற்றித் திருப்பிஎம்
வேக ஞான விளைநில மேடையில்
மதியினாலுயர் மானிட மேதைகள்
மல்க வுங்கொடு மைக்கனல் தீயவும்
சதியி னூடுந் திறமுட னேஎழுந்
தகைமை வாய்ந்தவர் நாம்புதுச் சிற்பிகள்

எழுது கோல் அவை எங்கள் கலப்பைகள்
எடுத்த தாள்உள தங்க விளை நிலம்
பழுதி லாதம திக்கொழு பூட்டிஇப்
பார் சிறப்புற நாளு முழுதெழும்
புழுதி யூடும் பொதுமை விளைமணிப்
பொற்றி ரள்அறி வாகிய நல்விதை
முழுவதும் வையகம் முற்றும் பரப்பிடும்
மூச்சு மிக்கவர் நாம்புதுச் சிற்பிகள்

சொற்க ளைப்பிழி வோமதிற் கற்பனைச்
சுளைக ளைப்பொதி வோமறி வற்புத
நற்சு வைவிளை வாசகனத் தேனையும்
நறும ணங்கமழ் சாற்றையு மேகலந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றி நன்மை யுணவைச் சமைத்திடும்
ஒப்பில் லாத அறிவு செறிப்பவர்
வெற்றி பெற்றெழ யாவரு முன்ணயாம்
விருப்பு டன்வழங் குங்கொடைச் சிற்பிகள்.

சத்தி யம்நற்ச மத்துவம் நன்னெறி
தரையெடுத்து நடந்து துடிப்புடன்
தத்து வத்தினை யொற்றிய பாதையில்
தனித்து நின்றுல கின்புறத் தாயென
ஒத்து ழைத்துயர் ஓவியப் பிஞ்சுகள்
ஊர்தொ றும்பல வோங்கி, வளர்ந்தெழச்
சித்து வித்தை எழுத்திற் செலுத்தியே
சீர் பெருக்கிடும் யாம்பிரம் மாக்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் புரட்டல்

என்னை நீர் காண வில்லை
என்பதால் இறந்தேன் என்று
சொன்னது தவறு; சொல்லிக்
கொல்வதும் தவறு மேலும்;
என்னுளே இருத் திருந்தோர்
இமயம்போல் வளர்ந்தோ அன்றி;
என்னுளே நுழைந்த மூந்தி
எள்ளுப்போற் சிறுத்தும் போனால்?

பொன்னுக்கும் புதிரா யாட்டும்
பெண்ணுக்கும் புரண்டு றுண்டு;
தன்னலக் குதிர்வி னாலே
தயவின்றி மண்ணுக் கூம்பிப்
பொன்னுயிர் பலி கொடுக்கும்
புவியிலே உமது வார்த்தை
சின்னன்தான் ஆனா லும்நீர்
செய்ததும் தவறே ஆகும்.

மாட்டுவால் போல மக்கள்
மண்டைகள் வளரும் போதிங்
கோட்டிலே எதனைத் தானும்
எழுதிநாம் காட்டி னாலும்
மூட்டலாம் புதிய வேகம்
என்பதென் மூளைக் குள்ளே
போட்டஅத் தடம்பு ரட்டப்
போகுதென் பொழுதில் கப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன்

சீருடைக் கனவை, சிந்தையின் தெளிவை
சேர்த்திடும் சொற்களின் செழிப்பை,
பாருடை யழகை, பல்லுயிர் வளர்வை
பாங்குடன் பொலிந்திடும் பொழிலை,
காருடை முகிலை, கடலிடை அலையை
காத்திடும் கதிரவன் ஒளியைப்
பேருடைப் பொருளாய், பெருமைசேர் மொழியாய்
பெட்புறச் செய்பவன் புலவன்

தென்றலினசை விற் சிந்தனையை விடுத்தும்
தீங்குயி விசைசெவி மடுத்தும்
குன்றினில் தவழ்ந்து குதித்திடு மருவி
கூத்திடும் மயில் ஒயில் கண்டும்
கொன்றிடும் அழகுக் குமரியர் பார்வை
கொட்டிடும் உணர்வினை அளந்தும்
நன்றென நயக்க நல்லெழிற் சொல்லால்
நலமுறத் தீட்டிய ஒருவன்.

பழமையுள் தோய்ந்து பண்புடன் மலர்ந்து
பாருள மட்டிலும் வாழச்
செழுமையுட் கலந்து, வழுவினைக் களைந்து
சொற்றொடர் சுவையுறச் சேர
அழகினை இன்ப அமுதினைப் பெருக்கி
ஆழ்கடல் முத்தெடுப் பவன்போல்
பழகிய சொல்லாற் பாகெனக் கவிகள்
படைப்பவன் கவிஞன் ஓர் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணத் துணைவி

செஞ்சு டர்விடுந் தீயி லும்உடல்
　　　　தீய்த்தி டும்உயிர் மாய்த்திடும்
கெஞ்சி டும்பிறர் நெஞ்சம் ஏங்கிட
　　　　மிஞ்சி டும்நெறி தந்திடும்
துஞ்சி டும்உயர் தூய நீதியைத்
　　　　தூக்கி முன்பு நிறுத்திடும்
மஞ்ச மாடிடும் மன்ன னும்உள
　　　　மாதிவள் நிலைக் கஞ்சிடும்

மாநி லத்தில மன்று யாவிலும்
　　　　மாண்பு மிக்கதும் ஆகிடும்
காநி வப்புறு கோயில் மத்தியிற்
　　　　காட்டி டும்உணர் வூட்டிடும்
கான கத்துள ஞானியர்களும்
　　　　காத்து நித்தமும், போற்றிடும்
மானம் இத்துணை மாண்பு டைத்தென
　　　　மாத்திரம் இவள் சாற்றுவாள்.

உள்ள மேடையில் மெல்ல மேலெழுந்
　　　　தாடுவாள் நடம் போடுவாள்
துள்ளி ஓடிடும் இன்பம் ஓய்ந்திட
　　　　துன்பி னைஇடை ஊட்டுவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி வந்திடு வல்ல நல்லுரை
ஆயி டின்அதை ஏற்றுவாள்
வள்ளம் ஓடிடு வெள்ள மேலலை
போல நெஞ்சிடை மோதுவாள்.

அன்பு கொண்டிட வன்பு கொண்டிட
ஆவ லைவளர்த் தாக்கியே
தென்பு கூறவும் தீரன் ஆக்கவும்
தீயனாக்கவும் வல்லவள்
பின்பு கோழையன் என்று கூறவும்
போதை யாள்வழி கூறுவாள்,
முன்பு நேர்ந்துள மூர்அ னுபவம்
முற்றுமே எடுத் தாற்றுவாள்.

காவி யச்சுவை காண வும்கலைக்
காட்சி யில்விழுந் தாழவும்
ஓவி யப்புனை பாவையர் மனத்
தொன்ற வும்நிலை குன்றவும்
ஆவி யைஇணைத் தீருடல்களை
ஓர்உ யிர்என மாற்றுவாள்
கூவி டும்குயில் கூற்றையும் ஒரு
பாட்டெ னக்செயச் சாற்றுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரமம் குறைகிறது

என்னுளோர் பாடல்
எழுந்து
கரைகிறது என்
அன்னையின் கண்ணீர்
அரிச்சுவடிப்
பாவனையில்
என்னுள்
ஓர் பாடல்
எழுந்து கரைகிறது.
விண்ணாதி விண்ணன்
எனுமோர்
விருதொன்று
மண்ணாகி
மாற்றார் மனக்கசப்பால் வீணாகப்
புண்ணாகிப் போச்சு
அதிலோர் புன்மை
புரள்கிறது
என்னுளோர்
பாடல்
இயைந்து குழைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டில்
பழைய கதை
ஒன்று
சக்காகி
போன சரிதம்
புரையோடி
சிக்கல் கரைந்து
குமிழி உடைகிறது.
பொந்தில் இருக்கும்
பொருக்கு
மரத்தவளை
எந்தக் கதையோ
இயம்பும்
புதுக் குரலின்
சந்தம் சிதைய
சலிப்பில் ஒருபாடல்
சிந்திக் கரைகிறது என்
சிரமம் குறைகிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

காதற் படகினில்
ஓடிடவும் தமிழ்க்
கன்னலெனச் சுவை
கூடிடவும்,
கூதற் பிரிவு
வருத்திடவும் பொருள்
கொள்மக ளாரை
வெறுத்திடவும்.

மோக வெறியினில்
மூழ்கிடவும் நெடி
முற்றும் நிறைந்திட
வீழ்ந்திடவும்
தேகப் பசியினைத்
தீர்த்திடவும் அறம்
சேர்ந்தநல் வாழ்வென
ஆர்த்திடவும்.

வாழ்வுப் பெருங்கடல்
தாண்டிடவும் துயர்
வஞ்சகப் பேரலை
ஆண்டிடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வு நெறியினை
மீறிடவும்பழி
தாக்கிடும் போதினில்
நூறிடவும்.

பேணி மழலையைப்
போற்றிடவும் வளர்
பெட்பு தனைமனம்
ஏற்றிடவும்,
நாணிக் குமரி
படைமொழியால் தினம்
நம்பி உலகம்
நடந்திடுதே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரம்

சருகு திர்த்து மரங்கள் துளிர்ந்தன
சமர சத்தின் சுவடு திறந்தது
பெருகு மோர் புது வேட்கை பிறந்தது
பெருமை ஒன்றதுள் ஓடி நிறைந்தது
வருக என்றதோர் வாசகம் வானெல்லாம்
வரவு கூறி அருவி சொரிந்தன
திருகு கூந்தல் குழல் மடவாரெல்லாம்
தேன் குழைந்த கவிதை யிசைக்கையில்

பருவச் சோடி திருகி முறுகவும்
பார்வை ஒன்று மருண்டு குழையவும்
உருகி யங்குணர் வோடிக் குதிரவும்
உண்மை பொய்மையின் பேதஞ் சிதறவும்
பெருகு மாவல் முதிர்ச்சி மயக்கினால்
பெண்மை யாண்மையின் பேதம் மறைந்தெழுந்
துருவம் ஒன்றென் றுணர்ச்சி அறிவிலே
உதயமான திங்கோர் புதுச் சித்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு

என்னைத் தொடர்ந்து வருகின்றாய்
என்கா லடியில் இணைகின்றாய்
சின்னக் குமரி நினைவலையிற்
செலுத்து மாசைப் படகைப்போல்
பின்னும் முன்னும் எனையேநீ
பிரியா வகையில் திரிவதுமேன்
என்னை அறியாச் சிறுவயதில்
ஏதும் பிழைகள் செய்தேனோ?

கொடிய வெயிலில் அடிதுடிச்சுக்
கூட வந்து முதவாய் நீ
நெடிய மரத்தின் கிளைநிழலை
நினைந்தே ஓடி ஆறுகிறேன்
விடியப் பனிபோ லாகும்நாள்
விரைவி லுன்னை அணுகாதோ
முடிய வாழ்நாள் என்செய்வாய்?
மூத்தாற் காத்தே இருப்பாயோ?

துயரக் குழந்தை பல நெஞ்சுள்
துடிக்கப் பதைக்கத் தூக்கத்தில்
அயரா திருந்தும் அலமந்தும்
அவலம் அமுக்கும் அவ்வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலாய் விளைந்த நினைவேக்கப்
போக்கிற் கிடந்து புழுங்குகையில்
அயலிற் றுணையாய் அமராமல்
எங்கே அப்பா! போகின்றாய்.

மரணம் வரைக்கும் வருவாயா?
மகிழ்ச்சி நிழலே! மறக்காதே!
சரணம் எனநான் உனதுறவைச்
சாளைக்கர் தடையும் நிலைபெற்றேன்
தருண மிதுதான் சங்கமமாய் -
தனிமை நிலைமை இனியேதும்
வருமா? இல்லை. விடமாட்டேன்
வாழ்வோம் சாவின் மடியிலுமே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் அடி

போது மடி போதும் விழியடி
போதும் அடி! போதும்

காதலென்றதோர் போதையை ஊற்றினை
வேதனை யென்றதோர் காவியம் ஏற்றினை
பாதக மென்றதோர் கூதலை மாற்றினை
ஆதரவற்றதோர் பேதையாய்த் தூற்றினை

போதுமடி போதும் மொழியடி
போதும் அடி! போதும்

பிஞ்சு மனத்திலே நஞ்சு விதைத்தனை
கொஞ்சி யணைத்தபின் வஞ்சித் துதைத்தனை
தஞ்ச மெனத்தர அஞ்சிப் பதைத்தனை
கெஞ்சு விழிக்கொரு வம்பு கதைத்தனை

போதுமடி போதும் பழியடி
போதும் அடி! போதும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத் தொல்லை

கோடை மழையென நீயும் - இடி
கொட்டும் புயலென நானும்
ஓடைக் குளிர்நிழ லாயும் - நீ
உவகை அடைந்திடும் போதும்
ஆடை இழந்தவ னாக - இவன்
அல்லலில் மூழ்குதல் சாலும்
சாடை புரிந்தது போதும் - பெரும்
சஞ்சலந் தந்தனை யேபோ!

வேகும் ஒருபிடி நெஞ்சம் - அட
வெந்து கருகட்டும் என்றே
ஆகும் படிஅடி! நீயும் - நிதம்
ஆறி இருந்திடல் கூடும்
சாகும் பொழுதினும் சிந்தும் - கவிச்
சந்தன வாடையில்; அந்த
மோக மயக்கத்தனாலே - குறை
முட்டி மனசுகள் நோகும்

போகட்டும்! போகட்டும்!! என்று - சிலர்
பொத்தல் அடைத்திட நாளும்
சாகட்டும்! சாகட்டும்!! என்றும் - எனைச்
சாவில் சரித்திட நானே
ஆகட்டும்! ஆகட்டும்!! என்று - வெறும்
ஆறுதல் தேடிய போதும்
ஆ! கெட்டும் ஆ!! கெட்டும் இந்த - ஆசைக்
குமரி அடங்கிறாள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகு மொழி பேசாயோ?

மீன்கூடை மேற் சுமந்தே
மெல்லச் செலும் நல் நங்காய்
துளைத்து விட்டாய் என்னுளத்தைத்
துள்ளும் கண் மீனாலே

உதிர்த்து விட்ட புன்னகையால்
உடல் வெதுப்பும் ஒய்யாரி
சதிராடும் இருட் கூந்தல்
தனம்த முவும் தங்கமே

கைத்தறியால் நெய்யாடை
கருத்ததனைத் தான்மயக்கப்
பைத்தல்போற் சட்டையுள்ளே
பளபளக்கும் இளமார்போ?

ஓவியம்போல் நீயசைய
ஒல்லியிடை தான்மசிய
தாவித் தென்றல் வருடத்
தளிர் போலப் போகின்றாய்

அள்ளி வைக்கும் கூறுதனில்
ஆகேனோ யான் மீனாய்
மெள்ளச் சுமக்கின்ற
மீன்கூடை ஆகேனோ?

புழுக்கத்தைத் தணிப்பதற்குப்
பூங்காற்றாய் மாறேனோ
பழுத்தஇன் காதலுடன்
பாகுமொழி பேசாயோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கும் இதயம்

பாடி இளமை நலம் - மிகக்
கூடி மனமகிழும் - இளஞ்
சோடிக் கிளிகளவை - சுகம்
நாடும் குளிர்மையது - கண்டு
தாங்க இதயமில்லை
உனை எண்ணி
ஏங்க இதயமுண்டு.

கற்பனை வீதியிலே - அன்று
அற்புத மானதொரு - புதுப்
பொற் சுடர்த் தேரினிலே - இருவரும்
சுற்றிட எண்ணியதை - இன்று
தாங்க இதயமில்லை
உனை எண்ணி
ஏங்க இதயமுண்டு.

பள்ளியில் முன்னொரு நாள் - உன்
உள்ளத்தை அள்ளிவைத்த - சிறு
கிளளுக் கடிதத்தை - இன்று
உள்ளத்தா லுள்ளுகையில் - அதைத்
தாங்க இதயமில்லை
உனையெண்ணி
ஏங்க இதயமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைச் சங்கிலியில் - உனது
சுந்தர ரூபமதை - செழுஞ்
செந்தமிழ்ச் சிந்தினிலே - முன்பு
சந்தமாய்ப் பாடியதை - இன்று
பாட இதயமில்லை
அதை எண்ணி
வாட இதயமுண்டு.

கூவும் குயிற்குரலை - நான்
மேவிக் கவி இசைக்க - என்
காவியம் நீயசைய - முன்பு
பாவனை பண்ணியதை - இன்று
தாங்க இதயமில்லை
அதை எண்ணி
ஏங்க இதயமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்வு

பள்ளியிற் கண்டெனை
உள்ளத்தாற் காதலர்
        பார்த்தே அழைத்ததனால் - விழி
        சேர்த்தே இழைத்ததனால் - நான்

உள்ளிடும் பாடலின்
கொள்ளைக் கருத்துக்கள்
        உண்மை விரித்ததடி - காதல்
        பெண்மை தரித்ததடி

புத்தகம் வைத்து நான்
நித்தம் படிக்கையில்
        சித்தத்தை விட்டதனால் - மனம்
        நித்தம் நினைத்ததனால் - நான்

வைத்த பரீட்சையில்
எத்தனை யோதரம்
        சித்தியடையவில்லை - காதற்
        புத்தியுடைய வில்லை

எங்களின் அன்பினை
மங்கள மாக்கையில்
        நண்பர் அறிந்ததனால் - எம்
        பண்பு செறிந்ததனால் - உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப் பரம்பரைத்
தங்கப் பயிருக்குப்
பங்கம் விளைந்ததடி - இடர்
இங்கும் நுழைந்ததடி

மென்மலர் கொய்கையில்
பின் னுள முள்முனை
என்னை உறுத்திடினும் - அவர்
என்னை வெறுத்திடினும் - என்

இன்னுயிர் அன்னவர்
தன்னைநி னைக்கையில்
எண்ணம் குளிருதடி - இளம்
பெண்மை வளருதடி

ஏற்றம் விரும்பியான்
ஊற்று அறிவினை
உன்னி வளர்த்ததனால் - தமிழ்க்
கன்னல் செழித்ததனால் - யான்

தோற்றிய தேர்வினில்
ஆற்றல் மிகப் பெற்று
வெற்றி அடைந்தேனடி - அன்பு
பற்றிப் படர்ந்தேனடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாத காரியம்

உருகி உலையும் உலகாய மேடையில்
உரிய பருவ வயலான பாதையில்
சொரியும் இனிய மதுவான பூர்விகச்
சுருதி இழையும் அமுதான காதலை;
பெரிய உலகில் ஒருவேளை யாருமே
பெறுத லுறுதல் இலதாகி வாழலாம்
பிரிய மிணைய நிலையாத போதெனப்
பொழுது நெகிழ வருநாளு மேகலாம்.

உறவை விடக எனஓது கின்றனர்
உரிமை உடைய எனதாசை அன்பினர்
அறிக இதனை எனவாடு கின்றனை;
அதிகம் இதனை உணரா துழன்றனை,
முறிய விடுதல் இலகாகு மென்றுநீ
முகிழும் இளைஞனை மலரான நெஞ்சினில்
எறிய முடியும் ஒருவேளை ஒன்றினை
எனினும்; உலகில் முடியாத காரியம்

புதிய புதிய துறைகோடி போகினும்
புரிதல் அரிது; தெரியாத தாயினும்
அதிகம் அதிகம் அகமீதில் ஆடிடும்
அருமை அனைய அருளான காதலை,
விதியை அனைய மனிதாபி மானமாம்
வெளியில் உலவி மரமாகி வாழினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிய அறிவு முனைவான போதிலும்;
முறையில் விடுதல் இயலாத காரியம்!
கொலையை உறினும், உயிர்போகினும் பெரும்
குவைய தனைய குலத் ஏகினும்; அரும்
விலைய துடைய பொருள் ஆழினும், சுகம்
விலகி அலைய விடுபாதை ஆயினும்
நிலையி லதென விலைகூறு காதலை;
நெருடி விடுதல் இயலாத காரியம்
அலையும் எதனும் எவராலும் ஆயினும்,
அரிது சகிக்க முடியாத காரியம்!

பழைய நினைவை முழுதாக இன்றுடன்
பகிடி நினைவில் பறிபோக; வென்றிடர்
முழுகி உழலல் விதியாகும் அன்றியும்
முழுதும் மடமை முதலாகும் என்று நீ
கழுவி விடுதல் கலை, யாகம் என்றனை
கருகி, மடிய அனலாகி நின்றுமென்
உழுத இதய வயலான மன்றிலே
உதறி விடுதல் இயலாத காரியம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல் புனைந்து வைப்பேன்

மங்கை நெஞ்சியின் தங்க மலரென
மாந்த எனை அழைத்தாள் - எழிற்
திங்கள் நெருங்கிய இன்ப சுகமதைத்
தேக்கி அவள் குழைத்தாள் - என்
அங்கையைப் பற்றிநல் லன்புட னேபுது
ஆவலை மூட்டி விட்டாள் உடன்
இங்கித மானதோர் இன்ப அமுதினைப்
பொங்கி அணைத்தளித்தாள்.

சோம்பிக் கிடந்த என் தீங்கனல் ஆண்மையைத்
தூண்டிச் சுடர வைத்தாள் - மணம்
கூம்பிக் கிடந்த மலரினில் வண்டொன்று
குந்திய செய்கை யொத்தாள் - என்
வீம்பினை, வீரத்தை வெற்றியை வையகம்
வேண்டும் வழி சமைத்தாள் - அதில்
நாம் பெரும் தீரர் பரம்பரை என்றநற்
பாதைதனை அமைத்தாள்.

வந்து நெருங்கி நெருஞ்சி மலரதன்
வடிவு சுவைக்க வந்தேன் - அடி
நொந்து வருந்திஎன் சிந்தை கலங்கிட
நோயின் அடிபணிந்தேன் - தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொந்தளிக் கும்கடல் அந்தரிக் கும்உயிர்க்
கோலத்தை ஆக்கி வைத்தாள் - பிறர்
நிந்த னைக்கும் பலர்கிண் டலுக்கும்
பெருந்துன்பத் தில்வேகவைத்தாள்

மூடிக் கிடந்த இதய விழியினைச்
சாடித் திறக்க வைத்தாள் - நிதம்
வாடிக் கலங்கிடும் கோடி மனிதரைப்
பாடிச் சிறக்க வைத்தாள் - அவர்
நாடி அலைந்த பல் கோடி உரிமையை
நாடக் கொடி பிடிப்போன் - பிறர்
மூடத் தனங்களை ஓட்டப் புதியதாய்ப்
பாடல் புனைந்து வைப்பேன்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா ஆவாய்

நீயிருந்து சிரிக்கின்றாய் நினைவுகளின்
முனைவுகளில்; நெருக்கி ருட்டிற்
பேயிருந்து பெருமூச்சு விட்டலறப்
பிணைப்புற்றங் கதனோ டொன்றாய்
வாயிருந்தும் அலறாமல் வடிவழிந்து
சருகாகி மண்ணே யுண்ணத்
தாயிருந்துந் தனியானேன் தவிக்கின்றேன்
தழலான எண்ணக் காட்டில்

ஆடவிட்டாய் பாசவிழிச் சரடுகட்டிப்
பொய்சலனத் தோப்பி லென்னை
ஓடவிட்டாய் இன்றெல்லாம் உளவிருட்டில்,
ஒவ்வொன்றாய் ஊமைப் பாட்டைப்
பாடவிட்டாய்: அப்பாவாற் பாடையொன்றைப்
பரவவிட்டாய் நித்த முன்னைத்
தேடவைத்தாய் திசைமறித்தாய் தினவழித்தாய்
திகைக்கவைத்தாய் ஏக்கச் சூட்டில்

மயக்கவழி பல தெரியும் மதுவூற்றி
விழிகளினால் இன்பஞ் செய்தும்
தயக்கமிலா தெனதுவிரல் இனியதமிழ்
செய இதயத் தந்தி மீட்டி
மயக்கமுற வைத்து விட்டு மனக்கதவை
மூடிவிட்டாய் முடிவில் லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயக்குகைக்குள் பதஞ்சிதைந்து புலம்பியழத்
துன்பமென்னும் படுக்கை போட்டாய்
முற்றாத இளமனதில் முதிராத
உவகைகளில் முகிழ்க்க வைத்தாய்
வற்றாத உணர்வுகளின் வரிகளிலே
வடிவமைக்க வழிச மைத்தாய்
உற்றாரு முலகோரு முனை நினைத்தே
எனைவெறுக்கும் ஊன மான
சிற்றாழ உறவுக்குள் எனைவிழுத்திச்
சீழ்வடிய விட்டுவிட்டாய்.

கொஞ்சாமற் கெஞ்சி தம் எனது தமிழ்
நெஞ்சிடையே கிளைக ளோச்சிப்
பிஞ்சாகிப் பெரியதொரு காயாகிக்
கனிந்தாய்; தேன் ஊறும் போதில்
நஞ்சாகி மாறிடுவாய் நாளெல்லாம்
கொன்றிடுவாய் என்று ணர்ந்தால்
துஞ்சாமல் துயிலுணரா வாழ்வொன்றைத்
தொடர்ந்திருப்பேன் என்றோ ஓர் நாள்

நல்லவளாய் நீ வாழ நயமாக
என்மீதா பிழைபி டித்தாய்
வல்லவளே நீ வாழ வேண்டுமடி
அவ்வாழ்வின் வாடை வீச்சில்
மெல்லமெல்ல நான் கசங்கி மெலிவடைந்து
பொலிவிழந்து மினுக்க ழிந்து
வல்லியளுன் கொல்லவிழியால் வதைப்படைந்த
வடுத்தெரியச் சாக வேண்டும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி

கம்பி யிரண்டி லதிர்ந்து
கனிந்த மொழிகளினால்
வெம்பிக் குழைந்து விரகம்
விளைந்து விதிர்விதிர்த்த
நம்பி யுமந்த நங்கையும்
நெஞ்சம் நெகிழ்வுற்றார்
கம்பிக ளூடே கதைக
ளினாலே மணமுற்றார்

வார்த்தை யனைத்தும்
வாரியணைப்பார் வாழ்வென்ற
நேர்த்தி செறிந்த
நீண்ட பெருந்தொலை நின்றெண்ணார்
கீர்த்தி மிகுந்த
காதலைப் பேசியும் கிளர்வுள்ளார்.
பார்த்தறியாதார்
பாடல் புனைந்தார் பலகாலம்

வேக மெழுந்து
வளர்ந்து கதித்தது வீரியமாய்த்:
தாகமடங்கத்
தவித்து முயங்கத் தலைக்கேறும்
மோக முதிர்ச்சியின்
உந்தல் உலைக்க உரையெல்லாம்
ஆக விளைந்தன
ஆம்: அவை "நன்றாய்த் தொலைபேசி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரங்கம்

உயிரிடை அழகை உணர்விடைக் கனிவை
உலகினில் இயற்கையின் உவப்பை
பயிரிடைக் கதிரை அதனிடை மணியைப்
படைத்தவன் நடத்திடும் செயலை
குயிலதன் குரலைக் குமரியர் நிலையைக்
கொடுவெயில் குளிப்பவர் தொழிலைத்
துயரிடை மூழ்கித் துடித்தறி யாதார்
துளித்துளி நிகழ்வையும் சுவைப்பர்

தேனதன் பிழிவை அதனுடன் அமுதை,
நீங்களும் பதன்முதற் சாற்றைத்
தானுடன் சேர்த்துத் தருகினும் மேலாய்த்
தமிழ் செயும் தளிர் குழை குயிலின்
ஊனுடை வாழ்வின் உள்ளிடர் உணரார்,
உண்மையில் ஓம்புவார் இன்றிக்
கானிடைக் காக்கை கடத்திய செயலாற்
கலங்கிடும் அதன்குரல் அழுகை.

பூப்பினாற் பொலிந்து புதுமணங் கமழ்ந்து
பொதுப் பொருள் என்றுவண் டினங்கள்
மோப்பினாற் கலங்கி முள்ளிடைச் சிரிக்கும்
முழுவதும் மதுநிறை மலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பிலா வாழ்வை, காலையில் மலர்ந்து
கலைமெரு கிவைகெட மாலை
மூப்பினாற் றளர்ந்தார் போல் முடி வாகும்
முழுமையில் வாழ்வறி வாரோ?

உள்ளிடைத் துயரை உணவிலாக் குறையை
உரைத்திடார் உயர்ந்தவர் வெளியில்
தள்ளுதற் கரிய வறுமையிற் கூடத்
தம்நிலை திரிந்திடார் பார்ப்போர்
தெள்ளிதி லுணரும் திறமையற் றவர்கள்
தெரிந்திடும ஆற்றலும் இல்லை
உள்ளதை உரைப்பில் உலகவர்க் கிந்த
உளநிலை புரிவதற் கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டில்

விட்டிலது விட்டில் விளக்கொளியை
விட்டிலது விட்டில்
பட்டுடலம் கெட்டும் படர்சுடரை
விட்டிலது விட்டில்.

ஆசை மிகவே வளர
கூசுமெழி லேகவர
நேசமன மேதளர
மீளமயக் கேவளர - விட்டிவது

ஆருயிரையே காக்கா
தவ்வழகையே நோக்க
தீராத்தீக் காமத்தால்
தெரியா மலோஒ கண்கள் - விட்டிலது

தன்னினமே தானழிந்தும்
அந்நிலையே தானறிந்தும்
பொன்பொருளென் றேநம்பி
பொய்மையுண ராமலந்தோ - விட்டிலது.

ஆறறிவு மானிடரில்
ஆர்வமிகு காளையர்கள்
தேறும் நிலைதெ ரிந்தும்
திண்டாடு தல்போல

விட்டிலது விட்டில் - விளக்கொளியை
விட்டிலது விட்டில்
பட்டுபடலம் கெட்டுத் தன்னுயிரை
விட்டதுவே விட்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பும் மலரும்

**அரும்பு:**

செங்கதிர் ஒளி சிந்திடும் போதிலே
சேர்ந்திடும்நற் பொழிலிடைத் தோன்றினாய்
பொங்கிட எழிற் புன்னகை யோடுநீ
பூப்படைந்து புதுமணப் பெண்ணென
இங்கிரு ந்திட எங்கிருந் தோவந்த
ஈடில் லாத்தலை வன்னுனைக் கண்டனன்
மங்களத்துடன் நன்மணம் கொண்டிட
மங்கை நீ செய்த மாயத்தைச் சொல்லடி

**மலர்:**

இச்சை நல்கிடும் இச்சிறு வாழ்வினை
எண்ணி யேங்கியும் இத்தல மீதிலே
பச்சிளம் புதுப் பைங்கிளி நீயடி
பாழ்படும் இந்தப் பாரிடை நாளையே
எச்சிலே றவே "இச்" செனத் தேனினை
ஏப்பமிட்டுன் இதழ்சுவைப் பாரடி
மிச்சமேனடி சொல்லிடு வானினி
மீதி நாளை அறிந்திடு வாயடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவு

புத்தம் புதுமலர் நான் - பொல்லாப்
போதை மதுக்களம் நான்
எத்தனை வண்டு வரும் - ஏனோ
ஏங்கிக் கலங்க வைக்கும்.

வைத்த விருந்தமுறை - அவையும்
வாங்கி மறப்பதுமேன்
முத்தம் வினைப்பதுமேன் - அழகு
முழுமை சிதைப்பதுமேன்?

சாறு பிழிந்து விட்டார் - எழிலுடன்
சக்கை இருக்கிறதே
நீறுபட வெயிலிற் - கருகி
நெக்கி உதிர்கிறது.

நாறுங் கலைமணத்தைப் - பிறர்க்கு
நாமெடுத் தூட்டவரின்
ஊறு படநேரும் - இதுவோ
உண்மை உலகறியா.

உக்கி எனதுடலம் - மரத்தின்
ஊட்டப் பசளையென
தக்க முறையினிலே - அடியில்
தாக்குக் கொடுத்திடுவேன்

மிக்க மனத்துடனே - மகிழ்வாய்
மேலும் உதவிடவே
“உக்கி”, த் “தியாகி”யென - யான்
ஒன்று கலக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதியோ?

குப்பை மேடது கொண்டுள நல்லெரு
குறைவி லாநிறை பெற்றுள போதினும்
வெப்பம் மிஞ்சிய காரணத் தாலது
வீணி லேகடல் மேல்மழை யானது
தப்பி அங்கொரு றோசுமலர்ச் செடி
தவங்கி டந்து துவண்டு தளருது
செப்ப மகாநீர் ஊற்றுநர் இல்லையேல்
சீர்நி றைமலர் பூத்துச் சிரிக்குமோ?

குளிர்நி லம்மிது நல்ல பசளையும்
கொண்ட தாயினும் வேண்டிய பொதெல்லாம்
தளிர்ஏ றிந்தெழும் தன்மையைத் தாங்கிய
தண்டிலும் நிறை நஞ்சுறை முட்செடி
வளர எத்த னையோவித மாகவே
வழிவ கைகள் வகுப்பவர் பற்பலர்
அளவி லாத வழிவகுத் தாக்கினும்
அந்த நஞ்சும் அமுதென மாறுமோ?

படைத்த வன்அந்தப் பாவை கடைவிழிப்
பார்வைக் கஞ்சியோ தான்தவம் பூண்டனன்?
சடைக்க ருங்குழல் சோர்ந்து தளர்வுறச்
சபல மின்றி வருகிழ வன், பணம்
படைத்த தால், அவன் பக்கல் அடைகிறான்
பருவக் காளையோ பார்த்துத் துடிக்கிறான்
கடைத்த லைப்படு காசு பொருளினால்
கன்னியின் நிலை உன்னத மாகுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க(வி)தையானாள்

உன்னை வைத்துக் கவிதை எழுதலாம்
என்னை வைத்தினி என்ன எழுதலாம்!
உன்னை வைத்துயர் ஓவியந் தீட்டலாம்;
என்னு ணர்வினால் என்ன இயற்றலாம்?
அன்னை யாய்நீ அகிலம் அமைக்கலாம்;
அமைதி யான யான் என்ன சமைக்கலாம்;
உன்னை வைத்தோர் க(வி)தை எழுதலாம்
என்னை வைத்து இனி என்ன எழுதலாம்?

கள்ளி னாற்புதுக் காட்சி நுகரவும்
கனவி லேயுனைக் காணல் அகலவும்,
உள்ளி னாலதைத் தள்ள முடியலை;
உவந்து வந்தென் உணர்வு கழிக்குதே
தள்ளி னாவித் தரணி யிலேயிவன்
தனித்து வத்தின் கொடியை உயர்த்தலாம்
எள்ளி னாய்இதை; ஏங்கும் நிலைமை
எப்ப டிஇனிக் கண்டு சுவைக்கலாம்.

அற்புதம் என்னும் வாஞ்சயை ஊற்றினாய்;
அந்த ஆழ்விலே போதையை ஏற்றினாய்;
கற்ப னைக்குட்பொற் கோயிலைக் காட்டினாய்
கடவுள் ஓடவோர் காவியந் தீட்டினாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கவா அன்பை வாங்கிட யாருளர்....?
விடிவி லாதவோர் பாதையிற் போகிறேன்
நிற்கலா மென நெஞ்ச மலைக்கினும்
நீண்ட தோர்பெரு மூச்சுடன் போகிறேன்

ஒப்பிலாதவோர் உன்னத சத்திய
ஊற்றுக் கண்ணை யடைத்ததும் என்னவோ?
அப்பப்பா அஃத கத்தை மறைத்ததே!
அந்த ஆசையே நாளை நிறைந்தது
எப்பெப்போ இதையான் மறைப் பேனென
இடிவி ழுந்தென தெண்ணஞ் சிதைகுதே
தப்பப்பா எனநீ சொல்லி எகினும்
தளிர்த்த ஆசை தரையில் உயர்குதே!

ராதை கண்ணன் சிலைகளும், ஒவிய
ரம்மி யம்மும், உணர்வெனும் போதையில்
மோதி மோதி முழுவுரு வாகிறாய்;
முள்ளி லேமலர் நீநின்றெங் கேகிறாய்
போதையா இது புத்தகப் பாடமா?
போன பாதை திரும்ப முடியுமோ?
காதை போலிதைக் கூறிடக் கன்னியே,
காலமோ என்னைக் கைவிட்டிங் கேகுதே!

வேத னைக்குள் அமிழ்த்தும் விளைவிலே
விருட்ச மாகி விழுதுகள் பாய்ச்சிஓர்
மோதி ரத்தில் முகிழ்த்து முறிந்தவெம்
முடிவி லாதவோர் வேதனைக் காவியம்
சூதி லாஅது சிக்கிச் சுழன்றது
சூட்சு மத்தை அறிந்திட முந்தினேன்
ஏதடீ அதன் இன்றைய தன்மையென்
றேங்கி னேனதால் இக்கதிக் காகினேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலையூடு பகந்தரை போல் விழி
பாய்ச்சி என்மனப் பந்தலில் முல்லையாய்,
கோல மென்பதற் கோர்அணி யாகினாய்;
கொஞ்சினாய், நினை வோடையில் நீந்தினாய்
வாலி பத்தின் சுழிப்பில் அலைப்புறும்
வண்ணம், மோதிரக் கையை உதறிஎன்
கால எல்லையில் லாத கதையினைக்
கவிதை யாக்கிக் குறுக்கி விட்டாயடீ!

சொற் களிற்புதுச் சோக மிழைந்திடச்
சுந்தரக் குவை செய்திட எண்ணியும்
அற்பு தத்தை அமைக்க முடியலை
அகன்றொ துங்கிய ஆவல் உலர்வினால்
கற்ப னைக்குகைக் காரிருள் மூழ்கியான்
கவிதை யாக்கி இருந்து கலங்கிட
நிற்கி றாய்சிலை யாகிஎன் நெஞ்சிலே,
நீயு மாஇங்கே ஓர் கவியாகினாய்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவி

செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வம்
எல்லோரும் தேடுமொரு
செல்வம் என வந்தேன்
கன்னி அவளொருத்தி
கட்டுடலைப் பெற்றிருந்தும்
பின்னி இழுக்கின்ற
பேரழகே இன்மையினால்
செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வ

காளை ஒருத்தனவன்
காசாளைக் காரன், அக்
காளை மணமுடித்தான்
கன்னிதனை அணைத்தான்
செல்வம் என வந்தேன்
எனவே இனிச் செல்வேன்

என்னால் எல்லா முண்டங்(கு)
எனினும் அவர்களுக்கோ
பொன்னிலும் மேலாம்
புதல்வர்ப் பேறின்மையினால்
செல்வம் எனவந்தேன்
ஆமாம் யான்தான் செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தம் பலஆடித்
தெய்வம் பலவேண்டி
சேர்த்த எனைக் கரைத்தார்
சேர்ந்தார் பெற்றார்பிள்ளை
செல்வம் என வந்தேன்
எனவே இனிச் செல்வேன்

புத்தியிலாப் பிள்ளையென
செத்தார்க் கழுவது போல்
நித்தம் புலம்புகிறார்
நீளும் துயர் துடைக்க
செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வேன்

வித்தை புகட்டுதற்கு
வேண்டும் ஒழுங்கெல்லாம்
சொத்தாம் எனைவைத்துப்
பிய்த்துப் பிடுங்குகிறார்
செல்வம் என வந்தேன்
எனவே இனிச்செல்வேன்

மாடு மனை மக்கள்
மாண்பு புகழ் எல்லாம்
தேடி அலைகையிலே
திரை கொணர்ந்து சேர்ந்தாற்போல்
செல்வம் என வந்தேன்
ஆமாம் யான் தான் செல்வேன்

ஆசைக் கடிமையாய்
அல்லல் பலவடைந்தே
வேசை என என்னை
வைதே வெறுத்து விட்டார்
செல்வம் என வந்தேன்
எனவே இனிச் செல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்

நான் அழிந்து விட்டேன்
நலங்கிக் கசங்கி விட்டேன்
ஊன்கரைந்து போகா
உடலில் உயிர் இருந்தும்
வான் விரிந்த மண்ணில்
வடிவந் தெரிந்தாலும்
நான் அழிந்து விட்டாலும்
நாட்டில் உலவுகிறேன்

பலவீனர் ; அந்தவெறும்
பச்சை வெறியருக்கோ
அலசி அறியார்கள்
அழிக்கவே தான்தெரியும்
பலவீனர் அந்தவெறிப்
பச்சை விசரர்தம்
தலையைய ழிப்பார்கள்
உலகையுமே தாமழிப்பர்

அந்த நிலையில்
அறியாப் பராயத்தில்
அந்தரத்தில் ஓடியே
ஆம் ; "நான்" அழிந்துவிட்டான்
இந்த உலகில்
இருந்தாலும் உம்மிடையில்
முந்தி அழித்து விட்டேன்
முந்தி அழிந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழினி

என்னை ஆளுமோர் இனிய யாழினி,
மென்மை உன்மன விரல்க ளால்இளங்
கன்னி; என்உளக் கவிதை யாழினை
உன்னி உன்னிநீ உலகை ஆட்டிறாய்

கங்கு லும்மனக் கவலை யுங்கெட
இங்கி தம்எழுந் தெங்கு மோங்கிமேல்
மங்க லந்திகழ் மமதை மிஞ்சிஎம்
சங்க டங்கெடத் தமிழி சைக்கிறாய்

முடிவி லாததோர் அடியெ டுத்துநீ
துடிதுடித்திட; உரிமை வேட்கைகள்
படையெ டுத்திடும் நடைதொ டுத்துநல்
விடைகொ டுக்கிறாய் விழல்க ளுக்குமே

விலங்கு டைந்தற விளைவு மிச்சவுங்
கலங்கு நெஞ்சிலே கவிதை யாற்றிறங்
குலங்கள் நாமெனுங் குதிர்வு விஞ்ச; ஐம்
புலன்க ளாற்புது வுணர்வு வார்க்கிறாய்

அன்பின் சந்நிதி அகமி சுக்கனிந்
தின்ப வெள்ளமாம்; இனிய நல்லிசைத்
தென்றல் ஊதிட இதயத் தந்திியை
நின்று நின்றெழில் நிதமும் மீட்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ப னைச்சரக் கவிதை மாலைகள்
அற்புதச்சுவை அழகு கொஞ்ச நற்
பொற்க ரத்தினால் கவிதை யாழினைத்
தற்சி றப்புடன் தழுவி மீட்டிறாய்.

இதய வாணியென் இதய யாழினைப்
புதிய பாணியிற் பணிய வையகம்
சுதியி தோர்நறுஞ் சுகம்ம லிந்தெழப்
புதிய மோகனக் கவிதை பின்னுறாய்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்

மின்னுள் ஒளியாய்
பொன்னுள் எழிலாய்
என்னுள் நீயாய்
உன்னுள் நானாய்
கன்னற் சுவையாய்க்
கலந்த பின்னர்
என்னைக் கேட்டால்
நானார் நீயார்?

தீயுள் தூசாப்
தூகள் துகளாய்
வாயுள் மொழியாய்
வரியில் வடிவமாய்த்
தாயுள் மனமாய்த்
தனித்த அன்பின்
தூய கலப்பில்
நீ யார்....? நானார்?

பாலுள் நீராய்
நீர்சேர் நிலனாய்
நூலுட் பொருளாய்
சீருள் அசையாய்
காலக் கொடுமை
கலக்க அலைந்தும்
வாலைக் களிப்பில்
நானார் நீயார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கை

தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
திங்கள் வதனம் பொங்க - நெஞ்சைத்
திருடிக் கொண்ட மங்கை
மலரதன் இதழென
மணமதுக் களமென
கரும்நிறை குடமவள்...

தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
இளையவர் மனதினில்
இனிதென இணைந்திட
வளையலு மிலங்கிட
வலைதனை விரிப்பவள்...

தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
விழிமொழி உரைசொல
விரல்தரை கிறுக்கிடும்
மொழியவை கிளியெனும்
பொழிலிடைக் குயிலெனும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
முனிவரும் தனிநிலை
முறைகெட, நிலைகெட
கனியிதழ் வெறிதரக்
கருத்தினைக் கலக்குவள்...
தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
அறிவறி புதல்வரை
அழகுறை மழலையை
பெறுதலிற் தருதலிற்
பெருமையை யடைந்தவள்.
தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
அழிக்கவும், அமைக்கவும்;
அரிதெனும் பழமையைச்
செழிக்கவும், சிதைக்கவும்
செகத்திலோர் உறைவிடம்...

தங்க மேனி மங்கை - இன்பத்தை
தருக்கிப் பெருக்கும் மங்கை
கருவிழி தருமொரு
கடைசலின் மயக்கத்தில்
தெருவிலே திரிபவர்
தியங்கவும் தயங்கவும் .....

தங்க மேனி மங்கை - இன்பைத்
தருக்கிப் பெருக்கும் மங்கை
சிங்கக் காளை நெஞ்சைப் - பின்னிச்
சிதறடிக்கும் மங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சுற்றுகிறாளோ?

ஆட்டிப் படைக்கிறாள்
ஓட்டிக் கலக்குகிறாள்
அப்பப்பா! என்ன அநியாயம்? நிதம்
வாட்டிப் பிடிக்கிறாள்
கூட்டிக் கழிக்கிறாள்
வப்பப்பா! எதுவோ நி யாயம்? வெறி

ஊற்றிச் சிரிக்கிறாள்
தூற்றிக் கிறுக்கிறாள்
உள்ளத்தில் என்ன கிளர்வோ? எனை
ஏற்றிப் பழிக்கிறாள்
போற்றித் தெளிகிறாள்
என்னப்பா! என்ன விசரோ? மான்

எம்பிக் குதிக்கிறாள்
வம்புக் கிழுக்கிறாள்
என்னையே ஏன் சுற்றுறாளோ? யான்
நம்பிக் கலங்கிட
வெம்பிச் சரிந்திட
நாட்டிய மாடுகின்றாளோ? மனத்

தோட்டக் கிணற்றிலே
பாட்டினை மீட்டுகிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்கடிப் பேனென்ற வீறோ? அடி
போட்டுந டக்கையில்
காட்டும் விழிக்குறி
போரறை கூவலே தானோ? உளந்

தொட்டுத் தெறிக்கிறாள்
தட்டிப் பறிக்கிறாள்
தோளணை கொண்டிடத் தானோ"? தொட
எட்டிப் பறக்கிறாள்
வெட்டிச் சரிக்கிறாள்
என்னவோ? நாணம் இது தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைப்பு

பாட்டைச் சுவைப்பதுபோற்
பாசாங்கு பண்ணும் அயல்
வீட்டுச் சிறுகுமரி வாடீ! - நெஞ்சில்
நீவிதைத்த அன்பெடுத்துப் போடீ!

பூட்டிக் கிடந்தமனக்
கோட்டைக் கதவினை ஏன்
மீட்டுந் திறந்தனை நீ கூறு! - வெறுஞ்
சாட்டுக் கதைகள் வேண்டாம் வேறு!

வற்றிப் பொருக்கெழுந்த
வஞ்சத் திடைகிடந்தேன்
சுற்றிச் சுழன் றருகு வந்தாய் - என்ன
சொக்குப்பொடி தூவிடச் சென்றாய்

வெற்றிப் பெருமிதத்தில்
வெட்கித் தலைகுனியும்
குற்றம் புரிந்தாலுத் சுற்றம் - சும்மா
குறை கூறு மென்றாப தற்றம்.

சொக்கத் தமிழ்க்கவிதைச்
சொற்சித்தி ரம்வரையும்
பக்கம் புரட்டி விட்டுப் போனாய் - ஏக்கம்
பற்றிச் சுடரவிட்டென் னானாய்?

துக்கந் துளிர்த்திதயம்
நித்தம் கசிந்து பதம்
உக்கிக் குமைந் துலரலாமோ? - இந்த
ஊரார் நகைக்க வைக்கத் தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பச் சுமை

கூண்டினிற் பைங்கிளிக் குஞ்சென வாழ்ந்தவள்
கோலநி றம்விளர்ப் ப,
தூண்டுமு ணர்வுகள் நீண்டிட முன்னவள்
தோன்றினன் ஓர்எழி லன்
வேண்டிய தோஅவன் விம்முமு ணர்வினை
வித்திட எண்ணிய; தூ
ஆண்டவ ளோர்பெரும் அன்பெனத் தன்னுளத்
தன்றுமு தல்நினைந் தாள்.

செங்கயல் ஆயின பங்கயத் தேயுள
செயரி மென்விழி; வெண்
பங்கய மெல்லிதழ் ஆயின செவ்விதழ்
பட்டுடல் பற்றினன்; தண்
தங்கிய தன்மைத கர்ந்தன வெம்மையில்
தங்கினர், ஒன்றினர்; விண்
எங்கெனத் தேடினர், மங்களம் ஆடினர்,
ஏகினர் புத்துலகு,

ஓடினான்; "வந்தனன்" "இப்பொழு" தென்றுரைத்
தோம்பினள் இன்பதைப் பொன்;
ஓடின ஐயிரு திங்களும் இன்பமும்
ஊறிவ ளர்ந்தது; மென்
நீடிய தன்னுடல் மீதுசெ றிந்துள
நீள்உயிர் இன்பதனை
கூடிய ஓரிராக் கொண்டனள் கையினில்
கொன்றதே இன்பச்சு மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுபயன்

அழகேயொழு கெழிலோவிய
மெனவேயுள ஒயிலை
பழகாதிள வுளமானது
படும்வேதனை சிலவோ?
கிழமாம்மனங் கிளர்ந்தேநெடும்
பிழையேயுறு நெறியோர்
வழுவாநெறி யிளங்காளையைக்
குறைகூறுதல் தகுமோ?

சுடரேவிடு மொளிமீதுளம்
உறவாடிடச் சலபம்
தொடலால்உடல் முதலாமுயிர்
உறுமே அழவுறுமே
கொடுவார்களே இதுபோல்உடற்
கிளர்வாற் றினமலையும்
மடமாதரின் புறமோடியில்
மனமோடிடு மிளையோர்

அறிவாலுயர் உலகோருறை
அமைவாம் பெருங்குலமே
சிறியோர்முதல் பலபேர்களும்
பெறலாம்நிறை பயனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவாயுறை பொருளையடுத்
துரையீர் மிகைமிகையாய்
நெறியீதென நெறியீதென
நிதமூட்டுதல் கடனே!

எதடா!நெறி எதடா! குறித்
தெழலாம்! பொருளிலையோ?
முதலானதொர் முதலாதியில்
தொடடா! குறித்தெழடா!
புதுவாழ்வுறத் தகுமாறொரு
செயலே புரிதினமே
முதுநூன்மொழி பொதுநூலொடு
உணர்வாலுறு பயனே.

சலபம்: விட்டிற்பூச்சி

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையில் கற்று உய்வோம்

கோடை காலக் கொடு வெயிலில்
குளிர்ச்சி இல்லா நிலம் அதனில்
மூடை யாக நெல்லினைநாம்
முனைக்க விதைத்து முயன்றாலும்
சாடை யாக முளைத்தாலும்
தக்க பயனைத் தந்திடுமோ?
பாடு பட்ட போதிலுமே
பயனைப் பெறவும் முடிந்திடுமோ?

பருவம் தவறிப் பயிர்செய்தால்
பயனே கிட்டாது எனவேயாம்
பெருமை அறிவைத் தருகின்ற
பெரியோர் போற்றும் பெருஞ் செல்வம்
அருமை கிடைத்தற் கானதுவாம்
அரிய கல்விச் செல்வமதை
வருந்தி இளமைப் பருவத்தே
வடிவாய்க் கற்றே உய்வோமே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு

உளத்துள், மனித
　　　　இனத்துள்; உறைந்து பயிராகி
வளத்துட் சிறந்த
　　　　மனத்தில் நிறைந்து கதிராகிக்
களிப்புட் கலந்தும்
　　　　அறிவோர் உழைப்பாற் கனிவாகி
ஒளியுட் பதிந்த
　　　　தெளிவுப் பளிங்கே அறிவாகும்

நிறைக்கும், உயர்ந்த
　　　　நிலைக்கும் அமைந்து கலங்காமல்
இறைக்கும் இணங்கும்
　　　　அருள்போல்; எவர்க்கும் அரிதாகி
மறைக்கும் அடங்கி;
　　　　ஒளிசேர் மணியாய் அணியாகிப்
பொறைக்கும் இடமாம்
　　　　வளஞ்சேர் விளக்கே அறிவாகும்.

புயலுள் நெருப்புள்
　　　　அடங்கிப்; பொசுங்கிப் புதையாமல்
அயலார் அடுத்த
　　　　செறுவார் அழக்கா அரணாகி
பயனால் உயர்ந்தும்
　　　　உலகத் துயர்ந்தோர் உறவாகி
நயனால் மனதைத்
திறக்கும் திறப்பே அறிவாகும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடு நிற்கும் வேர் அறிவூற்று

குறளுக்குள் உளம் விட்டுப் பார்;
பெரும்
குவையன்ன பொருளுக்குள் கொடுக்கிக்கொள் சேர்!
திறமைக்குப் புகழைத் தந் தார்,
யார்?
திறன்மிக்க மொழிகற்ற உயர்மக்கள் பார்
நறைமிக்க கனிவுச்செஞ் சொல்
நெடு
நினைவிற்கும் துணைநிற்கும் அணையிட்ட கல்
செறிவுள்ள பொருள்நல்க லால்
மறை
செகமோடு மணவாழ்வை இணைவிக்கும் நூல்
உதயத்தில் மணிவைத்தல் போல்
பல
உலகத்து மொழியாவும் பெறுநிற்ற வால்
இதனுக்குப் பொதுவென்று பேர்,
உள
இனமிக்க மதங்கட்கும் நடுநிற்கும் வேர்
புதுமைக்கும் அணிபெற்ற தால்
எம்
செழுமைச்செந் தமிழின்கண் முதலுள்ள கால்.
நிதம் கற்பின் நினைவுக்குள் ளே.
வல்ல
நிழல்நல்கும் மதியிற்குள் அறனூறு மே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையாக இயங்கிடுவோம்

கூட்டுறவால் - நல்ல
கூட்டுறவால் - மக்கள்
கோடி பெரும்பயன் தேடிடலாம்
நாடுயர்ந்தால் - எங்கள்
நாடுயர்ந்தால் - எங்கள்
வீட்டுத் துயர்களை ஓட்டிடலாம்
கேடகலும் - இடர்ப்
பாடகலும் - நாம்
கூடித் தொழில் செய்யும் கொள்கையினால்
நாடுயரும் - எங்கள்
பீடுயரும் - நலன்
சூழ்ந்திட இன்பமாய் வாழ்ந்திடலாம்
ஒற்றுமையால் - மன
ஒற்றுமையால் - வளம்
பற்பல கேடின்றிப் பெற்றிடலாம்
சேர்க்கையினாற் - பலர்
சேர்க்கையினாற் - தினம்
செய்தொழிலில் மேன்மை எய்திடலாம்
குன்றுவதாற் - பலம்
குன்றுவதால் - சுறு
குச்சியுமே சுமையாகிடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுவதாற் - பலம்
ஒன்றுவதாற் - பெரும்
குன்றையும் தூக்கி நிமிர்த்திடலாம்
உற்பத்தியிற் - பொருள்
விற்பனையில் - இலாபம்
பெற்றிடத் தக்க நெறியெதனில்
ஒற்றுமையே - மக்கள்
ஒற்றுமையே - என்று
ஒற்றுமையாக இயங்கிடுவோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுனம்

'போகாதை! தம்பி பொறு'
'என்ன தொல்லை எணை?'
'ஆகாது தம்பி முனிவிசளத்திற்கே'
'என்னாச்சி! என்னாச்சி! என்ன விசயமெணை?'
'என்டா மோனை நீ
என்ரை சொல் கேளாயோ?
என்ன இழவு படிச்சுத் தொலைச்சியளோ?
சொன்னதைக் கேளாங்கள்
கேள்விதான் கேட்பாங்கள்'
'கேள்விமேல் கேள்வி நான் கேட்டுத்
துலைக்கையில்லை
சொல்லனெணை சொல்லன்
தொண தொணப்பை விட்டு'

'புரியனைத் தின்னி
படலையிக்கை நிற்கச் சரிவருமே
போற அலுவல்
அறுதலியள்.'

தன்னை மறந்தாச்சி முன்னே வருகின்றாள்
என்னை முளிக்கவென் றென்னெதிரே
நிற்கின்றாள்,
ஆச்சியுங்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவை அதை மறந்து...?
கூச்ச லிடுகின்றாள் சின்னக் குழந்தையைப் போல.
ஆனால் இவள் அன்னை என்னைப் பொறுத்தவரை
ஆனால் அவள் அவ் இளம்விதவை ஆமாமாம்.
விதவையின் தரிசனம் இளமையின் பிழிவுகள்
எதுதகா தெனஇவர் உரைத்தனர் அவளது
மதுரமெய் லசைவுகள்
அழகுகள்
அறிவுகள்...?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிப்பு

கூடு தெரியாமல்
குஞ்சொன்று
அலைகிறது!
வேடிக்கை பார்க்க வெளிக்கிட்டுப் போய்
வழியைத் தேடித் திரிந்து

திகைத்து விழிக்கிறது!
வாடி வதங்கி
வனப்பழிந்த தவ்வலது
பாதி வழியில்
வழியைத் தவறவிட்டு
ஏதேதோ நெஞ்சை இறுக்கி

அமுக்கி விட
ஆசை வலை விரிப்பில்
சிக்கி அலமந்து
பாசத் தொடரை அடைய முடியாமல்
கொப்புகள் தோறும் போய்க் குந்திக்
கலங்குகுது!

வஞ்சகமும் சூதும் பருந்தாய்
வழிமறித்து நஞ்சாகி வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரில் நந்திபோல்
நிற்பதனைப்
பிஞ்சுப் பிறப்பு
அறியமாட்டாமல் ஏங்குகுது!
வாடகைக் குளிர் அடிக்க
வானில் இடிமின்னல்
ஓடிப் படபடென ஒத்தி
உதைத் திடிக்க
கூடு தவற விட்ட
குஞ்சு கலங்குது!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் புரிந்த பாவம்

ஏன் மகளே அழுகின்றாய்
ஏழிலே செவ்வாயாம்
நான் பட்ட கஷ்டங்கள்
நாயாய் அலைந்து;
உழைத்துத் தான்
தேடி வைத்தேன் பார்;
தின்னாமல் கொள்ளாமல்

மான்போல நீயிருந்தும்
மனதைக் கலக்குகிறாய்
காசிருக்கு(க்) கைநிறைய(க்)
கட்டழகாய் நீயிருக்க
தேசம் பலபுகழும் சிறந்த கல்வி
கற்றிருக்க
கூசாமல் வந்து
குலக்கொழுந்து
உன்கழுத்தில் நேசமுடன்
தாலிகட்ட நெஞ்சமில்லா ஆடவர்கள்

சீதனத்தைக் கேட்டார்
"சிவப்பியோ பெட்டை"
என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனத்தைக் கேட்டார்கள்; ஆம்,
குடும்பச் சீர்கேட்டார்

ஏதோதோ கேட்டார்கள் எல்லாமே
கேட்ட பின்னர் சாதியையும் கேட்டார்
சரி;
என்ற பின்னர் அவர்; சாதகத்தைப்
பார்த்தார்
சலிப்போடு எழுந்து கொண்டார்

வாதம் உன் வாழ்வில் வருமென்று
அறிவேனோ போதை, யான்
அந்நாளில் புரிந்த பிழை
"சாதகம் என்று
ஏதோ எழுதினால்
"எழிலே செவ்வாயாம்"
நான் செய்த பாவம்தான்

நஞ்சாய் அமைந்ததுவே
ஏன் மகளே அழுகிறாய்
"எழிலே செய்யாயாம்"
கூன் விழுந்து போனாலும்
குமராக நீயிருக்க
நான் புரிந்த பாவமந்த நாலெழுத்துச்
சாதகமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு

மண்வெட்டி நானோ
        மண்வெட்டி வாழுகிறேன்
பண்பட்ட மண் என்னாற்
        பருவம் செறிந்திடவே
பண்பட்ட மண் மீது
        பயிர்கள் செழிப்புறவே
மண்வெட்டி நானோ
        மண்வெட்டி வாழுகிறேன்

கல்லோடு போராடிக்
        களியூடே வேரோடி
பொல்லாத முள்ளினையும்
        புல்பூண்டையும் களைந்தே
அல்லும் பகலும்
        அயரா துழைந்தே என்
வல்லமையைத் தேய்த்தே
        வாழ்நாள் எல்லாம் களைத்தே

மண்வெட்டி நானோ
        மண்வெட்டி வாழுகின்றேன்

என்றன் முயற்சியினால்
        எடுத்தபயன் ஏராளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததியாய் இத்தொழிலே
 சார்ந்தெனக்கு வந்தாலும்
எந்தப் பொழுதேனும்
 எனக்கோ பலனில்லை
எந்திரமாய் என்னை வைத்துச்
 சந்தனமாய்த் தேய்க்கின்றார்

மண்வெட்டி நானோ
 மண்வெட்டி வாழுகின்றேன்
தேய்ந்து துரும்பாகி
 திண்மை, வலியிழந்தும்
ஓய்ந்தே இருக்காமல்
 ஊராருக்காய் உலைந்தே
பாய்ந்தே இறங்கிப்
 பலத்தை வரவழைத்தே
ஆய்ந்தோய்ந்து பராரமல்
 ஐயோ! வழியின்றி

மண்வெட்டி நானோ
 மாடாகத் தான்உழைத்தேன்
வன்மை கெடுமளவும்
 வாழ்நாள் தேய்ந்தாற்போல
மண்வெட்டி நானோ
 மண்வெட்டி வாழ்ந்தேன்
மண்ணோடு மண்ணானேன்
 மண்ணின் வசமானேன்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுச் சுமைகள்

தள்ளாடி நடக்கின்றேன்
தனிவழியிற் றுணையின்றி
உள்ளம் புரியாமல்
ஊரார் நகைக்கவெறும்
குள்ள உரைபலவின்
கூச்சல் கலக்க - பழங்
கள்ளாட்டி விடுவதுபோல்
கனதியினால் தளருகின்றேன்

மண்மாதா பொன்னடியில்
என்மாதா என்னைவிட
கண்காணா நாள்முதலாய்க்
கரைகாணாக் கப்பல்போல்
தள்ளாடி நடக்கின்றேன்.

ஏக்கச் சுழிகளிடை
இழுபட்டும் எற்றுண்டும்
சாக்கட்டை நண்ணும்
சடலம்போல் மற்றவர்முன் -
தள்ளாடி நடக்கின்றேன்.

அமர நினைவுகளில்
அணையா ஒளிவிளக்காய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரி ஒருத்தியவள்
குருதித் திணிவுகளால் -
தள்ளாடி நடக்கின்றேன்.

இன்பத் திவலைகளை
எடுத்துச் சிதறிநெடுந்
துன்ப இருள்தொலைக்கச்
சுமந்து வருவதனால்
தள்ளாடி நடக்கின்றேன்.
கடுசோகம் கவிதைகளாய்ச்
சுரக்க அதன் களைப்பால்
எடுத்தநினை வுச்சுமைகள்
என்னை நசுக்குவதால் -
தள்ளாடிநடக்கின்றேன்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புழுத்த சமுதாயம்

எழுத்தாளன் போகின்றான்
எல்லோரும் பார்க்கின்றார்
கொழுத்த வரிச்சேவல்
குப்பை கிளறல்போல்
கழுத்தை வளைத்து நெளித்து
கனக்கக் கதைக்கின்றார்
வெழுத்தேதோ வாங்குகின்றார்
விமர்சனமா? வீசுகிறார்
"என்ன இவர் பெரிசாய்
எழுதிக் கிழிச்சுவிட்டார்"
"மன்னர் தான்என்ற
மமதை அவருக்கு"
"என்றாலும்; ஏதோ
எழுதிஎல்லோ தள்ளுகிறான்"
"அன்றாடம் நாலை அவர்
பார்த்தடிச் செண்டு சொல்லு"
"வெங்காயம் போகுது
விசர் பிடிச்சு அலையுது"
"எங்களுக்கை அவன்தானே
எப்பன் அறிவாளி"
தங்கம் அவன்பொடியன்
தாய் தேப்பன் விட்டபிழை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கை உதுகளுக்கு
 மதிப்பில்லை எண்டுசொல்லு
"அப்பாவி அதைப்பற்றி
 ஆர்உம்மைக் கேட்டது"
"செப்பமாய்ச் சொன்னாய்; ஆள்
 சரியான ஆசாமி"
"எப்பவும் ஏழெட்டுப்
 பேர்தேடி வாறாங்கள்"
"அப்பஆளிலை ஏதோ
 இருக்கெண்டு தான் அர்த்தம்"
"செத்த பிறகுதான்
 சிறப்புத் தெரியும்பார்"
"சத்தியமாய்ச் சொன்னாய்
 சிலையும் எடுப்பினம்"
"கத்தாதை அவன்ரை
 காதில் விழுந்திடும்"
"எத்தனைசெய்து மென்ன
 இவன்பேயன்! பேயன்தான்"!

பழுத்து விழுந்த
 இலையாக வார்த்தைஇவை
உழுத்துவிழக் காதில்
 உதைத்துக் கலகலக்க
எழுத்தாளன் போகின்றான்
 எல்லோரும் பார்த்தென்ன?
புழுத்த சமுதாயம்
 புலம்பிக் கழிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனம்

இறந்த காலக் கதவுகளின்
		இடுக்குள் நுழைந்து பார்க்கின்றேன்
பிறந்த மேனிக் கோலத்தின்
		பிதிர்வுள் தவிக்குப் உணர்வுகளும்
கறந்த ஞானக் கலசத்துள்
		கலங்கி மிதக்கும் நினைவுகளும்
பறந்தும் அலைந்தும் திரிவதனைப்
		பார்த்துப் பார்த்துச் சிரிக்கின்றேன்

எண்ண முடியா ஆசையெலாம்
		ஏங்கி மலடாய்ப் போனதையும்
வண்ணப் படிவ வனப்புகளின்
		வாடிக் கருகும் அலங்கோலம்
மண்ணுள் மண்ணாய்ப் போவதையும்
		மயக்கக் கலக்க மமதைஅலை
கிண்ணச் சுழிப்புள் கொண்டோடக்
		கிறுங்கி நின்று சிரிக்கின்றேன்

போலிக் கோலப் பொலிவுகளைப்
		புழுகிப் பேசி மெருகேற்றி
வேலி பிரித்துச் சத்தியமாம்
		விந்தை சிதைத்து விசராடி
மூலைக் கொருவராய் நின்று
		முறைமை இதுதான் எனக்கூறி
காலை வாரி விடகின்ற
		கயமை கண்டு சிரிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று இதயம்

கடைவிழி இடறிய இதயம் - அவள்
கனிமொழி கவறிய இதயம்
நடைவழி தடவிய இதயம் - துயர்
நனைவிலும் அவளுறை இதயம்

கொடுமைகள் இடறிய இதயம் - பொதுக்
குடிமையுட் குலவிய இதயம்
கடுமைகள் குதறிய இதயம் - ஞானக்
கனவுகள் முனகிய இதயம்

வறுமைகள் சுறுவிய இதயம் - சோக
வயலிடை உழுதெழு மிதயம்
பொறுமைகள் முறுகிய இதயம் - புதுப்
பொதுமைகள் உதவிய இதயம்

சிறுமைகள் துருவிய - நூறு
சிதைவுகள் பரவிய இதயம்
வெறுமையிற் கருகிய இதயம் - ஏழை
விடிவினில் மகிழ்வுறும் இதயம்

உளைவுகள் கழுவிய இதயம் - மான
உணர்வுகள் தழுவிய இதயம்
பிளவுகள் உதறிய இதயம் - உலகு
பிணைவுற நிறுவிய இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகள் கொளுவிய இதயம் - வாழுந்
திசைதொறும் அறஞ்செயும் இதயம்
உறவுகள் பெருகிட நிதமும் - புதிதாய்
உடலிடை செருகிய இதயம்

புதியன செருகியுமென்ன? - இன்னும்
போலிகள் மலிபுலம் உலகம்
மதிதரும் பயனென்ன கானல் - நாடி
மலைவுறும் நிலையறு கோணல்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன சத்தியம்

குறுகிய வரையறையில் கொடுகிய மன அறையில்
குறுகிய உணர்வலையில் எகிறிய சிலகலையில்
முறுகிய அறிவுணவில் முனகிய புதுநினைவில்
கறுவிய மனஅசைவில் கதவுகள் பிதிர்வனவே

தறபுற முழிசலிடை தடல்புடல் எடுபிடிகள்
கறபுற அறளையிடை கனகன கதைவழிகள்
கிறுகிறு எனவருமோர் கிளர்விடை அவைசிலவாம்
விறுவிறு எனமனதை விசையொடு குடைவனவோ!

பொறுபொறு மனஅடியின் புதைவினில் மெளஎழுமோர்
குறுகுறு உணர்வுகளின் பொறுமையின் கருவறையில்
சிறைபட முடிவதுவோ சிறுபொழு தயர்வினிலே
அறுபட விடைநிகழும் அதுவரை பொறுமனிதா

வெறிகிறி இலையிதிலே விளைமுதிர் அறுவடைகள்
பெறுமொரு நிலைவருமோர் நவநெறி தெரிகிறது
சுறுசுறு எனஎழலாம் தொடர்தடை இடறிடலாம்
அறிபுளிப் புறலப்பம் சுவைபெற நனிஇனிதே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் வரும்

எருமை எருமை என்று
சொல்லித் திரிகிறாய்
என்னைக் கொண்டு
நன்குழைத்து வருகிறாய்
பெருமை பேசிப் பேசிக்
காலம் போக்கிறாய்
பேடி யாக்கி நாட்டை
மொட்டை யாக்கிறாய்

பசியை மூடிப் பகிடி
பண்ணி நசிக்கிறாய்
பழியைத் தேடி வழியில்
குழிகள் பறிக்கிறாய்
நசிய நசிய ஓங்கி
ஓங்கி மசிக்கிறாய்
நன்மை செய்தும்
தீமை தேடிக் குவிக்கிறாய்

விடிய விடிய விதியைக்
கூறி விரட்டுறாய்
விழல்க ளென்று
பழைமை கண்டு விலக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய முடிவை அடையப்
பாதை திறக்கிறாய்
கொள்கை விற்றுப்
பணத்தைத் தேடிக் குவிக்கிறாய்
முடிவு மோறைப் பற்கள்
முழுதுங் கழன்றிட
முழிகள் பிதுங்கி வழியில்
நின்று கலங்கவும்
அடிகி டைக்கும்
எனது பின்னாங் காலினால்
அங்கு சிதறும்
உனது கொடுமைக் கோட்டைகள்

கொடுமை அழிக்கும் கால
மொன்று வரும் வரும்
குறளிக் கூத்துக் கூட்டத்
தாட்டம் கெடும் கெடும்
அடிமைக் கூட்டம் அறிவு
பெற்று எழு கெழும்
அந்த வேளை அசலடி
யுதை விழும் விழும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைத்துச் செல்லும்

கானகத்தில் ஆடையின்றிக் காய்கனியை
உண்டுலகில் காலம் ஓட
மானமுடன் வாழ்ந்தவன்தன் மதியென்ற
முனையதனைத் தீட்டி நல்ல
ஞானவொளி காட்டுமொரு சுடர்விளக்கை
ஞாலமதில் ஏற்றி மற்றோர்
வானுலக மெனுமாறிவ் வையமிதை
வனப்புமிக மாற்ற வானான்

மண்ணூடி ருந்தன்று மனமென்ற
ரதமேறிக் கவிதை யாலே
விண்ணூடே விரைந்தோடி நொடிப்பொழுதில்
வெண்ணிலவில் பெண்ணைக் கண்டோன்
கண்மூடித் திறப்பதற்குள் காதலியைக்
கையோடே அழைத்துச் செல்லும்
விண்ணாடி ஆகிவிட்டான் விளைவறிவின்
விரிவதிலே வெற்றி கண்டும்

பழம்பெருமை பேசுவதில களிக்கின்றோம்
பயனின்றிப் போலிப் போக்குகள்
விழுகின்றோம் இன்றைக்கும் வாயில்லாப்
பூச்சிகளாய், அறிவுத் தாகம்
எழுகின்ற இவ்வேளை எல்லோர்க்கும்
நல்வாழ்வைக் காட்டு கின்ற
முழுதான புதியதோர் உலகமைக்க
முன்னின்றே உழைப்போம் வாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவொன்று தேவை!

தீயுமிழுங் கொழுந்தேறிப் படரட்டும் எங்கும்
திசையாவும் அழியட்டும்; தினவெடுத்த கொடுமை
போயொதுங்கிப் புதையட்டும், போலிகளின் ஆட்சி
புலரட்டும் எல்லோருஞ் சமமென்னும் வாழ்க்கை
தூயஉழைப் பாளிகளாம் ஏழைகளின் வாழ்க்கைத்
தேனையுறிஞ் சிக்குடிக்குந் தொந்திசரி யட்டும்
வாயுலரக் கீழ்மைநெறி வாரியிறைத் தோர்கள்
வகையறியா ஊமைகளாய் வாடி ஒழி யட்டும்

சத்தற்ற கொள்கைகளை விற்றுவயி றோம்பிச்
சாத்வீகத் தன்மைகளைச் சருகாக்கி ஞான,
முத்துறைந்த சிப்பிகளைக் கொன்றழித்து நின்று
முணுமுணுத்துக் கடமைசெய்வ தாய்நடித்துக் கள்ளத்
தத்துவத்தை வைத்தழகு காட்டிஉயிர் ஓட்டித்
தருமநெறி வேர்பறித்துக் கயமைகளை நிறுத்திச்;
செத்துழைத்த பாட்டாளி மக்களது செல்வம்
தின்றவர்கள் இன்றோடு சென்று மடியட்டும்

பற்றற்ற மேதைகளாய்க் கற்றவர்போல் காட்டிப்
பாவிகளை ஏமாற்றிப் பசியாறித் தங்கள்
சுற்றத்தார் சூழ்ந்தோரின் சுகம்பேணி, மேன்மைச்
சொற்பொழிவு செய்கின்ற சூதர்களின் பொல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றெடுத்த இதயத்துட் புதைந்துறையும், நஞ்சுப்
பொதிசுமக்கும் புல்லரிழி வெய்தவகை செய்யுங்
குற்ற - அறி வற்றவடி வாகி; மிகக் குலவுங்
குள்ளர் அழிவெய்திடவே கொடும்புயல்வீ சட்டும்

பிள்ளைமனப் பிஞ்சுகளின் பிற்காலப் போக்கைப்
பிய்த்தெறிந்து மொய்த்ததனிற் பெருமைபல பேசும்
வெள்ளை மனக் கள்ளர்களின் போலிகளை வெளியாய்
விரைவாகக் கிழித்தெறிந்து விடிவொன்று காட்டத்
துள்ளுபவர் தோன்றட்டும் தொடரட்டும் நல்ல
தூயநெறி ஏழைகளின் தோள்கள்சிறக் கட்டும்
நொள்ளைபல சொல்லுபவர் மெல்ல நகரட்டும்
நோயகலல் போலிந்தக் கீழ்மைஒழி யட்டும்
பந்தங்கள் பிடிக்கின்ற பாவாங்குக் காரர்
பால்வெள்ளை மனமென்று பச்சைப் பொய்கூறி,

தந்தமது காரியமே சாதிக்க முந்தும்
சரியான போக்கிரிகள் ஆட்டங்கள் சாயச்
சிந்திக்கும் மன்னர்கள் முன்வந்து நின்று
செயலாற்ற வல்லதொரு சீரான மேன்மைச்
சிந்தனைப்பூ பலமலர சிறப்பெங்குந் தேங்க;
சீரழிப்பார் சீரழிய வேண்டும் அழவொன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ அழுதால்!

நீ அழுதால்!
அம்மா அழாதே ஆம்
நீ அழுதால்?
நீ அழுதால் என்னுடைய நெஞ்சத் துணிவெல்லாம்
போய் ஒடுங்கக் கூடும் பொறு
உனது கண்ணீரால்
தாயே தயவுசெய்து என்
தாளாத ஆசைகளை
வேரோடு இடுங்கி
விசுக்கி எறியாதே

என்னை வளர்க்க உன் இரத்தத்தைப் பாலாக்கி
உன்னை உருக்கி உயிர்தந்த ஓவியமே!
ஓவியமோ
இல்லையில்லை என்னுயிரே ஆனவனே
தேவைகளை இந்தச் சின்ன உயிர்க்காய்
சாவை அணைக்கச் சதி செய்த தேவைகளால்
சாவின் கடைசிப் படிக்குப் பலிப் பூவாய்ப்
போகலாம் வெந்தோர்
சிறிய விளக்காகி
சுற்றிலும்
துன்பச் சுழல் காற்று வீசுகையில்
முற்றும் இருண்ட சிறு வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டாமல்
பற்றக்கோ டாகிப் பகலாக்கி வைத்தவளே!
வீட்டில் வந்து அவ்
விளக்கை அணைப்பதற்கு எட்டிச்
சிறகடித்து ஏமாற்றப் பார்க்கையிலே
ஏங்கித் தவித்திருப்பாய் எத்தனை நாள்
ஆவலுடன் தாங்கிச் சமந்த தா ழாத இலட்சியத்தில்
வீக்கங்கள் காண நீ
வெம்பித் துடித்திருப்பா ய்
தூக்கத்தில் நானிருக்கத் தூங்காமல் நீ இருந்து
பாசச் சுமைப்பாராம் தாங்கிப் பழகி எனை
நாச விலங்கு உடைக்க
நன்கு வளர்த்து விட்டாய்

உன்னுடைய குஞ்சை இனிப்பருந்து தூக்காது
இன்னும்
எனக்குள் எழுந்து கொழுந்து விடும்
அமைதியின் மூத்த அவசியங்கள்
இங்கு
சுமையாக்கி என்னைச் சுழற்ற விடவேண்டாம்.

தராதரங்கள் அற்ற தயவும்
தெரிந்து நிராகரிக்கப்பட்ட
நியாயத்தின் தூதுவனாய்
இன்று ஒதுக்கும் இந்த இயலா நிலைமைக்கு
என்றோ முடிவு வரும்
அன்றே விடிவாகும்
என்னை எலகமிது என்றோ ஓர்நாள்
ஏற்கும்
சின்னச் சலுகைக்குச் சிரமங்கள் ஏனம்மா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியனுப்பி வையுங்கள்

நீங்கள் அழுவதெனில் என்னை நினையாதீர்
நெஞ்சம் கரையும் எனில் நினைவில் எனை நண்ணாதீர்
ஏங்கும் எனில் உம் இதயம் இங்கே வரவேண்டாம்
இனிய மௌனம் எனும் சத்தியங்கள் பேசட்டும்
ஆனை நெஞ்சி முள்மேல் அழகு மலர்ப்படுக்கை
மோனத் தவமியற்றும் சத்திய மௌனங்காள்
தத்துவங்கள் பேசித் தன்னைத்தான் ஏமாற்றிக்
குத்துக் கரணமிடும் குறளிவித்தைக் கும்பல்கள்
பொருள் இழந்த வார்த்தைகளைப் புனிதப் படியேற்றி
வரும்படிக்காய் அள்ளியதை வாரிஇறைக் கின்றார்கள்

ஏழைக் கிரங்குவதாய் ஏதோதோ கூறி அவர்
கூழையுங் கூடப் பறித்தெடுக்குங் கூட்டங்கள்
இத்துணைக் கோல எழிலுடைய இவ்வுலகில்
அத்துவித மான அழகுப் புதையல்களே!
நினைவுமனப் படத்தைத் திரைநீக்கிப் பார்க்கின்றேன்!
கனவு குலையாமல் மனநினைவுப் புத்தகத்தில்
தினமும் எழுதிவைத்த கற்பனைக் குஞ்சுகளே!

வேப்பமரத் தேன்போல் விட்டவுடன் நாவினித்து
விழுங்க மிகக்கைக்கும் காதல் நினைவுகளே!
சாப்பாட்டை எண்ணப் பசிமூட்டும் ஆசைகளே!
சலனத்திற் கைகொடுத்த கருணைச் சிறகுகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் மினநெகிழ்ந்து நீங்கள் அழுவதெனில்
கெஞ்சுகிறேன் கேட்கின் றேன் இங்கே வரவேண்டாம்

இத்தனைநாள் உங்களுக்காய் தேடுகையில் ஓடுகையில்
எத்தனையோ வேளைகளில் கைக்குவந்து கைநழுவிப்
போனமுழுப் பொருளை - புனித - பரிவுத்த
மானவொரு உண்மையினை இன்றேனும் நான்சென்
றடைய விழிவிடங்கள் வழியனுப்பி வையுங்கள்
விடைகொடுங்கள் பரிசுத்தம் - உண்மை - மரணமொன்றே
மரணம் பிறப்பு என்னும் மாபெரும் உண்மைகளின்
இருசதவின் மற்றக் கதவின்று திறந்துளது
கையை அசைத்துக்
க...டை...சி... முறை...யா...கப்
பைய
வழியனுப்பி வையுங்கள்
பிஞ்சுகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவிளக்கு

ஈசல் பறந்து விரைந்து
வருகிறது
கூசும் ஒளியில் குளித்து
அணைத்துக் கொண்டாட
ஆசை நிரம்பி
அலையடிக்க
அம் மிதப்பில் ஈசல்
விழுந்தும் இறந்தும் கிடக்கிறதோ?

சந்தி விளக்கில்
சவமாய்க் கிடப்பவற்றை
வந்து
விருந்தாய் வயிற்றை நிறைப்பதற்குச்
சந்ததிகள் கூடித்
தெருவிற் தவழ்கிறதோ!
எந்தக் களிப்பில் இவைகள்
குதிக்கிறதோ!
பல்லியும், பாம்பும்
பரட்டைத் தவளைகளும்
எல்லாமே கூடி
இரைந்து களிக்கிறதோ!
சாவில் மகிழச் சனக்கூட்டம் சேர்கிறதோ?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழையலாமே

யன்னல்கள் திறந்திருந்தும் நான்
இன்னும் பார்க்கிறேன்
வீண் இன்னல்கள் விளைந்திருந்தும்
இதயத்துள் ஏதோ செய்யும்
பின்னல்கள்!
பிணக்கை வைத்தும்
பிறகும்
ஏன் பார்க்கின்றேன் யான்
யன்னலைத் திறந்து வைத்து
யாரங்கே

நிற்கச் சொன்னார்
காற்றுகள் நுழையும்
அந்தக்
கதவையும்
அடிதுடைக்கும்
வேற்றுமை காணாது
என் கூர் விழிகளும்
உலாவலாம் உள்

நேற்றைக்கும்
இன்றும் இன்னும் நிலைபெறும்
நாளை கூட
காற்றுகள் அளையலாமேல்
கண்களும் நுளையலாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேட்டம்

வறுமைக் கரம் அணைக்க வாழ்கிறார்கள்
வருடக் கணக்காக வாடுகிறார்கள்
சிறுமைச் சுமை நசுக்கச் சோருகிறார்கள்
சிந்தை மிகக் கலங்கி மாழுகிறார்கள்

அழகுக் கொழுந்துகளைப் பசியரக்கன்
அன்றாடம் கொன்றுதின்று மனங்களிக்க
மழலைச் சுடர்க்கொடிகள் கருகிவிழ
மானக் கொழுத் தரும்பு மங்கிமடிய

விழலைப் பெரியதென விரும்புபவர்
வீறாப்பாய்ச் செய்கின்ற வேலைகளினால்
தழலை அளைந்த சிறு குழந்தையைப் போல்
தவித்துத் துடித்துத்தள் ளாடுகிறார்கள்

வானைக் குடையாகப் பாவனை செய்தே
வருத்தும் வெயில் மழையை வஞ்சகமின்றி
ஞானம் அடைந்த சம நடுநிலையில்
நனவு கனவாகும் நசிவுகளில்

நடைபாதைக் குடும்பங்கள் வாழுகிறார்கள
நம்மவர்கள் அன்னவரின் நகல் எழுதி
அடையாத செல்வத்தைத் தேடுகிறார்கள்
அந்நபர்கள் வீடுவரக் கூசுகிறார்கள்

கடியாத நாய்கூடக் கடிக்குமென்று
கட்டியொரு பலகையைப் படலையிலே
வடிவாகத் தொங்கவிட்டு வாழுகிறார்கள்
வட்டிக்குப் பணம் கொடுத்துத் தேடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத் தந்தியில் மீட்டவோ

பருவ இன்னிசை வீணையை
தெருவில் வீசி எறிவதோ?
சுருதி மீட்டிடும் இளம் கலைஞனை
புவியில் தேடுதல் சிரமமோ?

யருவ இன்னிசை வீணையை .......

உருகி ஓடிடும் உணர்வு ராகங்கள்
அருகி அவை அலைந்து உலர்வதோ?
பெருகி மேலெழும் பிழைகளால் அரும்
பிஞ்சுகள் முகை எதிர்வதோ?

பருவ இன்னிசை வீணையை......

அருமையான மெல் அரும்பு ராகங்கள்
ஆளுமை பெற அலைவதோ?
எருமைபோற சுரி உழலு வோர்களின்
இதயத் தந்தியில் மீட்டவோ?

பருவ இன்னிசை வீணையை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்

வெறுந் தரை மீது
வீசிய வீணையை
மீட்ட ஏன் வேண்டா மென்றார்
அறுந்த தந்தியைப்
பூட்டி இசை மீட்ட
அதனையேன் கூடா தென்றார்

சிறந்த இன்னிசை
எழுப்பிய அதையோன்
தீண்டத் தகாத தென்றார்
நறுஞ்சுவை அறிந்தும்
சபைநடுவே ஏன்
நல்லதாய் இல்லை என்றார்

எறிந்திடு என்று
கூறிய பின் டீன்
நிதிமெண்ணி ஏங்கி நின்றார்
திறம்பெறு கருவியின்
செயல் திறன் அறிந்தா தன்
சித்தமே பறிபோய் நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சோலி?

என்ன கனக்கப் புழுகிறார் தம்பி
இஞ்சை இப்பதான் கண்டது போல
தன்னை விட்டவன் இல்லை யென் றெண்ணி
தட்டிக் கட்டி அளக்கிறார் வந்து

என்ன வெட்டிப் புடுங்கிவிட்டாராம்
எந்தக் கோட்டைகைப் பற்றிவிட்டாராம்
முன்னை நாங்கள் இருந்த இருப்பின்
முன்னர் இவர் எந்த மூலைக்குக் காணும்

பட்டங்கள் ஏதோ எடுத்துவிட்டாராம்
படிச்சிங் கென்ன குவிச்சுவிட்டாராம்
கொட்டில் வீட்டுக்கை குப்பி விளக்கில்
குந்திக்கொண்டவர் என்ன கண்டாராம்

“உன்ரை கொப்பர் முன்பு எங்கடை வீட்டில்
உள்ள மாடுகள் மேச்சவர் - அப்போ!
தின்னக்கூட வழியுமில்லாமல்
திரிய அப்பர் உதவி செய்தாராம்”

எண்டு சொல்லு, இனி அவர் ஏதும்
இன்னும் இன்னும் புழுகினார் எண்டால்
தொண்டு கொள்கை எண்டதை விட்டு
தொழிலைச் செய்து சீவிக்கச் சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட பாட்டிலை காரியம் பார்த்தால்
காலைக் கையை முறிப்பிக்க ஏலும்
எண்டு! சொல்லு எங்களை மிஞ்ச
இவங்கள் ஆர் எப்ப முளைச்சவை இஞ்சை

முந்த நாள் பெய்த மூண்டு துமிக்கு
முளைச்ச புல்லுகள் புத்திகள் சொல்ல
வந்து நிற்கினை ஆக்களைப் பாரன்
வரவர இவை செய்கிற சேட்டை

இங்கை ஆரும் வால் ஆட்டவே ஏலா
இழுவை வேண்ட வருமெண்டு சொல்லு
பங்கை வாறது ஆர்
அவன்தானே!
அப்பநாள்பின்னை வாறன்
ஏன் சோலி?

●

# வர்க்கம் ஒன்று வளர்கிறது

ஐயோ சொறி நாய்கள் ஐயோ சொறி நாய்கள்
அங்காலும்
இங்காலும் ஐயோ சொறி நாய்கள்
கட்டிலிலும்
மெத்தையிலும்
கால்நீட்டிக் கொண்டிருந்து
கொட்டுவதோ
குட்டைக் கிருமிக் கொடுங் கூட்டம்
ஐயோ சொறி நாய்கள் ஐயோ சொறிநாய்கள்

எட்டிக்
கிடைக்கும் எதிலும் கடிப்பதனால்
குட்டைக் கிருமிக்கோ
கொண்டாட்டம் மேன்மேலும்
ஐயோ கடிநாய்கள் ஐயோ கடிநாய்கள்

வாலை மிகக் குழைத்து
வந்து கை காலை நக்கி
சீலைக்கு மேலாரோ தோலைப்
புடுங்குகின்ற ஐயோ விசர் நாய்கள் ஐயோ கடிநாய்கள்

அங்கலாய்ப் போலவைகள்
ஆட்சி செலுத்துவதால்
இங்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நாய்கள் எல்லாம் கடிவேண்டி
ஐயோ வெறி நாய்கள் ஐயோ வெறி நாய்கள்
கண்டசட்டி கோப்பை
கழி வின்றி நக்கு கிற
சண்டாள வேலையினால்
சமத்துவம் காட்டியதால்
சோறெல்லாம் நஞ்சு
சொதிச் சட்டி
எல்லாம் பாழ்
போற வழியெல்லாம்
பொடி பெட்டை யைக் கடித்து

ஐயோ சொறி நாய்கள் ஐயோ
சொறி நாய்கள்

ஏழைகளின் சோறும்
எச்சில் படுத்தியவை
வாழையடி வாழையென வந்து
பெருகி வரும்.....

ஐயோ சொறி நாய்கள்
ஐயோ..... "சொறி" .... நாய்கள்.

●

# இசைவு

எண்ணத் தயிரை எவனோ கடைக்கின்றான்
கிண்ணம் எனும் இதயக் குண்டானில்
சிந்தனை மத்தால்
அடித்து மசித்து மிக வடிவாய்த்
தத்துவ வேகமொடும்
தயிரைக் கடைக்கின்றான்

நுரைகள் எழும்பிக்
கரையில் அடைகிறது
திரைய
குமிழ்தோன்றித் திட்டாய் உடைகிறது

மண் சுமந்த கண்ணீர் மணிகள்
உயிராகி
எண்ணில் பிறப்பாய் எதிரில் வருதல்போல்
கிண்ணத்தில்
கோடி அணுக்கள்
திரள்கிறது
திண்ணையிலும் கூடச் சிலது தெறிக்கிறது

கண்ணுள் செறிந்து கருத்துள் அவை ஊறி
அண்ணாக்காய் விட்ட அமுதமாய்
என்னமோ பண்ணி எது என்று
பகுத்து உரைக்க
ஏலாமல்
தண்ணார் தமிழில் தளைந்து முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை விடுங்கோ!

காதல் கரும்பு
நுனி கடிச்சுக் கண்டபடி
பேதிக் கதைகள் புசத்துவதேன்
போதை
தலைக்கேறிப் போச்சோ!
தயவு செய்து கொஞ்சம்
கலைச்சு விடுங்கோ
கதை....
ஊரறிஞ்ச சேதி
எனக்கு உங்கள் மேல்
ஆசையில்லை.

காரணத்தைச் சொல்லிக்
களைச்சுவிட்டேன்
"பாரடி நீ!
கட்டி அடக்கிறன் பார்
கையான் கரைஞ்சாலும்
விட்டிடன்"
என்ற கதை வீண்.

மைத்துனன் என்றால் உன்
மாமன் மகள் உமது
சொத்தென்ற பேச்சால் சுகமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமுமே
கத்தியேன் அத்தான் களைக்கிறியள்
அவ்வார்த்தை
சத்தற்றுப் போன சவால்,

ஆத்திரமோ!
இல்லை அவசரமோ!
ஏன் அத்தான்
சூத்தைக் கதைகளையே சொல்லுறியள்
கூத்தாடி
வேலி கொளுத்தியேன்
விளையாட்டுப் பாக்கிறியள்
காலில் விழமாட்டேன் நான்
என்னை விடுங்கோ! நான்
என்பாட்டில் தான்
போவன்.

சொன்னதையேன் கேளாமல்
சூரன்போல்
என்னுடைய
அண்ணையளைக் கொன்றும்
அடித்தும்
பொருள் பறித்தும்
மண்ணள்ளிப் போடுறியளே!

சண்டித் தனத்தால்
சரிக்கட்டிப் போடலாம்
என்று,
மனப்பால் குடிக்காதீர்
கொண்டாலும்
கூடி உம்மோடு
குடும்பம் நடத்தநான்
பேடியில்லை
வீரமகள் பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோற்றில் முழுப் பூசனிக்காயைத்
தாட்டும்நீர்
வேற்றாளைக் கொண்டு
வெருட்டி விடுவம் எண்டும்
காட்டுகிற வித்தைகளைக்
கண்மூடி இவ்வுலகம்
கேட்காது இனியும் கிடந்து.

காதல்!
எனக்கு உம்மேல்
கடுகளவும் இல்லை!
இதைச்
சோதிக்கத் தேவையில்லை
சொந்தத்தால்
காதல்
வராது! வலிஞ்சு
வலை விரிப்ப தெல்லாம்
தராது பயனை
தவிர்.

கைவிடுங்கோ என்னை இனி
கை நட்டம் போகட்டும்
உய்ய வழியுண்டோம்
உண்மையிது
வையகமேல்
உங்கள் சகோதரர்கள்
ஒற்றுமையாய் நிண்டாலும்
சங்கடம்தான்
வெல்லா சதி.

ஆர் சொல்லியும் நான்
அடிபணியப் போவதில்லை
நேர்மை நியாயம்
நிலை நிறுத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்கொண்ட
சத்தியத்தைத் தஞ்சம் அடைந்துள்ளேன்
என்னவரை
அத்தருமம் காக்கும்
அறி.
கொன்றரை என்னை நீ
கொள்ள முயன்றாயேல்
ஒன்றும் ஒருபொழுதும்
மிஞ்சாது
அன்றைக்கே
கற்புத் தீ மீண்டும்
கனன்று எரியும்
கண்ணகியாய்
நிற்பேன் நான்
நன்றாய் நிமிர்ந்து.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரைமீட்பு

ஏரிமுதிரா இளநாம்பன்
கன்றுகள்
ஏரி நிமிரா இளம் நாம்பன் கன்றுகள்
ஊர் நிமிர
நாளை உழைக்க வளர்த்து எடுத்த
ஏரி நிமிரா இளநாம்பன் கன்றுகள்
பாராமுகமாய் இருக்க முடிஞ்சிடுமே!

வேலி பிரிச்சு
அவற்றை வெளியாலை கொண்டுபோய்
காலித்தனம் பண்ணக் கண்டும்
பொறுக்கிறதே!

நாளுக்கு நாளாக
நாற்பது ஐம்பதுவாய்
ஆளுக்காளாய் வந்து
கொண்டெல்லே போறாங்கள்.
பச்சை உயிராகப் பார்த்திருக்கக்
கொண்டுபோய்ப்
பிச்சுப்
பிடுங்கி உயிரும் எடுத்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடுகாலி நாம்பன் கதையை
விடுங்கோ" வாம்!
"பயிரழிவு என்று
பழிசுமத்திப் போட்டவங்கள்
உயிரழிவும் செய்தெல்லே
ஊருலகைப் பேய்க்காட்டி
நீதிக்குச்
சீலை உரிஞ்சு பறித்தெடுத்து
வீதியெல்லாம்
நிர்வாண வேடிக்கை செய்யிறதைப்
பார்த்து
நெடுகப்பெருமூச்சு விட்டடென்ன?

"ஊரத்துளவாரம் எமக்கேன்?"
என இருந்தால்!
எல்லாரும் ஏன்
சும்மா ஏங்கிப் போய் நிற்கிறியள்?
பல்லைக்கடிச்சு
நெருடி அவன் பார்த்தால்...
உண்மைகளைக் கட்டி ஒழிச்சால்
முடிஞ்சிடுமே!

மாட்டைப் பிடிச்சவங்கள்
வீட்டைப் பிடிக்க
மணிக்கணக்கே செல்லும்?
எழும்புங்கோ வன் கெதியாய்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியமூச்சின் முற்றுப் புள்ளி!

சூது நோய் பரவி விழித்த வேகம்
எத்தனை கோடி
இதய ஏழைகள் பத்தியம்
பறித்து எறியப்பட்டதோ!

இணைப்புப் பாலம்
இதயக் குருடரால்
குண்டுகள் வீசித்
தகர்க்கப்பட்டன

சேமித்த
நம்பிக்கைத் தானியமீது
நஞ்சு
தூவிக் கலக்கப்பட்டது.

வஞ்சக உச்சக் கட்டம் ஒன்று
நெஞ்சைக்
கொஞ்சம் நிமிர்த்தி
உண்மையின் வயிற்றைப்
பீறி அப்பால் பறந்தது.

அம்.... மா பாரத அன்னை
இந்திரா
அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் ரத அன்னை இந்திரா
நீயா சாய்ந்தாய்?
நீ பலியானாய்
இல்லை! இல்லை!
இல்லவே இல்லை.... ஓ!
எமை அறியாமல் எம்
மனம் எல்லாம் சுமையாய்த்
துயரம் ஏன் சுமந்தனவோ?

பித்தர் பேடியர்
பெண்மைக் கொலைஞர்
எத்தனை முட்டாள் தனம்
இவர் செய்தார்.

ஆண்மை அற்ற அலிகள்
வெறியர்
பூவை ஏன் கசக்கிப் புழுதியில்
எறிந்தார்?
திண்ட விட்டுக்கோ
இரண்டகம் செய்தார்
அன்னை உன்னை அழிக்க
முடியுமா?

சத்திய மூச்சின் முற்றுப்புள்ளி!
கோடி கோடி இந்திராவாகக்
கூர் கொண்டிருக்கிறாய்
எங்களுக்குள்ளே
நீயோர் நித்தியம்
எம் நினைவிடையே சத்திய
வேள்வியில்
தலைமை தாங்கும் தலைவியாய்
நிற்பாய்
உனது உன்னதப் புனிதப்பணியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை அணியில் ஒவ்வோர்
ஓர்ம இளைய தலைமுறை அகத்தில்
அமைதியாய்
உறங்குநீ
அம்மா விடு தலைப் பூக்களால்
வைத்துனை
விடுதலைப் பூக்களை வைத்து
உனை இறைஞ்சு வோம்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாயம்

என்ன புழுக்கம்?
இரவு பகல் இல்லாமல்
சின்னக் குழந்தையைப் போல்
சீலை துணி
இல்லாமல் சும்மா கிடந்தால்!
சுகமாய் இருக்குமோ?

அம்மா ;
முன்னாளில்
"அங்கைபார் உன்னுடைய
கொம்மான் வருகின்றான்
கோவணத்தைக் கட்டடா"
என்று விரட்டுவாள்

"குஞ்சா மணி அறுப்பன்;
எங்கை ஆள்?"
என்றென்னை
"இஞ்சைபிடி இஞ்சை
பிடி" யென்று
தன் பாளைக் கத்தியைக்
கையில் எடுத்துப்
பளபளக்கக் கத்திவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் பிடுங்கவரும்
கந்தப்பு ஐயையோ!

அப்போ பயம் எண்டால்!
ஐயோ குலை நடுக்கம்
இப்படி பயமென்ன?
ஏன் இருக்க ஏலாது?
மூடினால் வேர்வை!
புழுக்கம்
திறந்துவிட்டால்?
ஓடிவரும் பெரிய பட்டாளமாக
நுளம்பு படையெடுத்து
கட்டாயம் வேண்டும் "கலை".

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவல் கோழிகள்....

விடியுது! விடியுது!!
போர்முள் அரும்பாத கோழிச் சேவல்கள்
அடிச்சுக் கூவுது

கூவுற சேவல்
இருப்புக் கொண்டு
சுவடு பிடிச்சு
மரநாய் வருகுது
மோப்பம் பிடித்து
அலைந்து திரியுது
சேர்க்கையில் வைத்தே
பிடிக்க வைத்தே
பிடிக்க வளையுது
கத்திப் பறந்து
சேர்க்கை கலையுது

விடியும்! விடியும்!!
அடிச்சுக் கூவுது
போர்முள் முளையா
வெடிவால் சேவல்
அடிச்சுக் கூவுது!
அதிரக் கூவுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரநாய்
பதுங்கிப் பதுங்கி வந்து
கழுத்தை நெரித்துக்
குஞ்சைப் பிடிச்சுக்
குழறக் குழறக்
கொண்டுபோகுது.
கொக்கரிச்சோடிக் கோடி
கலையுது.
அக்கமும் பக்கமும்
ஆரோ உரப்புகினம்.

கோழியைக் கூட
அதுகொண்டு போட்டுதாம்
நாளைக்கு
நிச்சயம் விடியும் விடியும்
அடிச்சுக் கூவுது
சேவல், கோழிகள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமொழி தெரியாக் கணக்குகள்

விடிவிளக்கு எரிச்சு எரிச்சு
வீணாகக் கண் முழிச்சுப்
படிக்கிறம்
எண்டு சொல்லிப் பகலிரவாக
என்ன விடுகையள்
விடுகிறாங்கள்.
படுகிற கடனையெல்லாம்
பட்டாளக் கூத்துப்போட்டுப்
படிக்கிறதாக
என்ன பண்ணிக் கொண்டு
இருக்கிறாங்கள்.

கணக்குகள் கனக்க,
செய்யக் காலம் காணாது
என்றும்
பிணக்குகள் இதனால்தானாம்
பிழை இனிமேல் வராது
சுணங்காமல் முழுத்தையும்
நாம் சுறுக்காகச்
செய்யப் போறம்
துணைக் கெவர் வராவிட்டாலும்
தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செய்வோம் என்று
அடுக்குகள் எடுக்கிறாங்கள்
ஆரவாரங்கள் போட்டு
முடிக்கிறம்
இந்தாபாரன் என்றெல்லாம்
முறைக்கிறாங்கள்.
நடக்கட்டும் என்று பார்த்தால்
நாளினைக் கரைத்தன்றி
முடிக்கிறபாட்டைக்
காணன்!
முட்டுக்களாய் மொட்டைமூளை

மனக்கணக்கு
ஆகப் பார்த்தே மடக்கென்று
சொல்லத்தக்க எனக்கெல்லே
விடுகிறாங்கள்
என்னைப் போய்க்
கிழடென்று எண்ணி!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு விளங்குதுதோ?

எங்கடை பிள்ளைக்கு
இப்போ விசர்
என்று கூட்டி வந்து
இங்கெல்லே விட்டிருக்கு!
இது தெரியாதோ?
போன பங்குனி மாதம் தொட்டு
படிக்கக் "கம்பசுக்" குப் போனான்.
அங்கைதான் துவக்கம்
என்ரை அருமந்த பிள்ளை ஐயோ!

இங்கிலீஸ் பேச்சில் விண்ணன்
எண்டெல்லாம்
புளுகக் கேட்டன்
அங்கலாய்ப்போடை
நானும் ஆனந்தப்பட்டுக்
கொண்டன்
எங்கெல்லாம் இருந்தோ
தம்பிக்கு எத்தனை கடிதம்!
நெஞ்சில் பொங்கிடும் ஆசை

பட்ட கடனையும்
மறக்கப் பண்ணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிச்சவன் ஆளாய் வந்தால்
பசியோடு கடன் பறக்கும்
முடிச்சிட்டு வரட்டன்
என்று பட்டினி பகலிரவாய்
அடிக்கடி மயக்கம், சோர்வு
அழல்வாதம் எண்டு சொன்னார்
படிக்கிற அவனை எண்ணப்
பறந்திடும் வருத்தம் எல்லாம்.

கள்ளியங்காட்டில்
அந்த விசர் பரியாரி
வீட்டில் தள்ளி விட்டிடுவம்
எண்டு தம்பண்ணை வந்து
கேட்டார்.

கொள்ளி வைக்கின்ற
ஒற்றைக் கொழுந்தையும்
அங்கை வைத்துக்
கொள்ளையில் போகக்
கொல்லக் குடுப்பனோ
சீவனோடை?

விசரென்று
கொண்டு வந்து விட்டிருக்கு
அவனைக் காண
கிசுகிசென்று கண்ணை
இருட்டுது கண்ணீர் முட்டி.

அசையாமல் இருப்பன்
வீட்டின் அசப்புக்குள்
பார்த்துக் கொண்டு
உசரத்தன் கையை நீட்டி,
உதடுகள் அசையும் பாவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான தஞ்சக்கேடு
தண்ணீரைக் கொடுத்தால்
“தாகம் வருகுது
சுதந்திரத்தை வழங்குங்கோ”
என்று ஏதோ திரும்பவும்
சொல்லுகின்றான்
சிவசிவா என்ன செய்ய?
“நரம்பில்லா நாக்கால் சொல்ல
நம்பினோம் நாங்கள்”
என்பான்

“சுதந்திரம் பெறும் வரைக்கும்
தொண்டாக இருந்து வந்த
அரசியல் தொழிலாய்ப்போச்சு! ஓ!
அதை இப்ப அழிக்க வேணும்
வதம் செய்வம் எழுக” என்று
வயிறெக்கிக் கத்துகின்றான்

வயிற்றிலே மண்ணைப் போட்டன்
வடிவாக இருந்திருப்பான்
வீட்டிலே
இருந்திருந்தால்.

சோதனை வருகுதெண்டு
சொல்லித்தான் போனான்
இப்போ
சோதனை முடிய முன்னம்
சோதனை வந்திருக்கோ?

சூது வாது அறியாப் பிள்ளை
சொன்னதைக் கேட்ட
பிள்ளை!
ஏதப்பா வியாதி ஐயோ
எனக் கொண்டும்
விளங்குதில்லை!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலாம் இன்றைக்கு!

பாதிச் சமையல்
அடுப்பு நெருப்பாகச் சேதி
அறிஞ்சவுடன் அம்மா!
நீ ஏங்கி
நெருப்பு, உடுத்த சேலையிலே
பற்றினாற் போலத்
தெருப்புழுதிமேலே புரண்டு
கிடந்து அழுதாய்.

பெட்டை, பெடியள்,
பெரியவர்கள்
எல்லாரும்
எட்டியும் வேலிக்கு இடையாலும்
சுற்றி நிண்டும்
பார்த்துக் கொண்டு
அன்று பலதும் கதைத்தார்கள்.

பொங்கலாம் இன்றைக்கு!
நல்லாய் விடிஞ்சுதோ?
எங்கள் உடம்பாலே
ஊத்துண்ட ரத்த உரத்தில்
பசளையாய்க்
குற்றுயிரோடும் துடிதுடிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டொன்றாய்ச்
சேர்த்துக் கருக்கிய
சாம்பல் திடல் மேட்டில்,
சார்ந்த இடமெல்லாம்
வாரடிச்சு
ஓடி வயலுக்குள்
போய்விழுந்து சேரக்கிடந்த எம்
ரத்தம் வயல் முழுதும்
நெல்லாய் விளைஞ்சு கிடக்க
அறுத்தெடுத்து இங்கு
எல்லாரும் பொங்க

அடுக்கெடுத்து நிற்கிறியள்
நாங்களோ
ஆவியாய், நாயாய் அலையிறம்.

வாங்கிலிலே
அம்மா நீ வாடிவதங்கிப் போய்ச்
சோர்ந்து கிடக்கின்றாய்
சுற்றிலும் சோகலயம்
கண்ணீரே பொங்கிக்
கடவாய்வழி ஓடிப்
புண்ணடைஞ்ச
நெஞ்சிலோர் உப்புப் பொறி தட்டும்.

அண்ணன் நினைவால்
அடுக்களைக்குள்
தங்கச்சி எண்ணிக் கலங்க
இதயம் துயர் பொங்கும்.
திண்ணையிலே
நாலிச் சரடை வருடி
ஒரு பெருமூச்சு எழும்பும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபிள்ளை
"அப்பா வராரோ?"
எனக் கேட்கும் மழலை
உயிர் பிழியும்.
கப்போடு சாய்ந்திருந்த
அப்பு
தலைத்துண்டை அப்பால்
எடுத்துத் தடவ விழிசிந்தும்!

நாங்கள் அநாதரவாய் நடுத்தெருவில்
நிற்கவில்லை.
நீங்கள்
நிதமும், நெஞ்சால் நினைவுகளால்
பொங்கி வெடித்து
வடிக்கின்ற கண்ணீரில்
எங்கும் புதிய எழுச்சி
பெறுகின்றோம்.

ஆவிகளாய் நின்றாலும்
அயரா முயற்சிகளால்
பாவம் கழுவும் பணியை
முடித்திடுவோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்களுக்கு வந்த நடப்பு!

நாய்களுக்குத் தான்
இப்ப நடப்பு அதிகம்
நம் நாட்டில்
தாய், பிள்ளை, தம்பி
சகோதரங்கள்
எல்லாமே
நாய்க்குப் பிறகுதான்
நாங்களும் கூடத்தான்.

என்ன சொகுசு
அவைக்கு எல்லாம் சுகபோகம்
பஞ்சுமெத்தை, கட்டில்
படுக்க, அறைகட்டி
அஞ்சாறு சாதி விசுக்கோத்து
விற்றமின்கள்
கொஞ்சம் அது
சோர்ந்து கிடந்தால்
உடன் காட்ட டாக்குத்தர்
ஊசி மருந்துக்கு
வங்கிக் கணக்கில் தனியான
வைப்பொன்று
காலைப்பொழுதுகளில்
கூட விளையாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாள் ஒன்று
விடிய
குளிப்பாட்ட வாசனைச்
சோப்பு வகை
காரிலோ முன்சீற்
கனவேலைப்பாடு அதற்கு.
ஆச்சியோ
இங்கே அரைவயிற்றுக்
கஞ்சிக்கு மூச்சு இழுக்கக்
கூனி, முதுகு
உளைய ஊரான் வயலிலே
நெல்பொறுக்கி வாடித்
துவழுகிறாள்
புயலில் அடிபட்ட
பூவாய்ச் சுருளுகிறாள்.

நாய்க்குப் பிறகுதான்
நம்நாட்டில்
தாய், பிள்ளை,
நாய்களுக்கு வந்த நடப்பு
மனிசரைப்
பேயிலும் கேவலமாய்ப்
பின்தள்ளி வைக்கிறது.

அலவன்சு இன்சூரன்ஸ்
ஆதியனவும்
இப்ப பலவகை நாய்களுக்கும்
பாஸ்பண்ணி வச்சிருக்கு
சட்டப்படி
அவைக்குத் தக்கபடி
கிடைக்கத்
திட்டமிட்ட வாக்கு எடுப்பில்
சிலபேர் வெளிநடப்பு
எண்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக வாக்கால்
நிறைவேறி அண்மையில்தான்
அஃது
நடைமுறைக்கு வந்திருக்கு.

நாய்களுக்கு
இப்ப நடப்பு
திமிர் அதிகம்
போய் வாற எல்லா இடமும்
பொறுப்பின்றி வாய் வைக்கும்
கண்டபடி
வக்கென்று ஆள்மேலே
பாய்ந்து
கடித்துக் குதறி உயிர் எடுக்கும்
ஆரும் எவரும் அதுபற்றிக்
கேட்கேலா
காய்...சூய் என
விரட்டக் கண்டால் உடன்
அரசோ
காவலுக்கு விட்டவற்றை
யார் கலைச்சார்? என்று
பெரும் கோவம்
தலைக்கேறக்
குற்றங்கள் சாட்டிக்
கொதிச்சுக் கிளம்பிக்
கொலை தீர்ப்புக்
கூறுகுது.

நாய்கள் இதனாலே நம்மை
மதிப்பில்லை
சாப்பாடு, சாமான் தொடக்கம்
உயிர் வரையும்
ஏப்பம் விடுகுதுகள்
எவருமே கேட்கேலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நாய் என்றால்
நமக்கென்ன வந்தது
எல்லாமோ?
நாமதனை
எப்படித்தான் சொல்லுவது
நல்லாய் இதுகளை
எப்படி நாம் கொல்லுவது.
வேட்டை நாய்
வீணீர் வடிக்கும்
விசர் நாய்கள்
காட்டு நாய்
காம வெறி நாய்கள்
நாக்குகளை நீட்டி முழியை
உருட்டி விழிக்கின்ற
நீட்டுச் சொறி நாய்கள்
நீர் நாய்கள்
ஊர்நாய்கள்

நீட்டுக்கால்
சட்டைகளை நித்தம்
சலவை செய்து மாட்டி
வெளிவந்தால்
மக்கள் மதிப்பாரோ

ஆட்டுச் சிறுகுட்டி
அவற்றை மதித்திடுமோ?
பாய்ந்து எழும்பி முட்டி
அவை கொம்பால்
இடியாதோ?

எல்லாம் ஆம் ;
“அரசு” கொடுத்த மதம்
பொல்லாப்பை ஆராயப்
போது சரியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பு

உச்சத்தொனியில் ஒருபாடல்
கேட்கிறது.
பச்சைத்தமிழில்
பழகிய சொற்களினால்
மெச்சத் தகுந்த மிடுக்கோடு
மேலோங்கி
உச்சத் தொனியில்
ஒரு பாடல் கேட்கிறது.

உள்ளூர்க் கிராமப்
புறத்தின் ஒரு முனைவில்
துள்ளல் இசையில்
துளிர்க்கின்ற வெண்ணிலவில்
அள்ளிச் சிதறும் அமுதக்
குழையலெனப் பிள்ளைக் கவிகள்
பிரிய மிகும் சுதியில்
நள்ளிரவில்
தூரத்திருந்தோர் அமைதியிடை
மத்தளத்தின் ஓசை மடியில்
தவழ்ந்தெழும்பி
ஒத்திகையின் ஊற்றாய் ஓங்கிப்
பிரவகித்துத் தத்துவமாய்
காற்றில் கரைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளைகிறது
ஊர் உறங்கிப் போயும்
அவ் ஒத்திகையின் சத்தமோ
ஆரோகணித்தே அலைஎறிந்து பாய்கிறது.

ஊர்நாய் அதைத் தொடர்ந்து
ஊளை இடுகிறது.
நேரம் தெரியவில்லை
மால்போல் முகில் அசைய
நேரத்தைப் பார்க்க நிலைத்த
விழிகளிடை
மின்னல் ஒன்று ஓடி
ஒடிந்து கிளைவிட்டுப்
பின்னி வெடித்துத் துடித்து
மறைகிறது.

"ஆரோ குழைக்காட்டான்
அரை வெறியில் கத்துகிறான்"
மாடியிலே மப்பின்
மயக்கில் படுத்திருந்த
செல்லத்துரையார் சினந்து
எழும்பிச் சொல்லுகிறார்
"ஆரோ விசரன் அரை வெறியில்
கத்துகிறான் ;
பாரன்" என மீண்டும் படுத்துப்
புரள்கின்றார்
உச்சத் தொனியில் ஒரு பாடல்
ஓய்கிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கழுதத்தின் நடுப்பகுதி

எப்படி அப்புவின்ர சுகம்?
என்று கேட்டிருந்தாய்
இப்பவும் அப்படித்தான்
இது பற்றி ;
உலகமெங்கும்
தப்பாமல் தேடிப்பார்த்துச்
சரியான மருந்து வாங்கித்
துப்பாமல் குடிக்க வைச்சும்
சுகத்தைத்தான்
காணவில்லை.

அப்புவிக்கிப்போ
கொஞ்சம்
அறளை பேர்ந்திருக்குப் போலை ;
எப்பவும் நிதானம் இல்லை.
எடுத்ததற் கெல்லாம்
தான்செய் தப்புகள்
தெரிந்த போதும்
தவறில்லை செய்தது
எல்லாம் ஒப்பில்லாச் செய்கை
எண்டு உளறுறார்
விசரைப் போல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூரில் குளிசை தொட்டு
இவ் உலகத்தான் எல்லாம்
வாங்கித் தள்ளி
நாம், நேரம் தப்பாது
அடுத்தடுத்து
அவை கொடுத்தும்
எள்ளள வேனும்
முன்னேற்றத்தையே
காணவில்லை
உள்ளதைச் செலவழித்தும்
உடல் நிலை
தேறவில்லை!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேலியில்லை

"பாக்குரலைக் காணன் எட
பொடியா எங்கையடா??
கேக்காத மாதிரிப் போறான்
கிழடு நான் கத்திறன்.

அந்தக் கடைக்குட்டி வட்டன்தான்
சத்தகத்தையும் விடுறானில்லை
தலையால் அழிஞ்சதுகள்
இஞ்சை எதனை விடுகுதுகள்
புழிஞ்செடுத்தாளைப் புடுங்கிக் குதறுதுகள்.

சார்வோலை குத்த அந்தச் சத்தகத்தைத்
தேடுகிறன்
ஆர்வந்து அதனை எடுத்துத் தருகினம்
கண்ணும் பூஞ்சிப் போச்சு
பார்வை தெரியவில்லை
திண்ணைக்குப் பாரம் இனிக்
கெதியாய்த் தீர்த்துவிடும்

அண்ணரும் கூட மலைபோல் இருந்து விட்டு
கண்மூட முன்னம்
ஐயோ! நெஞ்சு வலிக்குதெண்டார்
கண்டக்கிடையில் நடந்து முடிஞ்சுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்குப் போல இருக்கு. ஓ...
இதுகளுக்கு
அரைவாயில் இரத்தமில்லை
செய்யும் அநியாயம்?
தெரியாமல் கேட்கிறன்
அந்த நாள்
நாங்கள் எல்லாம் திண்டதை
இப்ப இவை கண்ணாலை கண்டாலோ!
ஓண்டரைப் புட்டு -
குரக்கன் ஒடியலிலை -
ஆவி பறக்க அவிச்சு இறக்கி
ஆச்சி வைக்க
- மாவெண் டதை எதையோ
கொண்டுவந்து திண்டென்ன -
பேச்சு மூச் சில்லாமல்
திண்டிட்டுப் போய் விடுவம்

நோச்சுப்போய் இப்ப பெடியள் இருக்குதுகள்
சாப்பாட்டுச் சீர்தானே -
- சத்துணவாம் விட்டமினாம் -
கேப்பானேன்
ஏதோ குளிசை விழுங்கினம்
தேவாங்கு போலையெல்லே தேஞ்சும்
உருக்குலைஞ்சும் சாவாரைப் போலத்
தளம்பித் திரியுதுகள்
ஒருபிள்ளைப் பெத்து விட்டு
நோடலாம் கொட்டுகினம்
வரிய மொண்டாய்ப் பத்து
வதவதெனப் பெத்தும்
குமரியைப் போல அசையாமல் வேலை
நிமிராமல் செய்வம்
நினைக்க முழிக்க முன்னம்
என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறளை அறுக்கிறனோ
அப்பிடித்தான் சொன்னாலும் சொன்னியள்
சொல்லுவியள் சொல்லுவியள்
நாஊறு பட்டுப்போம்
நான் சொன்னால் கேலியில்லை.

நாளைக்கிதுகள்
நமைச் சுத்திச் சூழுகிற
மூளை குறைஞ்ச
முழு மொக்குச் சாதிகளை
நிண்டு நிமிர்ந்து
எதிர்க்கெல்லே வேணும் ஏன்
மண்டையைப் போட்டுக்
குழப்பி மயங்கிறியள்?
உண்டுரமாய் நிண்டே
உழைக்க முயலுங்கோ!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கறை இல்லையோ?

ஊர்முழுதும் தீப்பிடிச்சுச்
கவாலிச்சு எரியுது
பார்க்கிறம் நாம்
காவல் எண்டு வந்தவனே
கொள்ளி வைச்சான்

ஊர் முழுக்கத் தீ
பரவி முளாசிக்
கொழுந்து விட்டுக்
குஞ்சு, குருமன்கள், பிஞ்சு
காய், நெத்தல்
என்று எல்லாமே ஒண்டடியாய்
அன்றாடம் அன்றாடம்
வாடியும் வெந்து கருகியும்
நாறுது!

தீயணைக்க
நீர் மொண்ட தண்ணீர்க்குடம்
உடைஞ்சு மண்ணோடு
மண்ணாய்
மறைஞ்சு முடியுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டைக் குடத்துள்
ஒருசிறங்கை தண்ணி விட்டு
மூண்டெழும்பும்
தீயை அணைக்கிறம்பார் எண்டு
சொன்னார் போட்டு விட்டு
ஓடுகின்றார் குடத்தை
கரையோரம்
கொள்ளி செருவின கள்ளனோ
நூர்க்கிறதாய்
மெள்ளமெள்ள உள்
புகுந்து
மேல் விலைச் சாமான்கள்
உள்ளதெல்லாம் சுருட்டி
உசாராகத்
தன் ஊர்க்குக் கொண்டுபோய்
வைத்துவிட்டுக்
கூட்டாளியோடு பின்னும்
அள்ளி எடுக்க வந்தான்
அங்கலாப்பாய்பால்
அவர்கள் பேராசைப்பட்டுப்
பிழையைப் புரிஞ்சு கொண்டும்
கால் கை வெதும்பி
இதயம் அவிஞ்சு
போய் வால்கட்டிப்
பொய் சொல்லி
உதவிக்கு வந்தவர்க்கு
வஞ்சனைகள் செய்ததாய்
கட்டுக் கதைகள் அவிழ்த்து
விடுகின்றார்.

தீயை
அணைக்கத் தீர்வொன்று
காண்தபறற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிப் பறைஞ்சு முடிவெடுப்பம்
வாருமெண்டு
ஆலோசிக்க அழைத்தோர்
அலட்டிப் புசத்துகிறார்.

நாலு திசைகளிலும்
கங்கில் பறந்து
நெருப்புச் சுவாலைகள் நாக்குகளை
நீட்டிப் பக்கத்து
ஊரெண்டும் பாராது
மூளுகுது!
நெருப்பணைக்கும் எந்த
நெடும்படைகள் வந்தாலும்
சரிக்கட்ட ஏலாது
சட்ட வரம்பின்றி வெக்கை
கலக்குது காற்றோடு அனல் கிழம்பி

அணைக்க
அடுக்கெடுத்த அயலூரார் பின்வாங்கிக்
கணக்கெடுக்க மாட்டாமல்
கனகதைகள் பேசுகிறார்
ஆகாயம் முட்டி அனல்
பிளம்பு கக்குது.

பட்டி அடைப்புக்குள்
நாம்பன் திமிறுது
கட்டையிலே
கட்டி இருந்த கயிற்றோடு
மூசிப் பிடுங்கிப் படலைக்கு
இடிக்குது!

எங்கும்
தீக்கால்கள்
கொள்ளிவால் பேயாகிப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியுது! பத்தி எரியுது!
ஆடு, குட்டி எல்லாம்
அழுது களைக்குது
நாய் சிலது
வெந்த இறைச்சிகளுக்கு
ஊம்பிப் போய்க்
கடிச்சு
நாக்கு வெந்து
ஊளையிடுதுகுது.

ஊரையே மட்டுமென்ன,
உலகையும் இத்தீ
அழிக்கும்!
தீயணைக்கும் அக்கறை
ஆருக்கும்
இல்லையோ?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண நனவுகள்

விளக்கைக் கொளுத்தக் கொளுத்த
விடாமல் கழட்டி அடிக்குது
காற்றும் நெடுக
விளக்கிலோ எண்ணெயில்
ஊடுபத்திப் பத்தித் திரியும் கருகக்
காத்தும் அடிக்குது
எரியும் சுடர் ஆடி நடுங்கிச் சுழலுது.

படுகொலைப் புதராய் வடக்கும் கிழக்கும்
அடக்கு முறைக்கீழ் துவக்குப் பட்டுப்
புனிதம் பூக்கும் துடக்குப் பட்டு
மனிதம் புதிய பதிவில் எழும்பும்.

“செல்” விழுந்து சீவன் நெடுக சில சாகும்
கொல்லவிட்ட சண்டாளர் கூட்டம்
புறப்பட்டு சல்லடைபோட்டுத்
தவிச்சமுயல் அடிக்கும்
கல்வீடு கொட்டில் எரியும் சரியும்
எல்லாம் தரைமட்டமாகித்
தரை தட்டும்.

“பொம்பர்” கரணம் அடிச்சுவிட்ட
குண்டுபட்டுச் சம்பலாய்ப் போன
உயிர்க் கதைகள் கேட்டுமனம் வெம்பி
கலங்கி அழுது விழி பிதுங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை வேர் பாறிக் கொப்போடு
அடிசரியும்
குஞ்சுகள் பிஞ்சு குடல் சிதறக்
கண்டு பொறி நெஞ்சில் எழும்பி
நெருப்புத் துயர் கிளம்பும்.

மரண வலய வாசல் படிகள்
படுகொலைக் களமாய் அடிக்கடி
சடுதியில் மாறிச் சந்நதம் கொள்ளும்.

சோக சித்திரம் முகிழ்க்கும் சுவர்கள்
சுவர்கள் எழுப்பும் சுதந்திர வேகம்
அவதிப் படுகிற புதிய உணர்வுகள்.

அளப்பி மழுப்பி அதட்டி
அடக்கிக் கிளம்ப விடாமல்
சுதந்திரமூச்சைப்
பயங்கரவாதிகள் போர்வையுள் மூடி
நயம்பட நாக்கு வளைக்கும் தந்திரம்.

கொண்டுவா எண்ணெய்
திரியிடு ஊத்து
புழிஞ்சு திரியில் சுடரைக்
கொளுவு
அணையா வெளிச்சம்
வரட்டும், விடாதை தீமூட்டு
எங்கடை மற்ற இளசுகளாவது
இருட்டில் இருந்து வெளியே
வரட்டும்.

சுதந்திரமாய் இக் காற்றை
சுவாசித்து மூச்சுவிட
சாகத் துணிஞ்சு எதையும்
சகிக்கப் பழகி விட்டம்.

மரண நனைவிலே
விறைப்பேறி நிற்கிறம்
பரணிப்படைப்பம்
படையொன்று
எடுப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்க்கோலம்

புளிகளில் பலமந்தி புணர்சுகம் புலன்பஞ்சி
தெளிவில சிலகுந்தித் தினவொடு களைதீரக்
கிளைகளிற் கிடந்தாறக் கிளிமொழி தடையாகத்
துளிரொடு பூபிஞ்சு தொலைகிற துயர்தோயும்.

கார்த்திகைக் கொடி ஏறும் கரும்பனை எழில் சூழ
பார்த்தவர் மனஞ் சாயப் பனி மலர் புனை கோலம்
ஊர்க்கதை பல வாயில் உளறிட அறியாதே
வேர்த்து அவர் சிலர் ஏக வெயில் இடை ஒயில் மின்னும்

மாமர மலர்த்தேனை மாந்திய சிறு தேனீ
காமமும் தலைக்கேறக் கள்வெறி கலை யாட
பாமரன் தடுமாறும் பான்மையில் நிலை மாறிப்
பூமடி இளைப்பாறும் புதுமைகள் உணர்வார் யார்!

மாடிகள் படியேறி ஆடுகள் விளையாடச்
சோடிகள் சில சேரச் சூதுகள் அறியாதே
ஓடிய சிறு பெண்கள் தாயிடம் உரைவார்த்தை
சூடிய மயல் கண்ணில் சுடர்விட அவர்சோர்வார்.

அம்மியில் அரைபாகம் அதனிடை அசைபோடும்
செம்மலர் இதழ்வாயில் சிறைபட முடியாத
மும்முரம் முகிழ்பாடல் முணு முணுப் பிடையோட
கம்மிடும் ஒருவாசம் காற்றிடைக் கசிவாகும்.

சங்கொடு அலைசாயும் மணபடு தரைமீதில்
நுங்கொடும் அணில்மாயும் பெண்பனை உயர்வானில்
நங்கையர் இடைதேயும் நம்பியர் தொழில்தோய
மங்கல இசை மேய வாழ்வியல் நடந்தேறும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருக்காய் காவல் ஆண்டவரே ஆண்டவரே!

திரியிலே மூட்டிய தீ
நீர் நனைச்ச காரணத்தால்
எரிய மறுக்கிறது
இருட்டிக் கறுக்கிறது
ஊரில் பொறியில் ஒழுங்கைவரை, ஊறிப்பார்.
வாரக் குடியாய் வளர்ந்த தென்ற எண்ணத்தில்
சோரம் போம் என்றவர்கள் சொப்பனத்தில்
இக்கணமும்
ஈரவிறகில் நீ நெருப்பா மூட்டுகிறாய்
பொறி பட்டுச் சுட்டுப் பொறுமை கலைகிறது.
கறிச்சட்டி நாய் காவக்காவல் இருக்கிறது
உறிகட்டி வைத்தாலோ
பூனை மேல் காத்திருக்கு
இருட்டு இருட்டென்று
“ராக்குருவி” கத்துகுது
மருண்டமனங்குலைஞ்சு மறுகித்
துவள்கிறது
ஆறிக் கிடக்கும் நெருப்பா
அடிக்கட்டை
நீறிக்கிடக்கும் நெருப்பா
நெடுந்தொலைவு
சீறிக் கிளம்பித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகிக்கத் தவம் கிடக்கும்
ஈர விறக்கா, இருமல் செருமலிடை
ஊர் வெயில் காய்ந்தும்
உருவெடுக்கப்போகிற
ஊழித்தீ மூச்சா
ஆருக்காய் காவல் ஆண்டவரே!
ஆண்டவரே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தனி வீட்டின் சோகமும் முற்றமும்

மொக்கு முடக் கில்லாத கன்னிக்கால் என்று
அன்று இ அக்காள் கலியாண வீட்டுக்கு நட்டு
இன்று கொப்பும் கிளையுமாய் நிற்கிறது
முள் முருங்கை,
இப்போது ரத்தச் சிவப்பான பூக் கொத்தை ;
அப்பு நடச் சொன்ன அந்த மரம்
கன்னிக்கால்
உச்சி சுமந்து நெடுத்து உயர்ந்து
முற்றத்தின் பக்கத்தில்
நல்ல பசுமையாய் நிற்கிறது.

பூ வெடுக்கும் பண்டாரம்
பொன்னொச்சி வெள்ளெருக்கை
ஆவலொடு தேடி அலைந்தாலும்
இப்பூவைக்
கண்ணெடுத்தும் பாரான் ;
கதையிலே விட்டாலோ .....
“செண்டு கட்டி யெல்லே சினிமாப்படம் எடுக்கக்
கொண்டுபோகப் போறன் பார்!” என்று சொல்லி
வண்டி தடவி ஒரு வாய்ப்பந்தல் போடுவான்.

கண் விழிக்க முன்னும்
அதிகாலை காகங்கள்
முள் முருக்கம் பூச்சீப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மைனாக்கள் தேன்குடிக்கும்.
வெள்ளி கிழக்கே முளைச்சாலே
கும்மாளம்.
பிள்ளை படுக்கை நனையக்
குரல் எடுத்துத் தாய் அணைப்பைத் தேடும்;
(மார்புள் முகம் புதைக்கும்)
... .... .... அடுப்படிக் குள்ளே
பழஞ்சோற்றுப் பானைக்கு தத்தன் விழுந்து
முழுதும் பசுமாட்டு வாளி நிரம்பும்.

மா முழுதும் மூடிப் பரவிப் படர்ந்து
குருவிச்சைக் கொப்புத் தறிப்பதற்கு
தெருவிலே ஆன் தேடிப் பயணம் தொடர்கிறார்.

முற்றம்
புலுணிப் பட்டாளம் வந்து தரையிறங்கும்
கிலு கிலுப்பை போல் இசையில்
வேதங்கள் ஓதும்கறி முருங்கை சுற்றி அடியில்
படிந்த மயிர்க் கொட்டி கொத்தி
உதறி விழுங்க
மயிர்க் கூச் செறியும்
மறுபக்கம்; செண்பகம்
கண் சிவந்து பார்க்கும்
சருகு இடறும் காலாலே
சொண்டால் சரை பொறுக்கிப் போடும்
பின் மண்ணிலே
ஊருவதை மடக்கென்று தின்றுவிட்டு
ஒன்றும் நடவாத பாவனையில்
சாதுவாய்
கண் சிவந்து போகும்
காலை இளஞ் சூரியன்
அண்ணார்ந்த பார்வையிலே
வியர்வைக் குரு மேலே
ஊசி மருந்து ஏற்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவல்

கிடப்பமென்றால் முடியவில்லை,
விடாமல் வீட்டு நாய்
நெடுகக்
குலைக்கச் சாமஞ்சாமமாய்ப்
பயங்கரக் கற்பனை
சாமியை வேண்டிக்
கேரும் இதயம்
காவலுக்காக
வளர்த்த வீட்டு நாய்
தேவை யிலாமல் ஏன் குலைக்கிறது.
பார்க்க ஏவும் மனம்
பயத்தாலே
வேர்த்துக் கொட்டி வடியும்,
குளிரிலும்
காவல் நாயே
கடித்துக் குதறும் கேவலம்
ஊரில்
நடப்பதை நினைக்க
புதிய வர்மம் துயரில்
பூக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தின் கோடைத் தழும்பு

கிஞ்ஞா அலம்பலிலே பூப்பூத்த வாசம் வரும் :
“மைஞ்ஞா “ அதைக் கடிக்கும்.

மறி துரத்தும் ஓர் கிடாய்:
துள்ளி எழும்பி முணுமுணுத்துக்
கூர்க் கொம்பாய் உள்ளதைக் காட்டுதல் போல்
பக்கம் தலை சரிக்கும்
கிட்டப்போய்த் தள்ளினால்
பின்வாங்கி முன்னங்கால் இரண்டையும் தூக்கி,
எழும்பி இடிக்க வரும்.

கரும்பைக்காய், பூ, பழமாய்
முள் மேற் கொலுவிருக்கும்.

இருப்புக் கொள்ளாமல்
எதுக்கோ மனம் துடிக்கும்.

நிழலில் அசைபோடும் விடுகால்
மாடுகள்.

சோடி அணில்கள் துரத்தி விளையாட
மாவீலங்கை
பூமி மகள் மேனியெலாம் பொன்சொரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடைகளோ குஞ்சுகள் முன் போகப் பின் போகும்,
கோடை நிலையில் காற்றும் மௌனிக்கும்

ஆடை நனைக்கும் வியர்வை
பிசு பிசுப்பு,
வெய்யில் குளிக்கும் கரும்பனைகள் உச்சி முதல்
சாணி பொறுக்கித் தலைசுமந்து நிற்பவளில்
காணிக்கை யாகும் புதிய அழகொன்று
நலம்புதுக்கா நாம்பன்
வெறிப்பார்வை:
நெஞ்சைக் கலங்க வைக்கும்.

கட்டில்லா விடுகாலி முன்னாலே
அணில் அறுத்த நொங்கு
பாளைவிட்டுக் கீழை விழும்.

துணிவில்லா நெஞ்சில்
ஓர் சோகம் படம் வரையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் சுதந்திரம்

பகல் பட்ட அந்த வீடு
ஒட்டறை நகையிட்ட தோரணக் கூரை.
குசினிப் புகை நக்கிக் கறுத்த யன்னல்
முகடு சிகை கொட்டி
ஓடு தெரிகின்றது போன்ற வகை
எட்டி நோக்கு விழிகள் விருந்து
பொரிகின்ற வாசம்
சமையல் புரிகின்றது
கரி பூசி நின்ற நிலவு
கனவு திரைகின்ற
ஈரவிழிகள்
முகிலோ சரிகின்ற நேரம்
அழல் அயல் நின்றதே
தீட்டுப் படாத அரிசி மணி
கிளைந்து கூட்டிக்
கொதிக்கும் பானை - உலையுள்
போட்டுப் புதுக்கிப்
பசிக்குக் கொடுக்கும்
ஈட்டுக்கு வைத்த கவிதை
என் இதயத்து வாழும் வனிதை
இசையாழ் இசையாள்
எழுகின்ற மொழியாள்
வேதமொழியாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கினி ஹோமம் அல்லது வாழ இருந்த கொக்கு

வேலி கிடுகு அடைப்பு
உள் வரிசை முள்கம்பி நாலு வளமும்
நடுவில் இரும்புக்கேற்ப
பித்தளை "யேல்" பூட்டு
பெரிய தடிப்பு எழுத்தில் "கவனம் கடிநாய்"
படலையிலே தொங்கும்
தவமிருக்கும் மவுனம் குடிபோன வீடோ?
காஞ்சிபுரம் சேலை கனகாம்பரமாலை
பூஞ்சிட்டுப் போலப் பொடிச்சி
வடிவழகி
வீட்டில் கொலு இருத்தி விட்டிருக்கு
ஆரேனும் கேற்றடிக்கு வந்தாலே மோப்பம் பிடிச்சுவிடும்
தூற்றல் தொடங்கி கொதி எழுப்பும்

அவ்வளவில் நாற்றம் எடுக்கும் மண்
நாசு அரிக்கும் தும்மினால்
ஆற்றை நினைப்பில் என ஆவேசம் கொண்டு
எதையோ சோற்றுக்குள் வீசிப்
பழஞ் சேலையாய்க் கிழியும்
ஒற்றைக்கால் கொக்காக் மீசை அடையாளம்
நெற்குவியல் மேல் ஓணான் போல் நிறை அழிவு
தொண்டை வரண்ட விடாய்
எச்சில் வர மறுக்கும்
சண்டாள் நாக்குச் சவண்டொன்றும் பேசாது
ஒரு மிடறு தண்ணீர் கிடையாத வீடாச்சு
தாகத்தால் தொண்டை வரண்ட விடாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா ! முயற்சியால் ஆழ வெடிவைச்சுக்
கற்பார் பிளந்து அன்றே கண்ட தண்ணீர்
நல்ல தண்ணீர்
கற்கட்டு மெல்லே பொழிகல்லில் பக்கத்தில்
கலக்குப் பருவம் கவனிப்பார் இல்லாமல்
செவ்விளை இன்று குலை தள்ளி வாடுகுது !
தவ்வலாய் நின்ற தவண்டையடிப்புப் பார்
ஒற்றைக் கால் கொக்கு நரை மீசை காவலோ
ஆடுகால் பாறி அச்சுலக்கை தேய்ஞ்சதுலா
பட்டையும் பீத்தல்
கயிறும் பிறுதல்
ஒரு சொட்டுத் தண்ணீரேனும்
அள்ள முடியாத பட்டை எதுக்கு?
பரபரத்த பொய் வாழ்க்கை
"டை" அடிச்ச மைக்கறுப்பு
"ரை" ச்சுருக்கிலே கழுத்து
ஒரு வாளி தண்ணீரை அள்ளப் பலமில்லை
பூசைக் குதவாத பூவென்று தள்ளி விடக்
கூசாத நாக்கு நோய் கொன்னி நடுங்குதடி

மேனகையாம்
ஊரெல்லாம் மெல்லக் குசுகுசுக்கும்
மேனகைதான் மேல் எல்லாம் தங்க நகை ஆதலினால்
வைரத்தால் அட்டியல்
முழங்கை வரை வளையல்
மார்ப்பதக்கம் சங்கிலி மணநாள் அலங்காரம்
பார்த்தா (ல்) மதன் - ரதி
பார்த்தார் ஆர் உள் மனையல்
மூக்கைப் பிடிச்சால் தம் வாய் திறக்கத் தெரியா
சாக்குருவி ஆரூடம் சொல்லும் அறிஞர்கள்
அப்பா கொடுத்த வரம்
மீட்கா (து)
அடைவு வைச்சு
துப்புக்குதவாத் துடக்குக் கதையாச்சு
புழுதியிலே எழுதியதால்
பொற் கவிதை தொலைஞ்சுதடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியோர மொழி புரியா வேதனைகள் சூழுதடி
கழுதை அறியுமோ கற்பகப்பூ வாசனையை - எழுதாக்
கவிதைகளாய் - கிடந்து தவிப்பதனை
முழுகிக் குளிச்சவுடன் முன் நிமிரும்
கோபுரத்துக் கதவைத்
திறக்க முடியாத கை இருந்தேன்.

விதவை நிலை யாச்சுத் தாலி கழுத்திருக்க
புழுதிக்குள் பொன்மலரைப் போட்டு
மிதிக்கின்ற வழுதிகளைப் பாராட்டி
வாழ்த்துரைக்கும் இவ்வுலகம்
ஆராய்ச்சி பண்ணி அடி அகழ்ந்து
பார்த்துப் புரிஞ்சவற்றைப் பகுத்தறியச்
சொல்வதெப்போ?
ஆய்வகழ்வில் பொன்மலரை
அடையாளம் கண்டென்ன?
வாய்ப்பளிச்சால் இந்த வசைதீர்ந்து போய் விடுமோ?

நல்ல கிணறு நிலம், நாலு பக்கலும் வேலி
முல்லைக்குப் பந்தல் நடு முற்றம் "போட்டிக்கோ"
கற்சுவரால் சுற்று மதில் கட்டிடவும் காசிருக்கு
சாட்டித் தறை
விதைச்சால் பயிர்
உயிராய்க் கண்டிடலாம்
நாட்டாண்மை?
வாய்பந்தல் கொட்டுமழைக் கென் செய்யும்?
புல்லுப் பிடிச்சுப்
புதர் பற்றிப் போகிறதே
உழுது விதை விதைக்க ஓர்மமில்லை
யாரறிவார்? கற்பூவில் சிற்பஞ் செதுக்குதற்குக் காலடியில்
சிற்பியின் சிற்றுளி
செயலற்ற தேனடியோ?

வாடி இருந்த கொக்கு
வசமான மீன் விழுங்க நாடி நரம்பு தளர்ந்து ....
துடிக்குதடீ!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் நினைப்பு

தங்கத்தை அரைத்து பூசித்
தளிர்களில் அழகு பார்க்கும்
செங்கதிர்ச் செல்வா நேற்றெம்
தேசத்தைப் பார்த்த சேதி
இங்கு நீ எடுத்துச் சொன்னால்
இவர் நம்ப மாட்டார் என்றா
குங்குமக் குழம்பாய் மாறி
மேற்கில் போய் கொடுகுகின்றாய்

மாமரக் கிளைகள் தாவும்
மந்திகள், மணியின் ஓசை
தாமரைக் குளத்து நீரில்
தளம்பிட வரையும் கோலம்
சாமரை வீசும் தென்னங்
கீற்றுகள் அணில் துரத்தி
பூமரக் கிளைகள் சாயும் போதிலே
பாயும் கொஞ்சல்

செவ்வரிப் பலாப் பழத்தைக்
கொந்திய அண்டங் காகம்
கவ்விய சுளைக்குக் காவல்
இருக்கின்ற நாய்கள் கொப்பில்
பவ்வியமாகக் கூவிப்
பரவசமூட்டும் புள்ளிச்
செவ்விழிக் குயில்கள் எல்லாம்
சிதறியே ஓடிப் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பொடு மரங்கள் பாறித்
தலை குத்துக் காரணமாகக்
கப்பொடு கொட்டில் மாடிக்
கட்டடம் குடிசை அன்புக்
கொப்பிலாக் கோயில் பாட
சாலைகள் பேதமின்றி
சிப்பிக்குள் அழிந்த முத்தாய்ச்
சிதைந்ததோ பார்த்துச் சொல்வாய்
முகமற்று முழுமையற்று
முதுசொமும் இருப்பும் சொத்தும்
அகம் புற உழைப்பும் வாழ்வின்
அர்த்தமும் தொலைந்து போக,
சுகம் உயிர் பிழைத்த தென்று
சொல்லிக் கொண்டு எங்கோ ஓடி
நகம் கடித் தேங்கி வார்த்தை
நாவிலே வரண்டு போகும்

வானுயர் கோபுரத்து
மணிஒலி அபயம், நெஞ்சில்
ஊன் உயிர் உறுதி பெற்றே
ஒளிச் சிறகு உயர்த்தி நிற்கும்
ஞானமும் அவை புகட்டும்
நன்னெறி விளங்க வல்லார்
தானெவர் போவார் அங்கே
தரைமட்டம் அனைத்து மாமே

முத்திரை பதித்தாற் போன்ற
கலைகளை ஒருங்கே காண
பத்திரப் படுத்தி ஆண்டுப்
பட்சத்தில் ஒன்று சேர்த்து
வைத்த தோர் தேர்முட்டிக்குள்
வகை வகை வண்ணமான
எத்தனை சித்திரத் தேர்
இளசுகள் எழிலை ஒத்த

வயல் வெளி சுமந்த காதல்
வனப்புகள் அறுகம்புல்லாய்
மயல்கொள விரித்த பச்சை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதத் தரைகள், வேர்கள்
முயங்கிடும் வாசம், வேர்வை
மணி விளைவேலி நெல், கல்
வயல் புறப் பெருங் குளத்தில்
வளர் சணல் மஞ்சள் பூக்கள்
அயலெல்லாம் வண்டின் பாட்டும்
ஆடிடும் தென்றல் காற்றும்
இயல்பொடு தழுவிக் கொண்டே
இதந்தரும் இனிமை இன்பம்
சுயங்கெடச் சூறையாடிச்
சுழித்தழித் தெழுந்து சுற்றிப்
புயலென வந்த போரால்
புழுதியாய்ப் புதைந்து போச்சோ!

வரும்படி தர முன் நின்று
வழங்கிடும் செழித்து நீண்ட
முருங்கையும், மா பலாவும்
முன்பின்னாய் அணில் துரத்த
நெருங்கிய நாய் அண்ணாந்து
பார்த்து நா நீளத் தொங்க
இருந்திடும் அழகும் அங்கே
இன்று போய் யார் பார்ப்பாரோ?

தென்னையின் ஓலைக் கீற்றில்
கிளிகளின் ஆரவாரம்
என்னவோ செய்யும் நெஞ்சை
இரண்டு நா கணவாய் கொஞ்ச
சொன்னவை என்ன என்றே
அறிந்திட நிதம் துடிக்கும்
என்மன ஏக்கப் பாட்டை
இன்று போய்ப் பார்க்க லாமோ?

வண்டுகள் இரைந்து கொண்டு
வருவதும் பூவில் தேனை
உண்டபின் உறுமிக் கொண்டே
உயரத்தில் எழும்பி மேலும்
விண்கடந் தேக எண்ணும்
விதவித மலர்கள் கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் பனி கொள்ளும் கோலம்
கதிரவா கண்ட துண்டோ ?

எவர் செல வல்லார் உன்போல்
இயல்நிலை ஒழுங்கில் நித்தம்
எவர் உன்னைத் தடுக்கத் தக்கார்
என்பதை எண்ணி என்னில்
அவதிக ளிடையே சிக்கி
அலை கின்ற சரையாய் காற்றில்
சுவறிய அவலக் கோலச்
வடுகள், போர்ச் சுவாலை

உவமைகள் இல்லா வாறெம்
உழைப்புக்கள் உறிஞ்சி உண்ட
சவங்களாய் சீவன் எங்கோ
சந்துக்குள் ஒடுங்கினாற் போல்
தவங்கிடந் தனுங்கக் கூடும்
தாகத்தால் நாவரண்டு
தவிச்சுப் போய்க் கிடக்கும் போய் நீ
சஞ்சலம் தீர்ப்பாயோ சொல்
ஊழ் உற்ற நேரம் புத்தி
சித்தங்கள் ஒடுங்கி நிற்க
பாழ் உற்ற பாதை மேலாம்
படியென வழிய நீட்ட
வாழ்வுற்ற வளத்தை யெல்லாம்
வந்த போர் சுருட்டி அள்ளி
சீழ் உற்ற தேசமாக்கிச்
சென்றதைப் பார்த்தாயோ சொல்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்ஷேத்திரம் அல்லது
# அறி - குறி - கள்

ஆனை அறுகின் அடர்த்தி,
அடி மடிக்குள்
தேனீக்கள்
பூவில் திரண்ட மகரந்தம்
காலுண்ட கோலம்
கரைந்த பனித்துளிகள்
சாலுள் தலை சாய்த்துச்
சாய்ந்த கதிர்கள்
விளைஞ்ச வயலுக்குள்
நுழைஞ்சவன் போகானாம்
பயிர் செய்யும் நஞ்சை
பிடிச்சார் அடாத்தாய்
உயர் பாதுகாப்பு என்றே
ஒப்புக்குச் சொல்கின்றார்
காவல் என நினைக்க
சாவில் அது வேர் கொள்ளும்
பூனைக்கு முன்னால் நாய்,
நாயும் நகராதாம்
பூனையும் ஓடாதாம்
வாலைச் சிலிர்த்தபடி
நாய் உறுமப் பூனை
கால் நகத்தை நீட்டி
வெளிக்காட்டி வால் சுழற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட வழியில்லாமல்
சனம் படுற பாட்டுக்குள்
ஈப்பிணிப் பட்டாளம்
இருக்க விடுகுதில்லை
எங்கெங்கு பார்த்தாலும்
இருப்பதற்கு நேரமற்றுப்
பஞ்சாய்,
பறந்த சனங்கள்
தவம் கிடக்கும்,
சங்கக், கடைப்படியும்
சவச்சாலை வாசலுமாய்

பனாங்கிழங்குப் பாத்தியைப்
பன்றி இடறிச்
சனங்களளின்றை சீவியத்தில்,
சாப்பாட்டில்
கொள்ளிவைக்கும்

கவலை அவல் மென்(று)
அறியார் நம்
காவலர்? ஆம், இங்கே
அவரவற்றை சங்கை
அவர் அவரே ஊதுகினம்
அவர் அவற்றை சங்கை
ஆளாளே ஊதுகினம்
பாஞ்ச சன்னியத்தையே
கேட்ட பழக்கம்
அற்றோர்
பவுண்டரம் " தேவதத்தம்"
பற்றியெல்லாம் யார் அறிவார்
அவரவற்றை சங்கை ஆளாளே ஊதி
கவலை வளர்க்கும் கலையில்
சிலபேர் கலங்குகிறார் பல பேர்
புலம் பெயர மாட்டாமல்
அவரவற்றை சங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாளே ஊத
நாய்களும் கூட
ஊளையிடுகிறது

அநந்த விஜயத்தைத்
தருமர்
ஏன் ஊதுகிறார்?
மனந் தளராமல் இருந்தவர்கள்
அச்சத்தில் !
அச்சத்திலா காயம்
பூமி அனைத்தையும் பிச்செறியும்
குண்டு- முழக்கம்
அச் சூத்திரர்
ஊரெல்லாம் போய்
ஏதோ சொல்லித்
திரிகின்றார்
சாத்திரத்தில்
கிரகநிலை
சரியில்லை
என்கின்றார்.
குருஷேத்திரத்தில்!
குழப்ப நிலை கொண்டு ஆட்டம்
புண்ணுக்கு வீசமில்லை
மண்ணுக்கு
அலைகின்றார்
திண்ணை வெறிச்சோடி!
தெருவில் சடலங்கள்
அந்நிய நாய்
வந்து அடுக்களைக்குள்
உள் நுழைஞ்சு
அந்நியனாய் வந்தார்?
அடுப்படிக்குள் குழி தோண்டி
அந்நியராய் நாங்கள்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு - ஆற்று

மூலம் சிவலிங்கம்
மேலோ சில வெளவால்
காலை இரவென்று தூண்டா
மணிவிளக்கு - நீண்டமௌனம்
சிணுங்கி எிகிறது.
காண்டாமணி நாதம்
காற்றில் கலக்கிறது வேண்டுதல்கள்
அப்பனே! காப்பாற்று! காப்பாற்று!

மஹான பீடம் மௌன வடிவாய்
அகாலமாய் நாதமணி
அருள் குழைய அன்புற்று

சாவெற்றிலைக்குச் சுண்ணாம்பு பூசுகிறார்.
சீவலை மோந்து சிறங்கை அளவெடுத்து
வாயிலே போடுகிறார் வளவளெனப் பேசுகிறார்.

மணலில் புதைந்து கிடந்த
பழைய கணங்கள்
கிளறி எடுத்து மணந்து பிணிநெடி
நாசியுள் ஓடிப்புரைய வணங்கின்
கரங்கள் வாய்ப்பேச் சிழந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணை

கோழியும் குயிலும்
குறுக்கால் வண்டும்
யாழொடு பல்லியும் கறங்க்
இன்னிசை எழில் -
என்ற நயனம் தவிலொடும்
ஆலய மணியின் ஓசை புணர்ந்து
பாலயம் ஒன்று
படர்ந்து செறிந்து
காற்றிற் கலந்து காதிடைப்புகுந்து
ஊற்றெற மோகன
மோக முகிழ்ப்பில்
பவளமல்லிகை வாசனை
மனைதொறும் தவழ
விடிந்த முன்றில்
மகிழ்வெலாம் சென்றெங் கேகின
சிந்தை கலங்கிட
துவக்கின் துணையொடு
சவக்களை பீதி
அவச்சா அவலம்
அனைவர் முகத்திலும் கவலை
ரேகை வரையும் கணந்தொறும்
குருதி வெள்ளக் குளிப்பாட்டாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருதுயர்கரிய மேகம் சூழும்.
பாலைவனத்து ஆறலை கள்வராய்
மூலை முடுக்கும் முகாரியில் முயங்கும்
ஈரநெஞ்சின் வீரியம்
தகரும் சோரும்
மானிட நேயத் தொடர்புகள்
கொன்று குவித்தலைஇ குற்றுயிர் ஆக்கல்
என்ற முகாரியும்
ஆறலை கொள்ளையர் கொலைப் பொறி
விழுங்கப் பலிக்களம் வகுக்கும்.
நிலைக்களங்கத்தை தலைத்தலை
துணிக்கும்
பிஞ்சு மழலையா வஞ்சியர்,
பிள்ளைகள்
எஞ்சி
அநாதைகள் விதவைகளாக்கும்
நஞ்சினும் கொடிய நரகபாதை
வஞ்சக உபாதை வலை
யார் விரித்தார்
கஞ்சிக்காக கடைப்படி துஞ்சிக்
கெஞ்சிக்கிடக்கும்
கீழ்மை கெடுவைப்
பாலைப் பரிசெனப் பகுத்து
வகுத்த காலைத்
தணிக்கத் தவறிய கால காலனைக்
காய்த்தலும் கடனே!
சுருதி கலைத்துத்
தந்திகள் அறுத்துத் தெருவிற்
புழுதியில் வீசிய தாரோ?

ஜீவநதி - 2007

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபாஸதைகள்

மழை தூறிக் கொண்டிருக்கும்
வானம்
வெயில் எறிக்கும்
வில்வளைக்கும் கோலம்
எத்திக்கும் தித்திக்கும்
நிறங்கள் நீராடும்
அடைமழையில் குடையில்லை கையில்
மணிக்குயில் தேன் குழைக்கும்
மனம் குவியும் போகங்கள்
தினம் கவியும் சோகங்கள்
வேர் ஓடி வேர் ஓடித்
தீராத மோகங்கள்
தீரா மௌத்தின்
நீள் அலைகள்
மழை நனைத்த மணிக் குயில்
மணி நாதம் தேன் குழைக்கும்
வரன் மொழியும்
தேன் மழையில்
உயிர் காற்றே
உயிர்க் காற்றே
அடைமழையில்
குடையில்லை கையில்
நினைச்சு இருக்கா நேரம்
உன் கைபிடிச்சு
என் மனம் பிடிச்சே
நீ பாடுகின்ற ராகத்தில்
பால் ஒழுகப் பருகி
புரக்கடிச்சு உச்சி தட்டி
நாணத்தில் நீ திரையாய்........

ஜீவநதி - 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் அயல் சாட்சி

விடிய விடிய வெடி
சத்தம் முடிய
அழுகுரல்கள்
காப்பாத்துங்கோ
ஐயோ
காப்பாத்துங்கோ
குடிலடி கேட்ட அபயக் குரலுக்கு
யார் போவார்!
துடி துடிச்சு துடிதுடிச்சு
குறை உயிராய்ச் சீவன்கள் மூன்று
குடில் தழும்ப இரத்தம்
குற்றுயிராய்
முடியுமே போக மனிசர்
முனிக் கூட்டம் முன்மறிக்கும் வீதி
இனியும் கதைக்கிறம் - தேர்தலுக்காய்
"நீதிநெறி நிற்பம்"
"சாதியும் பார்ப்பம்"
சுவரொட்டி சத்தியமாய்.

ஜீவநதி 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளழ் வாய்

பூனை நக்கிய
தயிர்ச்
சட்டியில்
புதுப்பால்
கொதிக்கிறது.
பாலை விட்டவன்
பெருமை பேசப்
பூனை
காலை நக்கிக்
கடைவாய்
துடைக்கிறது.

ஜீவநதி 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புகள் ஊர் ஊராய்...

"அப்பூ
பெரிய ஒரு பாம்பு
அது நாக்கை நீட்டிக்
கப்புக்கு அடிப்புறத்தில்
கடவுளே
பார்க்கிறது.
எப்படித்தான் நாங்கள்
இதில் இருந்து தப்புவமோ"
இப்ப எதுக்கு நடுங்குகிறாய்
அது சாரையடா
சாரை
அது மஞ்சள் சாரை
"செட்டி நாகம் ஐயோ
பறந்து கொத்தப்போகிறது"
"சும்மா இரடா
அது சாரை
கொம்பேறி மூக்கன்
பிணைகிறது
வா போவம்"
அப்பு அப்ப தந்த
அந்த தைரியத்தில்
எப்படியோ
காலம் இரவு பகலாகி
அப்பர் தயவில் நான்
அப்ப சிறு பொடியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ இளந்தாரி
எதுக்குப் பயப்பிடுவன்
பாம்பு!
படம் எடுத்தால்
அடிச்சு தொலைச் சிடுவன்
ஆம்பிளை நான்
இப்போ அதுவும் இளந்தாரி
பாம்புகளோ
எல்லாம் இரட்டை விச நாக்கை
நீட்டியவை சீறுகுது
வெட்கமாய் கூட கிடக்கு
வெளியை வர
சட்ட மகுடியைச்
சரியாக ஊதுவர் யார்
கட்டுப்பாடுன்றி பாம்பு
ஊரும் நாடக-
பாம்புகள் ஊர் காடாக
பற்றை பறுகை விட்டு
பாதை முழுவதும்
என் ஒழுங்கை சிறு குச்சு ஒழுங்கை
என்று இப்போ பாம்புகள்
ஊர் ஊராய்
ஒற்றை நாக்கோடும்
இப்போ ஊர் எங்கும்
நாகங்கள் முத்திரை
புடையன்கள்
கண்டங் கருவழலை
மண் உண்ணிப் பாம்பும்
ஆள் விழுங்கும் மலைப்பாம்புக்கும்
அஞ்சாமல் வாழ்ந்தோம்
ஆனாலோ இன்றைக்கோ
நெஞ்சு பதறுகுது
நினைக்க, நடுங்குது
பாம்பு ஆட்டி
வாக்கு அள்ளப்
பட்ட பலன் எதுவோ!

ஜீவநதி 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை தரும் ஆர்வம்

விழுந்தவனே எழுந்திருக்க
அறிவான், எழுந்து இரு
எழும்திரு
தூக்கில் இட ஆயுள் உண்டு
தூக்கிவிட ஆர் உண்டு
காலம் மாற்றிய கனவுகள்
உண்மை முதல், இன்று எம் முன்
திறவாத படலைகள்
தேவாரம் பாடிப் பயனில்லை
உழை ஓயாமல்
உதை, மாறும் பருவ காலம்
எதிர் எதிர் விரட்டும் சவால்கள்
காலத்தின் முன் சிறகுகள்
பொறுமை எழு பற மேல்
எல்லை தாண்டிய சரியான
அறிவு  அநுபவம்
இன்னல் அகலும்
ஏற்றமுறும் வாழ்வு
பள்ளங்களைத் தாண்டி வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்ட முடியாதவை
வாழ்க்கை என்பது
சூதாட்டம் அல்ல போராட்டம் அல்ல
நீரோட்டம்
எதிர் - நீச்சலிடு
காற்றின் மெல்லிய விரல் இடுக்கு
இடையே பிரளய சங்கீதம்
புதிய தென்பதே
காலத்தின் நேரம்
பால் ஊறும்
பருவ காலம்
முதலில் மயக்கம் ஒழி
பின்னர் முதலில்
மயக்க மொழி
பின்னரோ மொழியால்
உலக இயக்க மொழி
மொழி சமூகத்தை
ஒழுங்கமைக்கும் கருவி
தாய்மொழி கருவூலம்
தமிழ் மொழி மயக்கம் ஒழி
தாய் மொழியில் தயக்கம்
அயல் மொழியில் மயக்கம் விடு
எழுந்திரு.

ஜீவநதி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டு சுடர்...

சுந்தரச் செந்தமிழ் பெற்ற சு.வித்தியானந்தன்
சொக்க வைக்கும்
மந்திரம்போற் பகிடி விடும் மா ஆசான்
வம்புகளால் மயக்க வல்லோன்
சொந்தம் அவன் திறமையெல்லாம் உலகிற்குத்
தூய்மை நிறை திறந்த நெஞ்சன்
எந்த வகைகேட்டாலும் இதயமுதல்
அனைத்தையுமெ கொடுக்கும் அன்பன்

நுண்மைகளை ஆராய்ந்து நுணுக்க நெறி
பலதோய்ந்து திறமை கூர்ந்த
உண்மையுறை சிந்தனைக்கோர் தூண்டுசுடர்
ஆராய்ச்சி வற்றா ஊற்றுக்
கண்ணிரண்டாய் கலைஞானம் கொண்டொளிரும்
கவினார்ந்த கீர்த்தி மிக்கோன்
எண்ணரிய புகழாளன் எம் வித்தியானந்தன்
பெருமை கொண்டோம்.

அண்ணாவிமார் அணைப்பில் கண்துயின்ற
அழகுமிளிர் நாட்குக் கூத்தைக்
கண்ணார மக்களெல்லாம் கண்டுமனம்
களிகூர்ந்து சுவைக்க யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாத காரியத்தைத் துணிந்து வந்து
முன்நின்று பார்த்து வைத்தோன்
விண்ணார்ந்த பழந்தமிழை முழுதறிந்து
கற்றுணர்ந்த விறல்சேர் வேந்தன்

நாடகத்தை நறைகமழுஞ் செந்தமிழை
கிராமிய நாட்டுக் கூத்தை
தேடரிய செல்வங்கள் தெரிந்திடுக
நீங்களிதை என்று மேன்மைப்
பாடறிய வைத்தவன் பேராசிரியன்
பழமையிலும் புதுமை காணும்
நாடறிந்த பேரன்பர் நலம்பலவும்
மிகமலிய வாழ்த்துகின்றோம்.

இளையதலைமுறையினர்க்கும் இனிய தமிழ்க்
குலத்தோர்க்கும் கலைகள் கற்க
விளையும் பல்கலைக்கழக வித்தாக
மாறி உயர் விருட்சமாகி
அளப்பரிய நிலாவரைபோல் அனைவருக்கும்
துணைவேந்தராய் விளங்கும்
தளம்பாத தனித்தலைவன் வித்தியானந்தன்
என்றும் தழைத்து வாழி.

வித்தியானந்தன்
மணிவிழா மலர்
1994


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வீட்டின் மினி ஒலிப்பதிவு

குஞ்சக்க என்னைக் குழப்படியாம் பாருங்கோ!
பிஞ்சில் பழுத்ததெண்டு என் பிடரியிலே குட்டுறா
கொஞ்சம் இதை ஒருக்கா(ல்)
சொல்லுறதைக் கேளுங்கோ!
அஞ்சக்கா மார் எனக்கு ஓ! அவ தான் கடைசி
கொஞ்சம் கிறேக்கி
கொழுவல் எடுப்பதிலும் ஆளோ வலு விண்ணி
ஆரேனும் வாய் கொடுத்தால் மீளவோ பாருங்கோ!
மீண்டால் அதிசயம்தான் எண்டெல்லாம்
எங்கள் அயலட்டை எல்லோரும்
சொண்டுரஞ்சிக் கொண்டிதைச் சொல்லித் திரிவினம்.

அலரி விதை திண்டு
ஆறுமத்தார் மோள் செத்த விவரம் முழுதும்
அது விளக்கமா(ய்ச்) சொல்லும்
ஏன் சரவணையாற்றை மோன்
சவுதிக்குப் போன பின்னர்
அவற்றை மனிசி போய் வயிறு கழுவினதாம்
இவவுக்கேன் இந்த இழுவல் கதை?
நித்தம் குமரி கொழுத்துக் குறுக்காலை போகுதெண்டு
அவள் பொடிஞ்சு தள்ளுறாள்
எண்டு அம்மா பேசுறா
ஆனாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சக்கா அலட்டல் என்று சொல்லேலா
ஏனெண்டால் பாவம் அது
எப்பவுமே பொய் சொல்லாச் சீவன்
எதையுமே ஆராய்ஞ்சு அறிஞ்ச பின்தான்
பாவம் எது சொன்னாலும்
அநியாயம் செய்யாது
கோவம் வராது
உவரை மூலக் கொதிய ரெண்டு
கூழைவல்லி போய் அங்கே கோள்முடிஞ்சு விட்டதால
வாழைத் தோட்டத்தில் அடிவைக்கவும் கூடாது
வந்தங்கை தண்ணீ(ர்) அள்ளவும் கூடா(து)
கடப்பை அடையுங்கோ
எண்டெல்லோ கந்தையர் அடிக்கத் தடிமுறிக்க
ஆச்சி போய்
"நீ சரசைப் பிடிக்கத் திரியிறதை" எண்டு
ஏதோ வாய் எடுக்க
முடிஞ்சுது சண்டை
முழு விபரம் அக்காவை
ஆரேனும் போய்க் கேட்டால்
ஆதியோடு அந்தமாய்
நேரிலை பா(ர்)த்ததுபோல்
நிசமாக - கட்டாயம்
ஆரிதுக்கு எல்லாம் கால்,
அடியத்திவாரங்கள், நேரம், நியதி
நெளிவு சுழிவனைத்தும்
வீடியோ செய்து வைச்சு
வேண்டும் பொழுது ஓடவிடும்
மெற்னி சோ வைக்கும்
அற்புதமாய் இருக்கும் அங்கிக்கு அரக்காது

"நாடி பிடிக்கிறதில் "நம்ப(ர்) வன்" ஆள்" எண்டுஞ்
சாடையாய்ச் சின்னக்கா
மெல்ல முணுமுணுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறாளடி குஞ்சு வாய் பொத்தடி!
என்று கூறியதும் அம்மா
கொடுப்புக்குள் சிரித்தபடி
"என்னவாம் சின்னக்கா, அம்மா?"
என மட்டும் சொன்னதுடன்
வேறு சோலி யொன்றும் இல்லாமல்
என்னை மட்டும்
கட்டிப் பிடிச்சு இறுக்கக்
கொஞ்சி விட்டுப்
பிஞ்சிலே பழுத்த தெண்டென்
பிடரியிலை குட்டுறா!

அண்டொரு நாள்
அத்தானைக் கட்டிப் பிடிச்சிருக்கக்
கண்டன் நான்
கட்டியம் சொல்லுன் என்றதுக்கே
மண்டாடி நிண்டு
"அவரோ குண்டு விழப் போகுதெண்டார்
பயந்து பிடிச்சனெண்டா"
இதனைப் போய்
சொண்டுரஞ்ச நானுமென்ன
சூடு சுரணையில்லாப் பெண்டுகளே!
பிஞ்சில்பழுத்ததெண்டேன்
பிடரியிலை குட்டுறா?

மல்லிகை 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் திரும்ப

போர் விழுங்கிக் கக்கிய
பூமியைப் போர்த்து
தம் வேர்விட்டு நின்ற பற்றை
வேலி எல்லை ஏதும் அற்று
தலை இழந்த தென்னை பனை
என்னை வரவேற்கும்
நிலை இழந்து ஆடாமல் நிற்கும்
இதயம் படபடக்கும்.

பூழைவடி கண்ணோடு
தேவாங்கு வேலிகளில்
ஆளை அடையாளம்
காட்டிவிட ஓலமிடும்
ஆள்காட்டி வானில் பறந்து
குரல் கொடுக்கும்
தாள் பிரித்த குஞ்சுகளாய்
வந்த குடிமக்கள்
கூடுவிட்டு ஓடச்
சிதைந்த சிறு கூடாய் மாடிமனை
மண்குடிசை யாவும் சமமாகி மேடுகளாய்

குட்டை நாய்க்கூட்டம் பின் தொடர
துப்பாக்கிக் கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்த கட்டை கண்ணோட்டம் ஆங்காங்கே
பாலைப் பிராந்தாக
பாசியைப் போல புல் அடர்ந்து
மூடிப் படர்ந்து
மிதி வெடிக்குக் காப்புப் படிக்கும்
பயன் சொல்ல நன்கு இதமான ஆளின்றி

அண்டங்காகங்கள் இங்கு
ஆர் வீட்டில் கொண்டாட்டம்
சோறுண்ட வட்டில்
தெருவில் நசிந்து போய்
சேறுண்டு காய்ந்து செடிக்கடியில்
பற்றை அலம்பலிலே
கொவ்வைக் கொடி படரச்
சற்றும் பொறாத கொடி நெருஞ்சி முள்பரப்பி
மஞ்சள்ப் பூச்சூடி மயக்குநீ
மதிச்சவரைக் கொஞ்சம் உசுப்பிவிடக்
கண்கள் மணிதிரட்டும்.

பெற்றதாய் தோள் மடியில்
பெரும் பொழுதை முற்றத்து மண்ணில்
தவழ்ந்து விளையாடிக்
கற்றதும் கற்பிக்கப்பட்டதுமான
புதுக்கதிர்கள்
ஆறி அடங்கி அலுப்போ அச்சாம்பலுக்குள்
நீறாய்க் கிடந்த நெருப்புப் பொறி ஒன்று
உள்ளங்கால் பட்டு உச்சிவரை பிளந்து
பாறி அடிசரியப் பார்வை நிலைகுத்தி
அண்டம் சிதற எழும் "ஐயோ"
அதை அடுத்துக் கொண்டு வந்தார்
கூச்சல் குழறல்
வீடடைய வந்தவனின்
கால் உடைந்து போயிற்று
மூடிக்கிடந்த மிதிவெடி மேல் மிதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்து கரையாத எச்ச எலும்புகள்
புதைந்தோ எரிந்தோ போகாததனால்
கதைக்க முனையும் மவுனமாய்
முகமுகக்கை வீடிடிந்த முற்றத்துக் கற்குவியல்
மூடிச் செழித்துப் பழுத்த பழம் பொறுக்க
சிவந்த விழிக் குயில்கள்
கூடி இருக்கின்ற "தாட்டான்" குரங்குகள்
"நைக்" காட்டிப் பல்லிளிக்க ஓடி
ஒரு கல்லெடுத்து வீச வெடிச்சத்தம்
தூசு கிளம்ப மண், கல், அள்ளி மேல் வீசும்
நேசித்த மண்ணே நம்
கண்களிலே மண்போடும் பாசங்கள்
கால் இழந்து பச்சை இரத்தம் பாய்ச்சி
பலிப்பீட முன் ஆடாய் நின்று பதறுகிறார்

வேலி, மதில், கதியால் வேம்பு பனி என்றெல்லாம்
காலை தொடங்கி கலகம் அயலோடு
ஓயாமல் வாழ்ந்த நாம் ஊமைகளாய்
செய்வதறியாச் சின்னஞ்சிறு சிறுவர்போல்
எய்தவர்கள் யாரோ?
இறந்தவர்கள் யாரோ?
செய்தவர்கள் யாரோ?
வேலிக்கு வேலி நிறம் மாறிப் பச்சோந்தி
கால் இடுக்குள் ஓடிக் களேபரத்தை
உண்டாக்கக் கறையான் குவியலிலே
ஓணான் தலையாட்டி நிறைய வயிறு
முயலொன்று வெடிகேட்டுத் தட்டழிந்து ஓடும்
தலைதெறிக்க இடிபாட்டுக்குள் ஓர் புடையன் சீறிப்
புரள்கிறது.

மல்லிகை 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கவிஞனின் பிரிவு

காரை செ.சுந்தரம் பிள்ளைக் கவிஞன் மேல்
ஆராத காதலுடைய பெரியோர்கள்
ஈரநெஞ்சென்னை
இவண் இழுத்து வந்திருக்கு.
நிலை நீரில் நிறை கலத்து
படுமாரித் துளி போல
கலை மலிந்த தமிழ்க் கவிதை மலை நிமிர்ந்த
செழும்பரப்பில்
தேனாறு பாய விட்டோய்!
அன்புற்றார் அழ, நீத்து அகன்ற அருங்கவிஞ?
இன்புற்றவேளை (இன்புற்ற ஏழை)முன்
இன்றுன்னை முன் நிறுத்த
அன்றெம்மை அரவணைத்த நேரம்
அரவணைத்து (அரவு அணைத்து) நின்று நிமிர்ந்து
உன் சிறகு இடுக்குள்
ஒன்றிவிட
சென்ற நெறி நீழல் ஆறி
நெடுமூச் செறிந்து இன்று கலங்குகிறோம்.
ஒன்றா உனது செயல்
ஒன்றா!
உனது உறுதி நிறைந்த செயல்
சண்பகப் பூப்போலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து அவர் கலந்தவர் நாமத்தைப் போலக்
கவினறிவாய்!
கலந்தும் கலங்கல் இலாதாய்
எமைப் பயந்தாய்
நலம் பயப்பாய் நட்பாய்
நட்பாய் நிலைப்பாய்
நட்பாய் நிலைப்பாய்
விழிப்பாய்
பாய் இருள்
பாய் இருட் பரப்பைப்
பகல் விழுங்கினாற் போல சேய் எமைச்
சேவிக்க,
சாயங் கழற்ற வருவோர்க்கு முன்னாலே
தீயாய் எழுவாய்
திசையின் பெரி விரிவாய்
வட நூற்றுறையும்
தென் திசைத் தமிழும்
விதிமுறை பயின்ற
நெறியறி புலவ!
பனி பொழிய, மழை பொழிய
பாலை நிலாப் பொழிய இனிய பல இரவு,
பகல்!
அன்றெல்லாம் ஒன்றாக இ.நாகராஜன்,
கந்த வன மம்பி,
அரியாலையூர் ஜயாத்துரை
என்றிவர்களோடு ஒன்றாக - நானும்
கனி அமுதக் கவிதைகளை
அரங்கேற்றி அரங்கேற்றி
மனித குல மாண்பை
மாண்பார் தமிழ் குலத்தின்
புனிதப் பணியைப்
புடமிட்ட செந்தமிழில்
பாலாக்கி நின்று பரணி படைத்தவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர்ந்து போனோம்
நாமோ!
தனி மரங்களானோம்.

வாரம் சில முன்னர் வயல் வரம்பில்
நிற்கின்றேன்.
தண்ணீரில் மூழ்கித் தலை காட்டும்
ஊர்க்குருவி - ஆள்காட்டி
வாலாட்டிக் கத்தும்.
வயல் கடந்து வீடு வரவும்
வழியில்
இயல்பிழந்து நெஞ்சு!
இதயம் படபடக்கும்
வீடுவந்து சேர்ந்தாச்சு
வேர்வை வழிகிறது
சூடான கோப்பி மணஞ் சுமக்கும் காற்று
கறி முருங்கைக் கொப்பு
அண்டம் காகம் இருக்க முறிகிறது
மனம் முறிய!
மூக்குளையும் வேளை மகன்
“காரை போய்விட்டாராம் லண்டனிலை”
என்றபடி
“பாருங்கோ” என்று அந்தப் பத்திரிகை மடி போட
காரை கவிதைக் கடலுடன் கரைந்து
நின்றார்
ஆர் அறிய வல்லார் அதை.

மல்லிகை 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமான கலகம்

பல்லி கேட்டது
"நான் வாய் திறந்தால் உன் நிலைமை
என்ன?" என்று
"நான் ஒருவருக்கும் சொல்லமாட்டேன்"
வால் ஆட்டிற்று நாய்
ஆடும் அதற்குத் தலையாட்டிற்று
"எல்லாம் எனக்கு நல்லாய் விளங்கும்"
மாடு ஒரு பார்வையால்
நாக்கையும் நீட்டி மூக்கையும் துடைத்தது.
வாலால் வீசி முதுகு துவட்டிற்று
சுவர்,
துப்பாக்கி தூக்கி ஷெல் வராத வரை
சுவாமி என்னிலும் இருப்பர்
கதவு, யன்னல், கூரை
ஏன் பூட்டும் திறப்பும்
உறவும், கற்பும் இருக்கும் என்றது
காற்று ஓங்கிக் கதவை அடித்தது
காகம் இருந்து கரைந்த
முருங்கைக் கொப்பு முறிந்து வீழ்ந்ததே!

புதுவசந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்தல்

சரசமிடும் காற்று,
சலியாது நித்தம் வர
விரும்பும் மாஞ்சோலை உள்
வளவுள் ஓடித் துரத்தி
உறவில் திளைக்கும் வரி அணில்கள்,
கரிய சில அண்டங் காகங்கள்
வல்லூறு கொத்திக் கொண்டோடும் கொடுமை
குயில் கண்டு கத்திக்
கூ.........! கூ.........! வென்று
கண்கள் சிவப்பாகி,
மாம்பழும் கொத்தி
மரமீதிருக்கின்ற காம்பறுந்து
வீழ்ந்த கனிக்காய்
கவலை யுறும்
அல்லாரை, கச்சாய், அதற்கு அப்பால்
ஓ வழி செல்லக்
கிழக்கே கிளாலிக் கடல் விரியும்
எல்லை முழுதும் இரவு பகலாக,
“செல்“ விரையும் ஓசை
செவிடு படும் காது
தென்னோலை பின்னி
துரவிறங்கி நீரள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிச் சுமந்து
தலைகுளிரப் பிள்ளைகளில்
உச்சி குளிர - நிதம் ஊற்றி
வளர்த்த பிள்ளை
காய் சுமந்து நிற்கின்ற காட்சிகளைக்
காணாது போய்க்கிடந்து
பிச்சையாய்
எச்சில் பிழையிது பாருங்கோ
உண்மையில்
அச்சத்தில் வாழ்க்கை அறும்.

திருவுடையாள் - பிரதேசமலர்
கரவெட்டி

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் கவியும் மாலை முகம்

வானம் வியர்வை பூக்கும்
வெள்ளிகளாய்
உருள் பூமிப் பரப்பு எங்கும்
வடியும் நிலா
உயிர்ப்பு எய்தும்
முல்லை பூக்கும்
காகம் கரிக்குருவி
காலைக்குத் திருப்பள்ளி
எழுச்சி பாடும் - பாட
மோகமுறும் பரிதி
கீழ்வான் முற்றமுடன்
தழுவுதற்கு கதிர்க்கை
நீட்டும்
தாகமுறும் நில மடந்தை
தண் நிலவாய் குளிர்ந்த மகள்
நாணம் பூப்பாள்
சோகத்தை இசைத்த குயில்
வன்னி வனம்
சூறையாடும்
சூதாட்டம் கண்டு கண்
கலங்கிப் போகும்.

தாயகம் 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா தம்பி உறவுகள் அல்லது அதிகாரங்கள்

எப்படியோ நீங்களும்
எங்களது மேய்ப்பர்கள்
தப்பிவிடாமல் தடி கொண்டு சாய்ப்பதிலே
இப்போது நீங்கள் அனுப்பிவைத்த
உங்களது மேய்ப்பர்கள்
எங்களை மேய்ப்பர் அறிவீரோ?
இப்போதோ
எங்களுக்கு இங்கே வருமானம் எப்போதும் இல்லை
எனினும் அவர் மேய்ப்பர்
சப்புச் சவர்கள் சரிக்கட்டி விட்டவற்றை
உப்புப் புளியின்றி
உண்ணத் தொடங்கியதால்
இப்போதும் எங்களுக்கு இங்கே
வருமானம் இல்லை எனினும் அவர் மேய்ப்பர்
தடிகொண்டார் நெஞ்சம்போல்
எங்க(ள்) மடி தடவி
குடி கொண்டு கோல் ஓச்சி
எல்லாம் குடிபோக அடிகிண்டி.............
ஆரார் அழுதாலும் செத்தாலும்
குலையோடு வட்டுதிர
குட்டி, பனை தென்னை, மலை போல கோயில்,
மணிக்கூடு, கோபுரங்கள்
நிலைகுலைந்து முற்றும் பொடி சாம்பல், ஆனாலும்
எங்களை மேய்ப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது மேய்ப்பர்
குறிசுடுவர், சாய்ப்பர், அவர் விருப்பம் கொண்டால்
மறி கிடாய் என்றில்லை
மனம் வைச்சு விட்டாரோ
பால் கறப்பர், காய்ச்சுவர்
ஆடை எடுப்பர் அப்பால்
வெண்ணெய் திரட்ட அடிப்பர், கறிவைப்பர்
உரிப்பார், சுடுவர், புதைப்பர் நினைத்தபடி,
ஆரேனும் கேட்டுவிட்டால்
"அப்படியோ" என்பார் பின்
பேரெழுதி ஊரெழுதி பேராயம் உண்டாக்கி
தேடுவர் ஆராய்வர்
தோண்டி எடுத்தும் துடைத்தும்
அடையாளம் காண்டல் எனவும்
சடங்கு பல நடத்தி மீண்டும் அதையே தொடர்வர்
நாணயம் குத்திச் செடில் பிடிப்பர்........
ஆர் எங்கே என்று ஆரை ஆர் கேட்பர்?............
ஊர் எங்கை எங்கை நீ போறாய் என உலுப்பிக்
காவடி ஆட்டிக் கடுவெயில் ஆனாலும்
நா அடியும் வற்ற நமை மேய்ப்பர்.

ஓர் கண்ணே
எங்கள் மேல் உங்களது பாசம்
ஆர் கண்ணே தான் அறிவார்?
ஆதலினால் எங்கள் மேல்
உண்மையிலே ஓர் கண்ணே!
உலகம் அறியாது
தீரும் ஒருநாள் - ஓர் மாரியிலோ
கோடையிலோ, நீரும் அறியாமல்
நாமும் புரியாமல்
தீரும் ஒருநாள்
திகைக்கும் உலகெல்லாம்
நாளை நடுத்தெருவில்
நாய்கூடத் தேடாமல்
ஆளை ஆள் காணாமல், ஓர் வேளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை
செத்துச் சிதறிக் கிடப்பீர் வருந்தாதீர்
பாளை அடிவிட்டால்
கீழே (கீழை) வரத்தானே செய்யும் பகிடி என்ன?
நீர் செய் வதை(ச்) செய்யும்
சிறு வேரும் கல் பிளக்கும்
பொய்யாமோ இந்தப் பொடி

அக்கா அதிகாரம்
அண்ணா மதிகாரம்
தம்பி அதிகனாரம் தாம் தாம் அதிகாரம்
அக்காரமெல்லாம் அவரவரே அள்ளித்
திக்குமுக்காடத் தின்னவைத்ததால் நாங்கள்
குடல் சுருண்டு வாடிக்
குறண்டி அலைகின்றோம்.

எலி பெருகி எங்கள் இருப்புகளைத்
தின்னுகுது
பலிபீட முன்னாடாய்
பட்டியுடன் நிற்கின்றோம்
சுக்கா மிளகா சுதந்திரம் ஏது
எங்களுக்கு
முக்குளிச்சு மூச்சுவிட மாட்டாமல் திண்டாடி
திக்குத் திசைகள் தெரியாமல் கண்கெட்டுப்
பக்குவப் பட்டிருக்க.............
பரதேசிக் கூட்டங்கள்
பொக்குள் அழகாம்
பூச்சூடத் தாறோமாம்
அக்காவின் பிள்ளைகளாம்
தம்பி தலைமுறையாம்
நம்பிக்கை வைத்தோம்
நடுத்தெருவில் நிற்பதற்கும்
வெம்பி விழு கின்றோம் விதி

தாயகம் 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பும் தவிப்பும்

ஊரெல்லாம் ஓநாய்கள்
ஊரெல்லாமோ நாய்கள்
ஊர் எல்லை, சந்ததிகள், உள் ஒழுங்கை
குஞ்சுகளும்
ஒன்றுக்குக் கூட ஒதுங்க இடமின்றி
என்றும் இரத்த வெறிபிடித்த
பொல்லாத
நெஞ்சுபதறவைக்கும் நீண்ட சடைகொண்ட
நஞ்சுப்பல் பெட்டைநாய்
நாலா திசைகளிலும்
குஞ்சு குருமன் குமர் என்ற பேதமின்றி
ஊரெல்லா மோ நாய்கள்
ஆளைத் துரத்துகுதே!

சூரை முள்ளை வேலியிலே வைத்த கதையாகி
கீரி கிளைத்து வளவெல்லாம் கோழிகளைத்
தின்ற திருக் கூத்தாய்
திக்கடைச்ச எல்லை கிழுவங் கதியால்கள்
பூவரசு, முள்முருக்கு ஒன்றும் விடாமல்
அடி வேர் பட உருவி
கண்டபடி வெட்டி மதிலுடைத்து
வீடுகளின் வேலி, விராய்பிரித்து
ஊரெல்லாம் ஓநாய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றன் பின் ஒன்றாக
நின்றும் நடந்தும் கிடந்தும்
விடிந்தாலும்
என்றும், இரவு பகல்
ஒன்றுமே இல்லாமல்
பஞ்சியிலை கொஞ்சம் சரிஞ்சு
படுப்ப மென்றால்?
நெஞ்சிலும் கால்போடும்
காவல் நாய் என்ற கணக்கில் பலநாய்கள்
தஞ்சம் எமக்களிக்கத் தக்கவரார்?
யாமறியோம்!
பிஞ்சிலை வெம்பியதைப் பிள்ளை
பழமென்றால்.................
மஞ்சள் பிடிக்கப் புகையடிச்ச அந்த நிறம் கண்டு
மதிமயங்கிக் கையிருப்பை விட்டெறிஞ்சோம்
திண்டாடி இன்றைக்கு ஊரெல்லாம்
நாய் துரத்தக்
கொண்டோட மாட்டாமல்
குத்தி முறிகின்றோம்
சொந்த இடத்திலுமே குந்த இடமின்றி
வந்த இடுக்கிப் பிடிக்குள்ளே
வாழ்வுக்காய்
அந்தரங்கள் அந்தரங்கமாக
அயலெல்லாம் பூசி மெழுகப்
பொருக்கு வெடிச்சுப்
பொருக்கு வெடிச்சவைகள்
புண்ணாகி நாறுகுதே!
காசி, கதிர்காமம், கால்நடையாய்ப் போவதற்கும்
ராசி பலன் பார்த்து
ராகு காலங்கழிய யோசிப்பம் என்றிருந்தோர்
பேசாமல் போய்விட்டார்
பேசாமல் நாங்கள்
பிறந்தமண் ஆசையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசங்களாலே பசை பூசப்பட்டுவிட்டோம்
பல்லி சொல் கேட்டுப் பஞ்சாங்கம் பார்த்தவரும்
சொல்லாமலே கனடா சென்று
சுகம் ரெலிபோன் எல்லே எடுத்திங்கை
என்னைக் கதைக்கட்டாம்
நல்லாற்றை மூத்தவன்
நாலுதரம் வந்திட்டான்
அடுப்படிக்குள்ளே நாய் மெல்ல நுழைய
விடுப்பெல்லே பார்க்கினம் எங்கள் அயலார்
“மல்லி மங் கிவ்வே தேறுநு வாத?” என்று
சொல்லிக் குசினிக்குள் சில்வா நுழைகின்றான்
சொல்லுறன் கேட்னிறாயில்லை
உதுமச்சான் நல்லதுக்கில்லை நட!

தாயகம் - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் விட்டுப் பேச வேண்டும்

இனசனம் என்பதெல்லாம் என்னவோ பலுடா போல
மனசுக்குப் படுகுதிப்போ!
தினம் பணம் புரண்டபோது தேடிவந்து
என்னைக் கண்டு கனம் பண்ணி, புழுகி
அன்பாய்க் கதைத்தவர்
எங்கே இப்போ?

என்னுக்குள் இருந்துகொள்ளும் எத்தனைபேரை
உம்முன்
சென்று வாருங்கள் என்று சொல்லி
நான் வழியனுப்ப
என்று நீர் அவர்களோடும் இரண்டறக் கலந்து
பேசி நின்றிடத் தக்கவாறு அவர்களை
நிறுத்தக்கூடும்.

அவர்களை
உங்களோடும் அளவளா வென்று சொல்லி
இவன் விடமுன்னர்
உம்மை விட்டு நான் விடை பெற்றேனேல்
தவம் பல நோற்றுப் பெற்ற
என்தனி மனிதர்கூட இவனொடும் சேர்ந்து
உங்கள் பால
இறுதியாய் விலகிக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் விளைவெண்ணி இப்போ தஞ்சுகின்றேன்
வேறில்லை
சுதந்திரமாக உம்மோடு
அவர்களை விடுவேனானால்
இந்தா நிரந்தரத்தோடு இடத்தினைத் தேடிக் கொள்வர்
மனம் விட்டுப் பேசுங்கோவன்

தாயகம் 1994

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டிலும் இரையும் அல்லது நடப்பு

தூண்டில் இரையும்
தொடரும் பெருமீனும்
மீண்டு வருமோ!
மனையும்,
மனப் பொறியில் வேண்டாமல் வந்து
விருத்தி உரை வகுக்கும்,
நீண்டு
நிலத்திலே மல்லாந்து கால் நீட்டி
அண்ணாந்த வேளை
அடுக்களைக் கூரையிலே
கண்பதியும்
கண்ணில்
கடைய உறி மேல் வைத்த
வெண்ணெய், தயிர்முட்டி
வெடில் மூக்கடிக்கு வரும்.

உறியும், உறி ஊஞ்சல் ஆடும் கயிறும்,
உறியில் தயிரும்,
தயிர் பிரிய
உள்உருண்ட வெண்ணெய் அடையும்
வெளிர் மஞ்சள் வீசு நறுந்
தண்ணென்ற அந்த மணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மத்தடிக்க
காற்றெடுத்து வந்த நெடியும்
அயல் பரவும் நாற்றம்
அடி நாசி நக்க
நா ஊறப் படுத்திருக்கும் பூனை
பளபளப்புக் கண்ணில்
அடுத்த சுவர் விளிம்பில்
ஊரும் கரப்பான்
சடக்கென்று தாவி உறிச்
சட்டி சரிவில்
கிடக்கும் இடைவெளியின் கீழ்
நுழையப்,
பூனை
படக் கென்று பாய
உறி ஊஞ்சல் பலமாக
அங்கிங்குமாக அசைய
அது அங்கே தொங்க முடியாமல்
தரையிலே "தொம்" - என்று
வீழ்கையிலே
என்னை விறாண்டிப் பிராண்டிய புண்
சீழ்வடி கின்றதென் செய் வேன்!

ஞானம் 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் சோகம்

பழம் தின்ற காற்று!
பசி எடுத்து
பார்க்க
இழந்து விடு வேனோ
இதற்கு நான் என்னை
அழந்த அழுத்தும்
அதை உதற மாட்டாமல்
குழந்தை அணைப்புக்குள்

பட்ட பனை வட்டுக்குக் கீழே
கிளிப் பொந்து
செட்டை விரித்தவைகள்
செய்யும் கலகலப்பு
கட்டவிழ்க்கும், காமக் கனலை உள்
எட்ட உட்டிப் பார்ப்பகைவ்கு
ஊட்டும் இரை அழகு
சொட்டும் நிறப்பிரிகை
செட்டை விரிக்கையிலே
முட்டும் மனசுக்குள் ஏக்கம்
இனம் புரியா.

வடலி நிலத்தில் கருக்கு வளர்கிறது
தடக்கி அறுத்துக் குருதி வழிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணில் அறுத்த நுங்கு
“பொறுக்கி“ எடுத்து
“மணி“ என்று சொல்லி
அறுத்துக் குடிக்கின்றார்!
“சிணியளுக்குக் கள் உரிசை
தெரிஞ்சா விடுங்களே“
முணுமுணுத்தவாறு
கனகர் நடக்கிறார்.

பணியக் கிடக்கின்ற
காவோலை மட்டை
உடும்போடும் கங்குமட்டை ஊடுபோய்
பாளை வரிஞ்சு பதநீர் எடுக்கின்ற
ஆளை விழிகள் போய் ஆராயும்.
அவ்வேளை
மூளை குடைய நடப்பாள்
முதுகுமரி
நாளை நினைந்தோர் நடை.

ஞானம் 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயும் நடுத்தெருவும்

கடிபட்ட நானும்,
கடித்து விட்ட நாயும்,
நாய் பிடி காரர்
நாய் வண்டி உள்ளே
குட்டைநாய்,
பெட்டை நாய்,
குட்டி நாய்,
குட்டித்தாய்ச்சி நாய்
நாய் வண்டி கம்பிக் கூடாய்,
நடுத்தெருவில்
பிடிபட்ட நாய்கள்
அடைபட்டு அக் கூட்டுள்!
நாய்ப் பல்லுப் பட்ட
காயமும், நானும்
நாயின் பல்லும் நகமும் புண்ணும்
நஞ்சு
வாயும் நஞ்சு அத்தோலும் நஞ்சே,

வேட்டை நாய், சுற்றிவர
வீணீர் வடிக்கும் விசர்நாய்கள்
இரண்டு கால் நாய்க்கடியில்
இரங்கி வருவார் யாரோ!

ஞானம் 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் அவலம் அல்லது பணயம்

தென்னை தலை திருகும் காற்று
தெரு ஓரச்
சன்னல் தெரியும்
அணில் உதிர்த்த தீன்முருங்கைப்பூ
மணலில் பணிய விழும்
குடங் கரையில் சேறு
கிளறும் அடைக்கோழி
வெடிவால் முளைக்காத சேவல்
காலிலே போர்முள் அரும்பாப் பருவம்
பிடிப்பதற்கு ஓடி
கலைச்சே அலைக்கழியும்
உச்சியிலே கொத்திப் பிடிச்சும்
இழுபட்டுச்
செட்டை
நிலம் கோடு வரையும்
குறுகும் அடைக்கோழி
அடைகட்டின கோழிக்குஞ்சை
ஒரு செம்பருந்து
இறாஞ்சிப் பிடிச்சுப்
பனை உச்சி வைத்து
கதறக் கதறக் கொத்தி
குறதிப்
பஞ்சுச் சிறகு உதிர்ந்து
காற்றில் பறக்கக்
கதறும் குரல் கரையும்.

ஞானம் 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு

முருங்கை இலை வறுவல்,
மொசுமொசுக்கைச் சம்பல்
இரும்புச் சட்டியிலை கிடந்து
என்னைப் பார்க்கும்
சரியான பசி ஆனால்
சாப்பிடவோ மனசு இல்லை
வயிறோ வறுகும்
அன்று
பிள்ளை குட்டி இல்லாத
பாறாத்தைப் பேத்தி வளவில்
களவு எடுத்த
பச்சை தின்னி மாங்காய்
மரம் ஏறி மாங்காயள் ஆஞ்ச
மனுசி கதை
எப்படியோ எங்களின்ரை
அப்பு சிரசு ஏறி
சிரம் ஏறிக்குந்திக்கோ
சீமானோ என்னைச்
சிரைச்சுப் பிடிச்சுக் கொண்டு
ஓடிக் கலைச்சுப் பிடிச்சு
அந்தமா மரத்தில் கட்டி வைச்சு
காஞ்சோண்டி யோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முசுத்துக்கூடும் போட்டு
அப்பூ...........
அடி எண்டா
ஆச்சி!
குளறக்குளற
வெளுவை எண்டா
அண்டு விட்டன்
கொண்டலடி எல்லாம்,
"அழிவாரே
அவளாலை பிள்ளையை ஏன்
கொல்லுறியள்"
அன்னை இட்ட சாபம்
அது இன்னும் கேட்கிறது.

ஞானம் 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் கோலமோ!

ஓட்டைக் குடைக்குள் ஒழுகும் நீர்
ஒன்பது பேர் (அக்குடைக்குள்)
வீட்டுக்குத் தூரம் வெகுதூரம்
மாரியோ! வாட்டி எடுக்கும்
வர வரக் கொட்டு மழை
மூட்டை நனைத்து
முதுகுமுழு தும் நனைந்து
போட்டிருந்த தெல்லாம் நனைந்த
புதி...... ராய் ஒருத்தி
வேட்டை நாயாகி விழிகள்
பதை பதைத்தாள்
ஆட்டை யோ நாய்கள்
அருகுவைத் தா தரிக்கும்!
வெட்டிற்று மின்னல்
விறுவிறுப்போடு
முகில் முட்டிற்று!
காற்று முறுகித் திருகிற்று
சட்டுச் சட்டென்று சடசடென்று
"திக்" கெங்கும்
கொட்டிற்று வானம்
குடைவிரித்தாள் கையாக
எட்டி நடந்தாள் எழில்.

ஞானம் - 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னண்ணை கொஞ்சம் பொறு!

(மு.பொ. வின் கவிதை குறித்த சர்ச்சைக்கான கவிதைப் பதில்)

சின்னப் பொடியள் சிலவேளை கால்சறுக்கும்
இன்னும் அறியலையோ ஏன்?

என்ன கரைச்சல் இழுத்திழுத்துக் குட்டுகிறாய்
சொன்னாலும் கேளாயாம் ஏன்என்று - முன்னாள்நீ
கொன்னைதட்டிக் கொண்டு குழறித் திரிஞ்சகதை
என்னைக்கேள் சொல்வேன் இதோ!

பன்னாடைத் தட்டானாய் பழைய சரித்திரத்தில்
என்னானாய் இன்றைக் கெழுத்துலகில் - மின்மினியாய்
போன புழுக்கம் புறணி புசத்தாதே
மானத்தைப் பேணு மதி

வாழ்வோருக் கெல்லாம் வருமின்ப துன்பம் போல்
சூழ்வார் செயலிலுஞ் சூத்தைவரும் - தாழ்வாய்
அதைக் கருத மாட்டார் அயரா துழைப்பர்
பதைப்பிலா நெஞ்சத் தவர்.

நொட்டை பல சொல்லி நுண்மை அறிந்தார்போல்
பெட்டைப் புலம்பல் புலம்பாதீர் - வெட்டி
விழுத்திய தென்ன விருத்தி உரைக்கப்
பழுத்தவர்கள் உள்ளார் படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுடை நெஞ்சத்து நொய்மை நிலைபோக்கித்
தாயுடை நெஞ்சத் தகைமை பெறும் - வாயில்

திறக்கும் புதிசாய் திசைகள் வெளிக்கும்
சிறக்கும் பல செயலும் சேர்.

கம்பனையே நொட்டும் கவிராச! பேரெடுக்க
நம்பொடியைக் குட்டி நலஞ்சேர்மோ? - வம்பிலே
மாவட்டிக் கிடகவேண்டாம் மாலை வருகிறது
போட்டி பொறாமை விடும்.

சோட்டைக்கு ரெண்டிந்தச் சொல்எழுதி விட்டிருக்கு
சேட்டை விடுவாயேல் சிம்மங்கள் - போட்டுக்
குதறி எடுக்கக் குறிவைத் திருக்குப்
பதறாதே பாயைச் சுருட்டு.

பிஞ்சிலே காயாடிச்சுப் பேய்க்கூத்தை ஆடிவரும்
வஞ்சனையை விட்டு வழிவாரும் - நெஞ்சத்து
நல்லனவே எண்ணி நடத்தலே ஆன்மிகம்
பொல்லாப்பைக் கைவிட்டுப்போம்.

வெண்பா எனப்போட்டு விட்டிருந்தால் அப்பிழையை
நண்பால் நலக்குறைவை நாவார - பண்பார்
பெரியர் பகர்வார்கள் பேதை .- "அது" பாடும்
உரியர் உரியரன்றென் றோர்.

சின்னப் பெடியள் சிலவேளை கால் சறுக்கும்
பொன்னண்ணை கொஞ்சம் பொறு!

ஞானம் - 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் எழுதுதல்

மண்ணில் எழுத மலர்ந்த தமிழ் இன்று
கண்ணில் கவினாய்க் கவிகிறது
எண்ணில்
இனி வருந்தேன் அன்பே நீ ஏங்காதே இன்பத்
தனி விருந்து வைக்கும் தமிழ்.

கவி அரங்கு செத்ததெனக் கப்சா விடுகின்ற
செவிகளிலே சென்று சேர் தேனே(ய்)
குவியும் இதழிடையே ஊறும் இனிமை நுகர
மது ஊற்றும் செந்தா மரை

உள்ளிகிடைத்தவிடம் பிள்ளை பெற நினைக்கும்
கள்ளி என வா நீ கருதினாய் - அள்ளி
இறைக்கும் தமிழில் அமுதம் சொரிந்து
நிறைக்கும் நிமிர்ந்த நிறை.

அகமும் புறமும் அழுக்கற்ற ஞான
சுகமும் சுரக்கும் சுவைசேர்
தகவுடையாய்
கண்ணே கடைக்கண் திற கவி தை முத்தை நீ
எண்ணி எடு வைத்தேன் இதோ!

எங்கள் முதுசொம் இதுபோற் பிறிதில்லை
தங்கத் தமிழே தலைநிமிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும்
புதுமைத் துறைமுகத்தில் பொன் இறக்கி ஏற்ற
மதிமிக்க மாட்சிமைக்கு மாற்று.
பாவாடை கட்டிப்
பருவ எழில் குலுங்கப் போ
ஆடை மாற்றும் புதுப் பெண்ணாய்
மூவாடை
கட்டி வந்து நின்றாய் நீ
காண்பதற்குக் கண்ணில்லார் எட்டி நின்றார்
எண்ணம் எரி.

அன்னை அழுகிறார்
அழகிழந்து போனாயாம்
திண்ணையிலே சின்னம்மா சீறுகிறா
பெண்ணை
வளர்க்கத் தெரியாத பேயராம் எம்மை
இளக்காரம் தீர்ப்பேன் இனி.

தொல்காப்பி யுத்தைச்
சுவையற்ற தென்றுபோய்ப் பல்லிளிப்பார்
பாவம்,
பசியாற அல்லாத சாக்கடை நீர் அள்ளிச்
சாப்பாடு செய்கின்றார்
சிக்குப் பிடித்த சிலர்.

முட்டை மயிர்பிடுங்கி
முட்டையிலே பேன் பார்த்துக்
கொட்டாவி விட்டுவரும் கூட்டம்
அதை - விட்டுவிட்டுக்
கட்டச்சிகரத்தைக் கைகொடுப்பாய்
வாலிபமே எட்ட நிற்கலாமோ இணை.

மாலை மதகு அடியில் மங்கைமார் காண்பதற்குக்
காலங்கழித்தல் கலை - என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை மினைக் கெட்டு நிற்கும்
மிலேச்சரல்ல நாங்கள்
நினைக்கட்டும் நீ வா நிறு.

விண்ணில் எழுதல் விசும்பு கிழித்தேகல்
எண்ணுவன எல்லாம் ஈடேறும்
மண்ணிலே கால்பதித்து நின்று நம் கைகோத்து
மெய்சேர்த்தால்
பால் சுவைக்குப் பஞ்சமில்லைப் பார்!

ஞானம் - 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப் பஞ்ச தாண்டகம்

ஆருக்குச் சொல்லி நம் அவலம் தீர்ப்போம்
அரையண்டப் படுகின்றோம், அடுத்தார் வீட்டுக்
கோடிக்குள் குசினுக்குள் கொடுங்கிக் கொண்டு
கோபத்தைத் தாபத்தை அடக்கி இந்தப்
பாருக்குச் சுமையாகிப் பகிடிக் காளாய்ப்
பார்ப்பாரைப் பார்ப்பாரைப் பார்த்துப் பார்த்து
பல்லிளித்து "ஈ" என்று கேட்க வைத்த
படுகொடுமைப் போர்செய்த பழியார் ஏற்பார்.

வயல்வழிய மிதிவெடிகள் விதைத்து வைத்து
வாழ்க்கைக்குப் பொறிக்கிடங்கு தோண்டிமக்கள்
செயல் அழிய, நெல் அறுத்த களனி எங்கும்
சிவனேஇவ் வறுப்பாற்றை வேலை யாலே
அயலட்டை அநுசரணைகூட இன்றி
அங்கங்கே எங்கெங்கோ அள்ளுப் பட்டே
இயல்பழிந்தோம் இருப்பிழந்தோம் எச்சில் நக்கி
ஏம்பலித்துத் திரிகின்றோம் ஏழையாகி.

விதானைமார் வீடுகளில் பாதி நேரம்
வீதிவழி ஆமியிடம் மீதி நேரம்
உதாசீனம் செய்கின்ற மனேச்சர் முன்னால்
ஒருவாறு மீண்டாலும் சாமான் வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாகால ஷேபங்கள் நிறுப்பார் செய்ய
காதுக்குள் பஞ்சில்லாக் குறையாய்க் கேட்டே
இதா தந்தான் என்று வர வீட்டார் கேட்க
ஏன் பிறந்தாய் தமிழனாய் என்னுமாறே

இராவிடிய இடிவிழுவார் அடித்த ஷெல்லால்
இருப்பிழந்து வீடிழந்து எல்லாமற்றே
பராமரிப்பார் இன்றித் தாய் மார்கள் பாவம்
பால்குடிகள் வீரிட்டுக் கத்தி மாய
சராசரிக்கு மேலானோர் கொழும்பு போனார்
சம்பந்தம் உள்ளோர் மேல்நாடு போனார்
தராதரங்கள் இல்லாதோர் கலங்கி ஏங்கி
தமிழனாய்ப் பிறக்கச் செய் தவந்தான் என்னே?

"இந்தியா தீர்த்துவைக்கும் இருந்து பாரன்"
இனி நோர்வே விடமாட்டான் இஞ்சார்" அண்ணை
கந்தையா "கதிராமன் விடவே மாட்டான்
கட்டுறன் நான் பந்தயம் இருந்து பாரன்"
சந்தியிலே சலசலப்பு வாக்கு வாதம்
பஸ் வந்தால் சரி எல்லாம் தணிஞ்சு போகும்
இந்தளவு தான் எங்கள் பேச்சு வார்த்தை
இதற்குமேல் ஏதேனும் நடப்பதுண்டோ?

ஞானம் - 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பமொன்று....

சோழச் சொகுசு அரசில்
வெண்ணெய் நல்லூர்ச் சடைநன் கூழைக் குடித்தவனே!
என் தமிழின் மாறாத ஊழைப் பழித்தவனே!
ஏழைப் புலவர்கள் கோழைத்தனமற்ற
கொள்கைப் பிரகடன ஏடாய்த்
தமிழ் மிடுக்கே ஏற்றமாய் ஏணியுமாய்
தேடா வடமொழியின் தேன்குடிக்க வண்டாகிப்
பாடாவகை விருத்தப் பாட்டுள்
மது நுழைத்தாய்.

நேற்றைய திறமைகளை,
இற்றை நிகழ்வுகளை
ஆற்றல் நிறை நாளை ஆற்றும் புதுமைகளைக்
காற்றில் கிழிக்கும்படி
கவிதை தந்த பாவாணா!
உனக்குத் தலைசாய்த்தால் வெட்கமென்ன?
ஆணாய்க் கவிதை அரங்கில் நிமிர்வதற்கு
உன் ஆசி கொடுக்கும் ஓர் அற்புதக்
கற்பகக்காண வாணா!
அருவருக்க வாந்தி எடுப்போர்
வயிற்றுக் குறைபாட்டை ஏந்திச்
சிரிக்கின்ற எண்ணம் எமக்கில்லை.
பின்நுழைந்து சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் அடிவருடி
முன்நிமிர எண்ணா மொழிமிடுக்கு மிக்கவனே!
"மன்னவனும் நீயோ", எனக் கேட்ட மாவீரா
ஒட்டரைப் பாட்டுக்கு உயிர் என்று ஊழையிட்ட
ஒட்டரைப் பாட்டால் உளிவைத்தே
ஓடென்றே ஒட்டத் துரத்திவிட்ட உன்னை
வணங்காமல் விட்டால்
எமக்கு விடிவு ஏது பாவேந்தா!
பாவேந்தும் மானுடத்தை எண்ண மறுத்த
மமதைகளைக் கூனிக் குறுக்க நினைக்கும்
ஒரு பாத்திரத்தில் ஞானச் சுடர்கொழுவி நின்ற
மகா ஞானி நீ

நாவடக்கமாக நடித்து
நயவஞ்சரின் நாவட க்கிவைத்த
நவகவிதைச் சித்தா!
நின்சேவடி நம் ஈழச் சிவந்த தரைமீது
பாவநடந்து ஓர் பதுப் பரணி பாடுதற்கு
ஈண்டு பிறந்து வர மீண்டும் உனை வேண்டுகிறேன்.

அஞ்சாமல் உண்மைகளை அப்படியே சொல்வதற்கு
நெஞ்சத் துணிவும், நிறைவும்,
நடுநிலைமை
கொஞ்ச அணுப்பிரமாணமுமே - குன்றாத
பூரணமான புதுப்பாவலன் நீ

ஈழ விடிவுக்காய்
இருள்கிழிக்கும் பேரொளியாய்
ஆழமனதை உழுதே
அறவிழுதை மேழிமொழி பிடித்து
மிடுக்காய் விதைத்து
மணிக் காவியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கடைத்தேற
அறுவடைகள் செய்யவல்ல சித்தன்
நினையன்றி
வேறொருவர் ஐயா அறியேன்
ஆதலினால் வேண்டுகிறேன்
போலிப் புதர்மண்டிப் போய்க்கிடக்கும்
எம் ஈழ வேலி நிரந்தரமாய்
விண்ணாட்டுக்கு அப்பாலுஞ்
சீல மலர்கள் மலரச்
சிவந்திருக்கும் நம்பூமி நல்ல பருவம் இப்போ
கவிக்கு விநாயகனே
பல்லாண்டு உரைக்கின்றேன்.
பாவடிகள் சூட்டுகிறேன்
பூரணமான புதுப்பாவலனுனை
ஈண்டு பிறந்துவர
மீண்டும் இதோ வேண்டுகிறேன்..

கம்பமலர்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி!

"பால் புழுக்கம் உள்ள இடம், பூனை: கவனமடி
கால் தடக்கிப் போட்டாலும்
கைதவறிவிடடாலும்
நட்டம் நமக்குத்தான்"
நாளாந்தம் அம்மாவின் சட்ட விளக்கம்
நுணுக்கம் புரிந்தது போல்
வெட்டும் ஒருமின்னல் நினைவில் பளிச்சென்று
ஓட்டிலே சாய்ந்து
வடிவாகக் கால் நீட்டி உட்கார்ந்திருக்கையிலே
ஊரில் நடக்கின்ற
கட்டுப்பாடற்ற சில ஊர்த்துழவாரங்கள்
முற்றுகையிட்டு முழிபிதுங்க வைக்கும்
இவைபற்றி மனமாடு அசைபோடும்
பழசுகளை.

பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி

வடிவெண்டால்!
கண்டால் பிடிச்சு அளையச் சொல்லும்.
விடியவிடியக் காலுக்கை வந்து
உரஞ்சி நிற்கும்.
பொடியளுக்கும் ஆசை
நெடுக எங்கள் வீட்டிலைதான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொட்டு, நொறுக்கு, பலகாரம் கண்டுதோ
கட்டாயம் வைச்சாகவேணும்
கலைக்கேலா
வந்து போகட்டும்
வடிவும்
எலி, அணிலும் தொந்தரவு செய்யாது
சோலி குறைவெண்டு
நானும் என்ரை பாடு.
நடுக்கூடம், சாமி அறை, மீனறுக்கும்வேளை
குசினியெலாம் போய்த் திரியும்.
பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி.

உறிமேல் வைச்ச புது வெண்ணெய் ஒருநாள்
கறிச்சட்டி பின் ஒருநாள்.

கண்ணாலே காணாமல் சொன்னால்
கறுமமெண்டு சொல்லிமனம் துடிச்சேன்.

என்னாலே வந்தவினை எப்படித்தான் சொல்லுவனோ?
சொன்னால் பழி அழிஞ்சு தூய்மை அடைஞ்சிடுமோ?
அப்பளம் பொங்கப் பொரிச்சு

மறந்துபோய் அப்படியேவிட்டுக்
குளிச்சுத் திரும்பினால்.......
"கட்டிலி(லே)லை பூனைக் கடுவன் கிடக்கு" தெண்டு
பெட்டை வந்து சொன்னாள்
"எலிபிடிக்கவாக்கும்" எண்டுவிட்டால்
கடவுளே!
நான்விசரி நம்பினனே
விளையாட்டுப் பூனை வினைமாட்டும் எண்டதெலாம்
அம்மா அநுபவமோ
ஆண்டவனே ஆரறிவார்
அயல்வீட்டு மோசடிக்குக் காவல் இருப்பவர் யார்?
வீட்டு நாயைக்கூடச் சீறி வெருட்டிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டுக்கு மேலேறி
வீட்டுக்குள் இறங்கி அது
வேட்டைத் திருவிழா வேள்விகளும் செய்வனென
உச்சி மரமேறி
உறுமி "நகம் தேய்ச்சு வைச்சிருக்கிறேன்" என்று
நீட்டி யதைக் காட்டுகுதே
விளையாட்டுப் பூனை
விறாண்டித் தசைகிழிச்சுப்
பாய்ஞ்சு ஓடி
உச்சி மரம் ஏறி.........

எச்சில் ஒரு பக்கம்
என் துயரம் ஒரு பக்கம்
பச்சைப் புண் முன்பு நகம்பட்ட பெருங்காயம்
காயம் வலிஎடுக்க
வாய்விட்டுக் கத்தாமல்
மாயாமல் மாய்ஞ்சு மடியாமல் ஏங்குகிறேன்.
எங்கே மருந்து கட்ட?
எந்த மருந்துகட்ட இங்கே இடமிருக்கு
சொல்லுங்கோ இங்கொருக்கால்!

கவிதை
ஓராண்டு நிறைவிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகஞ் செய்வோம்!

கற்பனையில் வாழ்ந்திருந்த காலம்போய்
அறிவியலின் அடிச்சு வட்டில்
நிற்கின்றோம் அற்புதங்கள் நிகழ்த்துகின்றோம்
வெண்ணிலவில் இறங்கி எண்ணம்
முற்றுகின்ற நிலை பலவும் முதிர்ந்து விட்ட
விளிம்பதிலே நின்று வெற்றி
பற்றியெலாம் விளம்புகின்றோம் எழுதுகின்றோம்
எம்நிலையை மறந்தே போனோம்.

இன்பவெறி மீறுவதாற் கூறுவன
மறந்தாலும் இதயத் தோப்பில்
நின்றுலவி வந்தோமேல் நிச்சயமாய்
நாமெல்லாம் எங்கள் வாழ்வில்
இன்றுவரை எம்மைநிதம் மூடியுள்ள
இருள் திரையைக் கிழித்தெறிந்து
குன்றுநுனி விளக்குப்போல் நன்றுசெய
வேண்டாமோ? இன்னுஞ் சோர்வா?

சிலையெடுத்தல், மாநாடு, சொற்பொழிவு,
கவியரங்கம் இத்தியாதிக்
கலகலப்புப் பலமலிந்த சலசலப்புச்
செய்கைகளாற் புதியதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபிறந்து விடுமன்றோ அதனாலே
எங்களது பெருமை மீண்டுந்
தலையெடுத்துத் தொடருமென்றோ வாயூறல்
உண்மையிலே தப்புத் தப்பு.
தெருப் புழுதிப் பூச்சுக்குள் தினம்மூழ்கும்
இதயங்கள் உருக்கு லைந்து
நெருப்பிழந்த விறகுகளாய் நிதமுழைத்து
வளனழிந்த சலிப்பு நீங்கத்
திருப்பங்கள் பலசமைத்துச் செயற்படுத்தி
அவற்றைமிகச் செம்மையாக்கிப்
பெருக்கிடுவோம் இன்பத்தின் பெருவெள்ளம்
புதியதோர்நல் லுலகஞ் செய்வோம்.

புகைக்காவி யுறிஞ்சவுடன் வெளுத்துழைக்கும்
ஏழைகளின் புகைந்த வாழ்வைப்
பகைத்தவரை வஞ்சித்த பஞ்சத்தைப்
பஞ்சத்தால் வாட வைக்கும்
மிகைச் செயலை உருவாக்கிப் பெருவாழ்வுச்
சிகரத்தில் ஏற்றிஅ ன்புக்
குகைக்குள்ளே கூத்தாடி அவர்மகிழப்
புதிதான உலகச் செய்வோம்.

மிதவாதப் பேச்சுக்களால் மேடைகளிற்
சொல்ல டுக்கிக் கட்டல் மட்டும்
இதமான சேவை இதால் எல்லாமே
நிறைவேறுங் குறைகள் மாறும்
அதுபோதும் எனநம்பி இனியும்நாம்
அப்பழைய வழியிற் போதல்
புதிதான நெறியல்ல முறையுமல்ல
புத்திக்கும் ஏற்ற தல்ல.

கொடுமையிருள் தேய்ந்தழிந்து விடிகின்ற
திருநாள் கொண் டாட வேண்டும்
கொடுமைகளின் குலமறுத்து விடுவதொடு
முடிவதில்லை எமது வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைவிலங் குடைத்தெமது நடப்பாட்சி
அன்பாக மலர வல்ல
நடுநெறியை வளர்த்திடுவோம் வள்ளுவஞ்சொல்
நவமான உலகஞ் செய்வோம்.

பழித்திறத்தை அறுக்கவந்த பரம்பரையை
வழிப்படுத்தி நிமிர்ந்த நோக்கில்
மொழித்திறத்தால்எ செயற்றிறனாற் சமூதாயக்
கயமைகளைக் களைந்த ழித்துக்
குழிபறித்தே அவற்றையெலாம் கூண்டோடே
புதைத்தின்றே இன்பம் பொங்கிச்
செழித்தோங்குஞ் சிறப்பான அறஞ்சேர்ந்த
நிறைவுடைய வாழ்வு காண்போம்.

காதலிலே வேதனையாம் களையகற்றி
இளைஞரெலாங் களித்து. வாழும்
பாதையிலே நடைபயிலும் பாவையரின்
ஆசைகளின் முடிச்ச விழ்ந்தப்
போதையிலே வெற்றிபெற, சாகாத
புதுமைநல முண்டி ராம
சீதைகளாய்ச் சிறப்பான பொறுப்பேற்கும்
அமுதனைய செயலைச் செய்வோம்.

வேற்றுமையைக் கொன்று ஒன்றாய் இன்றுமுதல்
நன்றெண்ணி நலன்கள் மேவ
ஆற்றிடுவோம் பெரும்பணிகள் அவை விளைந்து
பெருமணியாய் அணிகள் செய்யச்
சாற்றிடுவோம் புதுப்பாடல், ஏற்றிடுவோம்
சபதத்தை எழுக! நோக்கம்
போற்றிடுவோம் தொழிற்படுவோம் ஒன்றென்னும்
புதியதோர் பொன் உலகஞ் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ தலினால் என்அன்பே, ஆதாரம்
யான்வாழ வேண்டு மென்றால்
சூதனைய மோசடிகள், கொடும்பகைகள்
புரையோடிப் போன வாழ்க்கை
சாதனையாற் றிருத்தமுற வழித்துணையாய்ச்
சாவரைக்கு முழைக்க வேண்டும்
மூதறிஞர் மன ஏக்கம் முற்றுமற
வெற்றி பெறும் பாதை போவோம்.

செய்மதியிற் போயின்று மதிக்கெதியின்
செயற்றிறனை அறிவு றுத்த
மெய்மதியில் அடிபொருத்தி மண்ணெடுத்தும்
முகில்கிழித்துத் திரும்பிவிட்டார்
ஜயமினி இல்லையடீ என்னாவல்
அதிவிரைவில் தீருங் காண்பாய்
உய்யவொரு மதியாக இணைவோம்வா
இனியுமொரு தனிமைப் போக்கா?

கற்பகம் - 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் நாசம்

மகிழும் பூ வாசம்
மகரந்த மாவில் புகுந்து
புதிய சுகத்தை வருவிக்கும் "அம்மங்கொயில்" சோலை
"ஆசறிதியாய்ப் படுதம்பி" எனச் சொல்வது போல்
தன்னிச்சையான இடம்
ஆருக்கு நேரம் இருக்காம்
அலுப்பலக வாரும் இரும் என்றாலும்
ஆர்தான் வரப்போறார்
காசுக்கு அலைச்சல் நிதம்
கைகால்கள் சூம்பியும் அவ்வாசை அறாமல்
அலையும் அதேவழியில் பாசம் மிகுந்து
படரும் பரிசு எங்கும்
அம்மன் கோயில் சோலை அமைதி
சுகம் அறியோம்.

ஆடு இரண்டு ஒன்று அஞ்சாறு மாடுகள்
தேரடிக் கொட்டகைத் திண்ணைப் படியேறி
மேலே படுத்திருந்து மெல்லும் - அசைபோடும்
மூலைச்சுவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியால் இளவட்டம் கீறிய ஓவியங்கள்
உள்ளக் கிறுக்கல்கள்
ஊருக்குள் ஊத்தை விருத்தியுரை வாசிக்கும்
பாரிய அந்தப் பணியைச் சுமந்துநிற்கும்
கோயில் கிணற்றில் குமரும் கிழடுகளும்
"தாயின்ரை தீத்தம்" எனத்
தண்ணீர் இடுப்பொடிய அள்ளி
ஓயாது நிமிர்ந்து நடைபயிலும்,
துள்ளிப் பறந்த சிறுவிட்டில்
சோலைச் சிலந்தி விரித்த வலையில்
சிறகு பொடியாய்ச் சிதறப்போய்ச் சிக்குண்டு
உதறி உதறி கிடந்து ஓ!
ஓயும் வேளை
கதவு திறக்க மணிநாதம் கேட்கும்!.

கவிதை - சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமை உணர்வுகள்

அழுகுரல்கள் கண்ணீரில்
இரவிரவாய் ஏங்கி அழுகுரல்கள் எச்சம்
கரும்பனையில் காவோலை
காற்றோடு காற்றாய் கனகதைகள்
கண்ணீருள் கண்ணீரக்
கவலை பல சொன்னபடி
சாவோடும் வாழ்வோடும் சங்கமிச்சு
வாழுகிற சீவியத்தைப் பற்றியே
கீழே அடிப்பனையில் நைலோன் கயிற்றில்
கட்டிவிட்ட நாம்பன்கள் நாணயமும்
குத்தி நலம் போட்டுக் குறிசுட்டு
மேய்ப்பர் செயலுக்குத்
தாய்ப் பசுக்கள் என்ன செய்யும்.

ஆற்றுக்கும் ஓடைக்கும்
அமைதிதரும்
கடல்தாயே
ஆளத்துயிலும் அம்மா
என்நாடோ
ஆனாலும்
சிறு தூறல் முகம் கழுவும்
வெறுவானம் இருள்கவியும்
சில பறவை திசை மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறை நிலவு சிறு வெளிச்சம்
முழு நிலமும்
ஒரு குடிலில்
அடுப்பெரியும்
பால்தொதிச்சுப் பொங்கிச் சரிக்கும்
நுரையோடும்
வயல் குளத்தே
நீலாம்பரத்தின்
பிரதி பிம்பம் ஏந்தும்
தண்ணீர்
நீ மாத்திரமா
என் ஜீவிதானந்தம்
என மனம் கேட்கும்
இரவு இரவாகச் சொன்ற
இராமாயணக் கதைகள்
விரல் விலக்கா வீணை
ஒன்றிய உணர்விடையில்

ஞானம் - 2012

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பர்கள்

எப்படியோ நீங்களும் எங்களது மேய்ப்பர்
தப்பி விடாமல்
தடிகொண்டு சாய்ப்பதிலே
இப்போது தாங்கள் அனுப்பிவைத்த
உங்களது மேய்ப்பர்கள்
எங்களை மேய்ப்பர் அறிவீரோ?
இப்போதோ
எங்களுக்கு இங்கே
வரு மானம் எப்போதும் இல்லை.
எனினும் அவர் மேய்ப்பர்.
சப்புச் சவர்கள் சரிக்கட்டி விட்டவற்றை
உப்புப் புளியின்றி
உண்ணத் தொடங்கியதால்
இப்போதும் எங்களுக்கு
இங்கே வரு மானம் இல்லை.
தடிகொண்டார் நெஞ்சம்போல்
எங்க(ள்) மடி தடவி
குடி கொண்டு கோல் ஒச்சி
எல்லாம் குடி போக அடிகிண்டி......
ஆரார் அழுதாலும் செத்தாலும்
குலையோடு வட்டுதிர
குட்டி, பனை, தென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைபோல கோயில்
மணிக்கூடு, கோபுரங்கள் நிலைகுலைந்து
முற்றும் பொடிசாம்பல் ஆனாலும்
எங்களது மேய்ப்பர்
எங்களை மேய்ப்பர்
வீடேது நாடேது
காடுகரம்பையென ஓடோட விட்டுத் துரத்தி
அவர் மேய்ப்பர்
குறிசுடுவர், சாய்ப்பர்
அவர் விருப்பங் கொண்டால்
மறி கிடாய் என்றில்லை
மனம்வைச்சு விட்டாரோ
பால் கறப்பர், காச்சுவர், ஆடை எடுப்பர்
வெண்ணெய் திரட்ட அடிப்பர்
கறி வைப்பர், உரிப்பர், சுடுவர் புதைப்பர்
நினைச்சபடி,
ஆரேனும் கேட்டுவிட்டால்
அப்படியோ என்பர் பின்
பேரெழுதி, ஊரெழுதிப்
பேராயம் உண்டாக்கித் தேடுவர்.
ஆராய்வர்
தோண்டி எடுத்துத் துடைத்தும்
அடையாளம் கண்டால் எனவும்
சடங்கு பல நடத்தி
மீண்டும் அதையே தொடர்வர்.
நினைத்தபடி நாணயம் குத்திச் செடில்பிடிப்பர்.
ஆர் எங்கே என்று ஆரையார் கேட்பர்
ஊர் எங்கை எங்கே நீ போறாய்
என உசுப்பிக் காவடி ஆட்டிக்
கடும் வெயில் ஆனாலும்
நா அடியும் வற்ற நமை மேய்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் கண்ணே எங்கள்மேல்
உங்க எது பாசம்
ஆர் கண்ணே தான் அறிவார்
ஆதலினால் எங்கள்மேல்
உண்மையில் ஓர் கண்ணே!
உலகம் அறியாது
தீரும் ஒருநாள், ஓர்
மாரியிலோ, கோடையிலோ
நீரும் அறியாமல் நாமும் புரியாமல்
தீரும் ஒருநாள் திகைக்கும் உலகமெலாம்
நாளை நடுத் தெருவில்
நாய் கூடத் தேடாமல்
ஆளை ஆள் காணாமல்
செத்துச் சிதறிக் கிடப்பீர் வருந்தாதீர்.
பாளை அடி விட்டால்
கீழை(ழே) வரத்தானே செய்யும்
பகிடி என்ன?
நீர், செய் வதை(ச்) செய்யும்
பகிடி என்ன?
நீர் செய் வதை(ச்) செய்யும்
பகிடி என்ன?
நீர் செய் வதை(ச்) செய்யும்
சிறு வேரும் கல்பிளக்கும்
பொய்யாமோ இந்தப் பொடி

அக்கா அதிகாரம்
அண்ணா மதி காரம்
தம்பி அதி காரம் தாம் தாம் அதிகாரம்
அக்காரம் எல்லாம் அவரவரே அள்ளித்
திக்கு முக்காடத் தின்னவைத்தால்
நாங்கள்
குடல் சுருண்டு வாடிக் குறண்டி
அலைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலி பெருகி எங்கள் இருப்புகளைத் தின்னுகுது.
பலிபீடமுன்னாடாய்
பட்டியுடன் நிற்கின்றோம்.
சுக்கா மிளகா சுதந்திரமே தெங்களுக்கு
முக்குளிச்சு மூச்சுவிட மாட்டாமல்
திண்டாடித்
திக்குத் திசைகள் தெரியாமல்
கண்கெட்டுப் பக்குவப் பட்டிருக்கப்
பரதேசிக் கூட்டங்கள்
பொக்குள் அழகாம்
பூச்சூட்டத் தாறோமாம்
அக்காவின் பிள்ளைகளாம்
தம்பி தலை முறையாம்
நம்பிக்கை வைத்தோம்
நடுத் தெருவில் நிற்பதற்கும்
வெம்பி விழு கின்றோம் விதி.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறுகல் சொற்பதம்

## காப்பு

பிறைசடைக் கடவுள்
நிறை மகன் நினைவேன்

வாழ்த்து
நின் மனை வாழ்க்கை
நன்மையே பொலிக

நூல்
அறம் நனி சிறக்க
ஆனந்தம் பிறக்கும்

இன்பம் விளை வான்
ஈரம் பொழி வான்

வாய்ம்மை அணிமலர்
வாழ்க்கை மணிமலர்

உறுதி நிறை வான்
ஊற்றாய் சுரப்பான்

எளிமை இயல் வான்
ஏற்றம் தரு வான்

ஒளியில் மிளிர் வான்
ஓதி உணர் வான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் பணியும்
நாளும் வளரும்
ஐயம் அகல் வான்
வையம் திகழ் வான்

அடிமையிற் குடிமை
மிடிமையிற் கொடுமை

மனமே எல்லாம்
மனம் ஏய் எல்லாம்

அன்பு மொழி
தென்பு வழி

தண் புனல் ஆடும்
உண் பிணி ஓடும்

துன்புறு துயரம்
இன்புற இசைக்கும்

பண்புறு வார்த்தை
படி உயர் கீர்த்தி

தண் கடல் பெருகின்
மண் திடல் பருகும்

குற்றம் துறக்கப்
பெற்றோம் சிறப்போம்

முயல் முயலாமை
செயல் புரி ஆமை

கள் குடித்தால் வெறிக்கும்
காமம் நினைத்தால் வெறிக்கும்

மாலை வந்திடல் காண்
காலை வந்து இடும் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்புலன் அன்பு
இன்புறு பண்பு
நல்லன ஆயின
தொல்லைகள் போயின

நுண் மணல் எண்ணீர்
தண் புனல் உண் நீர்

உண்ணீர் தண்ணீர்
பண்நீர் பண்ணீர்

மாரி வாய்க்கச் செய்
காரியம் வாய்க்கும்

மனை நடு தென்னை
உனக்கிடும் பின்னை

பஞ்சி அறியான்
துஞ்சி அறியான்

மாரி மலரின்
சீரும் குறையும்

ஒண்தொடி மடவார்
கண்படின் அடியார்

நோய்க்கு மருந்திவள்
வாய்க் கின் விருந்திவள்

பூப்பாய் விரிப்பாய்
காப்பாய் இருப்பாய்

பொருந்து மலர்கள்
பிரிந்தால் அலர்கள்

வளை நெகிழ நண்டூரும்
வளை நெகிழப் பெண்சோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுஞ்சுவர் இடுஞ்செயல்
இடும்பைக்கு அறிகுறி

விளைவயல் சீரால்
களைகளும் அழியும்

ஆண்மை வழிவழிக்
கேண்மை தெளிதெளி

பனிதுயில் புல்நுனி
மனிதனை அளக்கும்

பொய் வலை விரிப்பின்
மெய் பல மடியும்

மீன் எறி தூண்டிலின்
தீன் சுவை கொடிது

நெல்பல பொலிய
நல்லவை இயலும்

ஈரம் கூர
வேரும் ஊரும்

அடங்கிய மனசு
புடம்படும் இனிது

புனை புகழ் மகிழான்
தனை அவன் இகழான்

வறுமை சிறுமை
வலிமை களையும்

நல்லோர் நாடிச்
செல்வார் வெல்வர்

கடன் படான் வாழ்வில்
கவலைக் கிடம் கொடான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயுறு மெழுகாம்
தாயுறு துயரம்

தன்சொல் உணர்ந்தார்
மேனி பொன் புனைந்தார்

சிறையழி புதுப்புனல்
நிறையளி செய்யும்

நலம்பெறு சுடர்நுதல்
நலம் பெறத் துலங்கும்

வெண்ணெய்த் தண்மை
உண்மைப் பெண்மை

துஞ்சு மனை கெடு
நஞ்சுக் கிருப்பிடம்

ஞாயிறு கதிரொளி
நீயிர் மறைப்பீரோ!

தன்னை அளந்தவன்
பொன்னில் உயர்ந்தவன்

தன் சொல் உணரின்
இன்சொல் வளரும்

ஒழுகு மதியார்
பழக விதியார்

தேனூர் வாழ்க்கை
திண்திறல் யாக்கை

மையல் நெஞ்சம்
ஐயம் தீரா

நல்லார் நாடிச்
செல்வார் வதுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி விடியல்
கவிதைக் குவியல்

சூதார் செயினும்
சாதனை இழப்பர்

விரிமலர்த் தாது
வண்டுக்குத் தூது

மீன்பிடி நாரை
தாள்படும் தீரவை

பசு மலர் வண்டுப்
பாரம் சுமக்கும்

குழவிக் கூறு முலையால்
கிளவிக் கூறு கவியால்

குவளை நாறத்
தவளை கூப்பிடும்

பூக் கள் மயங்கும்
பாக் கள் பயக்கும்

கடன்படு சோற்றினும்
கஞ்சி இனிது

கோவணம் போர்க்க உதவாது
ஆவணம் சேர்க்க உதவாது

சூட்டிலை மாடு
வீட்டுக்குக் கேடு

நீர் படர் நெறியில்
பார் படர் அறிவை

படியாப் பாவை
விடியா விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் மணிக் குரலால்
நேர் துயர் தணியும்

தவறிலர் ஆயினும்
தவறணை இடமே

உள்ளம் கையில்
உண்மை துலங்கும்

மனங்கொளாப் பிரியம்
தனங்கொளப் புரியும்

புது நிழல் இருந்தவன்
பழநிழல் தரியான்

தர்மச் சோற்றைத்
தின்றவன் தவிப்பான்

சுடர்விளங் கொளிச்சொல்
படர்ந்தன கவினே

வண்டுபடு நறும்பொழில்
உண்டது மறவார்

நாடு படு போர்
காடு படு வேர்

பருவம் செய்வன
பண்பின் வழித்தே

நீர் தரு விருந்தின்
சீர் பெருந் தகைத்தே

வாய்மொழி நோய்தணி
தாய்மையர் உளரே

பகைதணி பண்பால்
முகைவிடும் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்பனி நலியினும்
உய்பவர் சோரார்

மானம் துறந்தவன்
ஞானம் பிறந்தவன்

தீண்டத் தகாதன
வேண்டத் தகாதன

தப்புக்குள் சோரம்
உப்புக்குள் ஈரம்

நல்லவை வளரும்
அல்லவை அழியும்

பூவிலை வாசம்
வண்டுக்கு நேசம்

காமத்தைத் துறந்தோன்
நாமத்தாற் சிறந்தோன்

வழிபடு சிந்தனை
மொழிபடு வந்தனை

தெரு நாயோடு சருவாதே
பெரியோ ரொடு பகையாதே

சிறு நல் நட்புப்
பெறுமதி ரொடு பகையாதே

சிறு நல் நட்புப்
பெறுமதி பெரிது

நேர் கோடுகள் ஓவியம் ஆகா
சீர்கேடுகள் காவியம் ஆகா

உயிரும் சரி
மயிரும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சிலை நோக்கி நாய்
எச் சிலை நோக்கினாய்

செல்வம் இல்லாமை
செய்வினைப் பயனே

செல்வம் என்பது
சேர்ந்தோர்ப் பேணல்

கல்வி என்பது
கலங்கல் இலாமை

உப்பு கொப்பில்
உலகத் தில்லை

உப்புறை செப்பின்
அப்புறம் திரியும்

கண்ணீரை நீராட்டும் காதல்
கவிதையிலே தேரோட்டும் காதல்

மனையுறை மகளிரும்
வினை நிறை புரிவர்

சொல்லவிந் தடங்கினர்
எல்லையுள் உலகம்

பணிந்து வழி மொழியின்
துணிந்து பழி அழியும்

வாசகம் பயின்றோன்
பாசம் அகன்றோன்

குருவை நினைவான்
அருளில் புனைவான்

தந்தையை மதித்தவன்
தரணியில் உதித்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைத் தொழுதவன்
கோயில் தொழுதவன்

பாசம் மிகுந்தான்
நாசம் வகுத்தான்

தன்னையே துறக்கும் காமம்
தவத்தையும் இறக்கும் காமம்

பணமுற்ற வரை நல்லவர்
பணமற்ற வரை கெட்டவர்

கண்ணிய மனத்தார்
எண்ணிய முடிப்பார்

ஐ உணர்வு அடங்கின்
வையகம் ஒடுங்கும்

திண்ணிய உளத்தார்
நண்ணிய நிறைப்பார்

அடி விழு வான்
முடி தொழுவான்

பதினாறில் பதி நாறும்

உள்ளுறை பகைமை
தள்ளுதல் தகைமை

மெயந்நிறை சேர்த்தி
உய்நெறிக் கீர்த்தி

தொல்லையில் உதவினான்
எல்லையில் புகழினான்

நூல்தரு ஞானம்
சால் பெருஞ் சீலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி விரதம்
சோதி சொரூபம்

முனி(வு) ஆறினை
இனி தேறினை
நனி மா தவமுடையான்
தனி நாயகம் அடைவான்

பல்லாண்டிசை
பல் ஆண்டு இசை

தருமம் தெரிவான்
கருமம் புரி வான்

இறை இறை முயற்சி
நிறை வளர் பயிற்சி

விழி விபத்தில் உயிர்பிறக்கும்
வழி விபத்தில் உயிர்பறக்கும்

உண்மை நட்பு
பெண்மைக் கொப்பு

குரு குரு என்றிரு
வரு மதி நன்றிரு

விளக்கு விளக்கு
உண்மை விளக்கு

அணி பயில் தொழிலால்
பிணி முயல் வழி மேல்

பணி ஓங்கப்
பிணி நீங்கும்

துணி வாங்க அணி
மணி வாங்கக் கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணி திணி அறத்தை
கணி அணி குணத்தை

நடை மடம் மேவின்
நாண் அணி பாவும்

விறல் நடை சேரின்
திறல் அடை தேறும்

காமம் விரும்பின்
யாமம் சுருங்கும்

காமம் சுருங்கச்
சேமம் நெருங்கும்

விழைந்தார் வினையின்
விழுப்பயன் நுழைந்தார்

மண்படு பண்பு
பண் கொடு உண்டி

ஊர் ஊர் சேரச்
சீர் பேர் சேரும்

உழைத்த வன்
தழைத் தவன்

கரை மனது
உரை இனிது

காமம் அரும்ப
மோகம் நெருங்கும்

கரை அறியான்
வரை அறியான்

ஆற்று நன்மை
ஊற்றில் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரி கோதை நல்லார்
ஒரு வாதும் செய்யார்

இருள் மலி நெஞ்சம்
பொரு களம் போலும்

நல்ல படி நல்ல
நல்ல படி அப்படி

மணி கேட்கப் பிணிதீரும்
பணி நோற்க அணிசேரும்

பெரியோர் கேண்மை
பிள்ளைகண் ஆண்மை

பதியும் பதியும்
பதியும் துதியும்

வழுக்களை வழுக்களை
வாழ்வு மலரும்

பற்றப் பற்றக்
கற்பது சிறக்கும்
கற்பது கற்பது
நிற்பது நிலைப்பது

நிறையும் குறையும்
குறையும் நிறையும்

குருவை நினை வான்
அருளைப் புனைவான்

பணி வாய் அன்பே
அணுகும் துணிவாய்

மெய் அன்பு செய்வார்
கை வந்த செய்யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லின் பூவிலும்
பொருந்துமோர் வண்டு

கல் என்றிருப்பார்
சொல் வென்று இருப்பார்

விசிறி அற்றால்
சிவம் சவமாகும்
அறிவது பெருகச்
சிறுமைகள் தகரும்
மறு மொழி அறி வழி
பெறு மொழி இறுபழி

இரு நிதி மதி பதி
தரு கதி திரு துதி

அடங்க அடங்கத்
தடங்கும் துயரம்

வாசிப்பார் யோசிப்பார்
பேசிப்பார் சீவிப்பார்

மனைவி காரம்
மனை விகாரம்

பொருளா? தாரமா?
பொருள் ஆதாரமா?

நாடு அறியா நாடு
பாடு அறியா பாடு

அதிகாரம் கூட
விதி பாரம் ஆகும்

புல்நுனிப் பூவும்
நல்மணம் மேவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைக்கும் பசிக்கும்
பிணிக்கும் வறுமைக்கும்

கழுவாக்கால் பட்டால்
எழுந்திரு எழும் திரு

வாழ்வு ஆருக்காக?
வாழ்வாருக்கு ஆக!

மேலானதாய் இருக்க!
மேலான தாய் இருக்க?

என் அகலை ஒளி ஏற்ற
என அகலை ஒளி ஏற்று

செப்பாய் மணப்பாய்
சிவப்பாய் விழிப்பாய்

நீர் வழிந்த தடங்கள்
நீர் வழிந்த தடம் கள்

அருளா தாரம்
அருள் ஆதாரம்

இருளா தாரம்
இருள் ஆதாரம்

நுண்மணல் அடைகரை
தண் கடல் உடைதரும்

அழி பசி தீர்க்க
வழி பல பிறக்கும்

அழல் வினை அமைந்தால்
நிழல் மனை நுழையும்

விழுத்த நினைத்(து) ஆர்
பழத்தைச் சுவைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார் முகில் முழக்கின்
ஊர் வயல் கொழிக்கும்

சூது களைந்தார்
தீது களைந்தார்

ஒண் நுதல் கருவில்
எண்ணுதல் உருவில்
சால்பும் செம்மையும்
நூல்பால் இல்லை
கார் மழை நேர் பெற
ஊர் வளஞ் சேர்வுறும்

பசிக்கப் புசிக்கப்
பகுத்துண் பது பலம்

களை வயல் விளைவயல்
மழை தவழ் குளவயல்

வளனும் ஆண்மையும்
உள நலத் தாலுறும்

மடியா உள்ளம்
விடியா விளக்கு

நெடுநுண் கேள்வி
தொடும் பண் வேள்வி

புரைதீர் ஒண்மை
புறஞ் சொற் கேளா

நெஞ்சு புகழ் ஊக்கம்
பஞ்சி அகல் ஆக்கம்

ஏம வாழ்க்கை
நாமம் அறியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேறு செய் மாரி
சோறு பெய் வாரி

இனியாரைத் துணைக் கொள்வாய்
இனி யாரைத் துணைக் கொள்வாய்

இனி யார் உளர்?
இனியார் உளர்

போர் நிழல் படியின்
வேர் முதல் மடியும்
வரம்பு இல் வெள்ளம்
புலம் கெட நெறி தரும்

துணிவுடை ஆண்மை
புரிபணி மேன்மை

பாசத்தை விட்டார்
ஈசனைத் தொட்டார்

மனம் நிறை வெய்தின்
பிறவியும் இனிதே

நெகிழ் மன முடையார்
புகழ் தனியுடையார்

வருந்துவார்க் கீசன்
நாமம் மருந்த

உரையும் பொருளும்
உணர்வில் திரையும்

பற்றாவான் பற்றா வான்
கற்றாவான் கற்(று) ஆவான்

ஆள்வான் அருள்வான்
தாள் வான் பணிவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரும் கால் ஒன்றைப்
புணருங்கால் இன் ஒன்றை

உடலும் உயிரும்
விரையின் மலரும்

அன்பு மொழி இன்பம் அளி
தென்பு நிறை நெஞ்சில் உறை

நம்பிக்கை ஊட்டும்
நம்பிக் கை ஊட்டும்!

பரிசு இல் வாழ்க்கை
பரிசில் வாழ்க்கை

சிறந்த நல்குமதி
சிறந்த நல்குமதி

மணி வளர் ஓசை
பணி துணி பாதை

காதைக் காதை
மேதைமைத் தாதை

நினை ஆய் நினையாய்
வினையாய் வினை ஆய்

இரவிரவாய்ச் சிகரமடி
விடிஞ்சால் தகரமடி

அறிவு கரை யாது
செறிவு திரை யாது

உள்ளம் கரை வாய்
உரையிற் கனி வாய்

உமை வணங்கினான்
உமை வணங்கினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி உம் மொழியும்
பொருளில் வழியும்

முறுக முறுக
முயற்சி வலுப் பெறும்

பயிற்சி அனுபவம்
முயற்சி நிறைதளம்

அறிவும் அருளும்
பொருளும் வேண்டும்

இறை உற வென்றும்
பல துறை காட்டும்

மையல் நூர
ஐயம் தீரும்

கேளாக் காது
பாதிக் காது

கேட்கும் காது
முழுமைக் காது

தெளிதல் என்பது
அறிவின் கொழுந்து

தெளியத் தெளிய
முழுமை தெரியும்

சிந்தனைத் தெளிவு
அநுபவப் பிழிவு

தனியச் சாரின்
இனிமை சேரும்

தனிய இருக்க
இனியார் வருவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங் காரம் அதிகாரம்
அதி காரம் அகம் காரம்

அகந்தைப் பட்டார்
சுகம்கைப் பட்டார்

பாம்பு குடித்தால் விஷம்வரும்
பசுக் குடித்தால் பால் வரும்

விடுதலைப் பற்றது
விடுதலைப் பட்டது

மெல்ல மெல்ல
எல்லாம் கரையும்
மனத்தை வென்றார்
சினத்தைக் கொன்றார்

தீயவை தீயவை
தூயவை தூய் அவை

நறும்புகை நிரம்பில்
பெறும் பயன் வரம்பில்

நா ஊறு பட்டார்
கண்ணூறு பட்டார்

மதியை ஏறுவுவான்
விதியை மேவுவான்

புலி கொல்வது மதி
கிலி கொல்வது விதி

சாநாள் வாழ்நாள்
அறிந்தார் இருந்தார்

செப்பு உள் முத்து ஆய்
செப்புள் முத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறகிய அன்பில்
அறுவது நாணம்

பட்டு உத்தரித்தேன்
பட்டுத் தரித்தேன்

இனி அவன் இனியவன்
இனி அவள் இனியவள்

சொல் அவி இல்லம்
பல் வளச் செல்வம்

அன்புறை வழி இல்
இன்பம் பொழியும்

ஒழுக்க நெறி நின்று ஆர்
விழுப்ப நெறி சென்றார்

உய்நெறி அறிவான்
பொய் நெறி தவிர்வான்

பெயர் உள் அவரைப்
பெயர் உள்ள வரை

மூலம் தேடச்
சீலம் கூடும்

காமம் கரையும்
காதல் வரையும்

பெண்பால் அப்பால்
பண்பால் முப்பால்

காதல் திரையும்
நோதல் வரையும்

மதியே ரதியும்
பதியே விதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமே சரியும்
பதியே விதியும்

மின்னிற் பொலியும்
கன்னி (க்) கவிதை

ஒன்றும் இல்லை
ஒன்றுமில்லை

நாடவும் தேடவும்
பாடவும் கூடும்

கோடியுள் ஒரு சிலர்
கோடியில் ஊர் சிலர்

இறையும் இல்லை
முறையும் இல்லை

சுய முரண் பாடு
பய முரண் பாடு

மன்மதப் புன்னகை
மஞ்சக் கனவுகள்

நல்லாக்களாய் இருப்பார்
நல் ஆக்களாய் இருப்பார்

குரு இருந்து சொன்னவை
குரு விருந்து சொல்லவை

விடிய விடிய
மடியுள் தேட்டம்

உயிரும் உயிரும்
கலக்கும் நேயம்

உடலும் உடலும்
உடலுக்கு காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியுறும் அறிவு
தெளிவுறும் உறவு

வெறுமை மனசு
இறைமைத் தவிசு

வினைகள் களைய
மனநிலை முதிரும்

புனிதப் பணியால்
மனிதப் பிணிதீர்

மோகம் அகல
யோகம் குலவும்

பணிவைப் பணிகொள்
துணிவை அணிகொள்

உள்ளம் கனியக்
கள்ளம் தணியும்

முறை தவறா வேகம்
நிறை தவறா யாகம்

மெய்மறந்து மெய்மறந்தார்
பத்தியத்தைக் கைதுறந்தார்

கவிதைக்கு அலை
கவிதைக் கலை

கலக்கிய சிக்கனம்
இலக்கியப் பக்குவம்

பூவைத் திரு
பாவை த்திரு

மனத்தொடு மனம்தொட
இனத்தொடும் மனம்தொடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதை மதித்தால்
அற்புதம் திகழும்

வாழ்க்கைத் துணையே
வாழ் கைத்துணையாம்

தன்மானம் என் மானம்
ஆனால் வரு(ம்) மானம்

அறத்துணை யாவும்
அறத் துணையாகும்

தாம் பத்தியமே
தாம் பத்தியம் ஆம்

பொருளா தாரம்
அருளா தாரம்

வரமறுக்கும் ஆசை களை
தரமறுக்கும் ஆசை களை

நேர்த்தி செறியக்
கீர்த்தி நிறையும்

கற்றார் அறிந்தார்
பெற்று ஆர் உவந்தார்

தொழும் நீர் வடிவில்
எழுஞ் சீர் வடிவில்

நம்பரனை நம்பு அரனைச்
செம் பொருளில் எம் பரனை

உழும் நீர் வயலுள்
செழும் சீர் கிளைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவது தொடங்க
அறுவது வேண்டும்

உடம்படு மெய்வர
உடன்படும் உறவு

உள்ள வாழ்வே
உயிரின் வாழ்வு

எழுத்தும் சொல்லும்
சொல்லும் எழுத்தும்

ஆழ்வாரில் ஆழ்வார்
வாழ்வார் இல் வாழ்வார்

பழியில் விழுந்தார்
வழியில் அலைந்தார்

நாவால் அடிபட்டார்
நோவால் குடி கெட்டார்

இதழ்பிரியாப் புன்சிரிப்பு
கண்க(ளின்) மௌனமொழி

காதல் ஆதரம்
காதலா தரம்

தன் குடி விட்டார்
அன் படிப் பட்டார்

செய்த கவினுக்காம்
செய் தகவினுக்கு ஆம்

முழு வலி முதலை ஓர்
முழு வலி முதலை ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் அர் இன் சொல்
தான் ஆர் தன் சொல்

வருமானம் தவிர்ப்பான்
வருமானம் குவிப்பான்

பெற்றார் பெற்றார்
கற்று ஆர் உற்றார்

வண்டார் பூ மலரார்
கண்டார் தாமலரார்

பற்றார் பற்றார்
முற்றார் முற்று ஆர்

மறையானை மதியானை
நிறையானை பணி ஆணை

கனி வாய் இன் சொல்
இனி தாய் உன் சொல்

படி யார் அரசு
குடி யார் அரசு

பிள்ளை உள்ள தாய்
பிள்ளை உள்ளத்தாய்

நீர் ஓடினால் நதி
நீர் தேங்கினால் விதி

கலையும் ஞானம்
நிலையும் மோனம்

ஞானமும் அருளும்
மோனமும் மருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்பயன் தனி
கற்பகக் கனி

உள் ஒளிப் பெருக்கு
சொல் வழிச் செருக்கு

நீரும் வேரும்
ஆரச் சேரும்

உண்மை தெய்வம்
உணரின் உய்வம்

நகரும் நகரச்
சிகரம் சமைக்கும்

உச்சி உச்சி
ஏறின் ஏறும் மெச்சும்

பிடிச்சுப் பிடிச்சு
முடிச்சு முடிச்சு

இனித்தான் இனித்தான்
இனித்தாள் இனித்தாள்

இனித்தேன் இனிப்பேன்
தனித்தேன் வருந்தேன்
நம்பிக்கை வைப்பான்
நம்பிக்கை வையான்

உணர்ச்சி கரமாய்
உணர் சிகரமாய்

நிறை மொழி வாய்
உறை மொழி வாய்

அறச்சுவர் அமைத்தார்
புறச்சுவர் சமைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் களை நீக்கு
சோதி பிறக்கும்

அம்மையே அப்பா
தம்மையே ஒப்பா

நாக்கு அழுக்குப்
போக்கு இழுக்கு

சாத்தான் தொடர்பு
முடிவில் சாத்தான்

வண்ணமே கலை
வண்ணம் மேகலை

மனைவி நாயகன்
மன விநாயகன்

சோதி இறைவனைச்
சோதி இறைவனை

நீதி இறைவனை
நீ தீ இறைவனை

தத்தளித்தவன்
தத்து அழித்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விழுமியப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வழி

அன்பை நாடி அருளை நாடி
அறிவை நாடிக் கூடுவீர்
என்றும் வாழ்வில் இனிமை கோடி
எய்தி நின்றே வாழுவீர்

நன்றி யோடும் ஞானம் தேடி
நன் நெறிக்கண் சேருவீர்
என்றும் வெற்றி பெற்று நல்ல
இயல்பு வாழ்க்கை வாழ்வீர்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா அப்பா

அம்மா அன்பின் திரு வுருவம்
அப்பா கருணை அருள் வடிவம்
எம்மை வளர்க்கும் அவர்களை நாம்
என்றும் நன்றாய் வணங்கிடுவோம்.

நன்றிப் பெருக்கின் உணர்வோடு
நாளும் சொற்படி நடந்திடுவோம்
என்றும் இறையை வணங்கிடுவோம்
எல்லோர்க்குமாய்த் தொழுதிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற் செல்வம்

நற்பண்புகளே நம் செல்வம்
அவையே வாழ்வின் அவசியமாம்
நற்பண்பாலே ஒரு மனிதன்
நன்றாய் அறியப்படுகின்றான்.

வெற்றி வாய்ப்பைக் காணுகிறான்
விளைவைப் பொதுமை ஆக்குகின்றான்
சுற்றம் சூழ வாழுகின்றான்
சோலி யின்றி வாழுகின்றான்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை

அன்புக்கு தலை வணங்கு
அறிவினை நிதம் பெருக்கு
நன்றி சொல் உதவிக் கென்றும்
நட்பினை மேம்படுத்து

வென்றி கொள் ஆற்றலையே
பொறாமை கொள்மனம் விலக்கு
என்றும் நீ இதனைப் பேணு
நிச்சயம் உலகம் போற்றும்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுதல்

உண்மை பேச வேண்டும்
உலகமே அமைதியாக
கண்ணியம் காக்க வேண்டும்
கலகத்தை நிறுத்த வேண்டும்.

சண்டைகள் ஒழிய வேண்டும்
சமரசம் நிலைக்க வேண்டும்
எண்ணிலா உயிர் பறக்கும்
இயக்கங்கள் ஒழிய வேண்டும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவல்

திரும்பிய பக்கம் எங்கும்
திருவளர் நுட்பம் செய்வோம்
வரும்படி எவரும் எய்த
வழிபல திறந்து வைப்போம்

விரும்பிய யாவும் நல்கும்
விண்ணுலகு எழுப்பி வைப்போம்
கரும்பினை ஒத்த ஞானம்
கைவரு கலை பயில்வோம்

அரும்பெறும் செறிவு ஞானம்
அடை நெறி பல திறப்போம்
பெரும் புகழாளர் நட்பை
தேடிப் போய் எமை வளர்ப்போம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

அன்னை வளர்ப்போம் - நல்ல
அறிவைப் பெருக்குவோம்
ஒன்று சேருவோம் நம்
உறவைப் பேணுவோம்

நன்றே பல புரிவோம் - நலம் சேர்
நன்மைகள் நாடிச் செல்வோம்
என்றும் உடல் உழைப்போம் - உயர்
ஏற்றங்கள் பல சமைப்போம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடத்தைகள்

பணிவாய் துணிவாய் பணிவாக
பரிவாய் தாளப் பேசுங்கள்
செய்யும் பணியாய் இருந்தாலும்
செய்ய வேண்டிக் கொண்டாலும்

அன்பும் குழைவும் அதில்சேர
அமைதியாகக் கூறுங்கள்
அனைத்தும் வெற்றியாகி வரும்
ஆக்க பூர்வம் ஆகுமிவை

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வின் வழி

முயற்சியும் பயிற்சியும்
உயர்ச்சி தரும்
பயிற்சியில் ஆற்றல்
பல வளரும்
அயர்ச்சியினாலே
உயர்ச்சி கெடும்
உயர்ச்சியினாலே
மகிழ்ச்சி வரும்
உழைப்பதனாலே
வாழ்வுயரும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றார் அருமை

அம்மா அன்புக்கு அடிபணி
அப்பா வார்த்தை அருள் மொழி
எம்மை உயர்த்தும் ஏணிகள்
ஏற்றிக் கரைசேர் தோணிகள்
உண்மை உணர்த்தும் ஞானிகள்
உறுதி நல்கும் உத்தமர்
கண்ணியத்தின் காவலர்
கண்ணால் காணும் கடவுள்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயில் பலன்

உழைப்பு வெற்றிக்கு அறிகுறி
ஒயர் முயற்சி முதல்ப்படி
பயிற்சி ஊட்டும் களை தெளி
பணிவு காட்டும் புதுவழி

திட்டமிட்டு செயல்படு
திறக்கும் பாதை அதன் நெறி
நேரம் மதி மணிமணி
பட்டதுயரம் படிபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ உரைத்தல்

மன்னிப்போம் பிறர்பிழை மறப்போம்
மனதால் பொறாமை அகற்றிடுவோம்
முன் நிற்போரை நேசமுடன்
மதித்து மகிழ பேசிடுவோம்

பணிவும் தயவும் காட்டிடுவோம்
பலரும் போற்ற ஏற்றிடுவோம்
தணிந்த வார்த்தை தயவு நிறை
தகுந்த வேளை தயை செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லியல்புகள்

அன்றே குறையை மறவுங்கள்
அன்பால் மனசை நிறையுங்கள்
நிறையைப் போற்றிப் புகழுங்கள்
நேசமுடன் குலவுங்கள்

என்றும் உறவை வளருங்கள்
இனிமை பயக்க உரையுங்கள்
சென்றதை மறந்து சிரியுங்கள்
செல்வம் தேடிக் குவியுங்கள்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்பு

பொறுமை பேணிப் பழகுங்கள்
போலிப் போக்கை விலக்குங்கள்
பொதுவில் மற்றோர் மனம் நோகும்
பொல்லா வார்த்தை தவிருங்கள்

முகம் கோணாமல் நடவுங்கள்
மூத்தோர் வாக்கை மதியுங்கள்
சிறுமை கண்டு விலகுங்கள்
சீற்றம் தவிர்த்து விலக்குங்கள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்பு

வறுமை கண்டால் உதவுங்கள்
வஞ்சகப் போக்கை உதறுங்கள்
முதியோர்க் உதவ முந்துங்கள்
முறமை போற்றி வாழுங்கள்

அங்கம் குறைந்தோர்க்கு உதவுங்கள்
அன்புத் துணையை அளியுங்கள்
தங்க உதவி செய்யுங்கள்
தயவோடு அன்பு காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

சினத்தை மனத்தால் நீக்குங்கள்
செய்வன யாவும் வெற்றி தரும்
மனத்தின் சுமைகள் இறங்கிவிடும்
மகிழ்ச்சி எங்கும் ஆட்சி செய்யும்

இனங்கள் யாவும் ஒன்றாகும்
இனிமை இன்பம் இதம் செய்யும்
மனித நேயம் மாட்சி பெறும்
மலரும் வாழ்வில் மாண்புகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு

அறிவே எவர்க்கும் அரிய துணை
அதுவே மனிதர் ஆத்ம பலம்
பெறுக அறிவை பெருக்கிடுக
பிச்சை எடுத்தும் படித்திடுக.

அறிவு வறுமை ஆபத்து
ஆற்றல் பெருகும் உள்ளத்தில்
உயர்ந்த அன்பும் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை பேசுவோம்

உண்மை ஒன்றே பேசுவோம்
உறுதி இன்றே பூணுவோம்
எண்ணும் எழுத்தும் கண் என
உண்மையும் உயிராம் என

எண்ணம் யாவும் எங்களின்
இலட்சிய மூச்சாமென
உண்மை பேசி வாழுவோம்
உயர்ந்த வழியைக் காணுவோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

ஒற்றுமையே எங்கள் பலமாகும்
உணர்ந்தே ஒன்றாய்ச் சேருங்கள்
வெற்றி நிச்சயம் உருவாகும்
வேள்வி இதனைத் தொடங்குங்கள்

பற்றும் பாசமும் உண்டாகும்
பணியில் நேர்த்தி தொண்டாகும்
சுற்றம் யாவும் ஒற்றுமையால்
துயரம் எல்லாம் பறந்தோடும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்ய வேண்டியன

பசித்துயர் போக்க முந்து
பரிவுடன் அன்பாய்ப் பேசு
புசிப்பதற்கு உதவு நன்றாய்
பொறுமையோடு அணுகு நன்றாய்

பசிக்களை நீக்கி நன்றாய்
பணிவுடன் பேசி
பண்புடன் ஆறிப்போக
பலபடி உதவு நன்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்

கல்வி தந்த ஆசானை
காலம் முழுதும் வணங்குங்கள்
சொல்லை நினைத்து துதியுங்கள்
தொண்டை நினைத்து புகழுங்கள்

அண்டி அவரோடு ஐக்கியமாய்
அன்பால் தொண்டு செய்யுங்கள்
தோன்றாத் துணையாய் என்றும் அவர்
தொல்லை போக்கும் துணையாகி

ஈன்றால் போல இருந்துதவும்
ஏற்றம் மிக்கவர் ஆசானே
அடக்கம் உடையார் உள்ளன்பால்
அரிய ஞானம் புகட்டும் அவர்

சான்றாண்மையினால் தயை செய்வர்
தலையில் வைத்துத் தொழுவோமே
பேசாப் பொருளாய் பெருந்துணையாய்
பேராற்றல்கள் பிணைப்பாரே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

தேடிப்புது பயிலுங்கள்
திறனை அதிலே வளருங்கள்
கூடியிருந்து பயிலுங்கள்
குறைகள் மறந்து பழகுங்கள்

தேடும் செல்வம் கல்வியென
தேர்ந்து புரிந்து முயலுங்கள்
நாடும் புதுமை நலன்களினால்
நவீன நெறியை வளருங்கள்

வாடும் கல்வி யற்றோர்க்கு
வழங்க முன்னின்று உதவுங்கள்
ஆடை அற்றோர்க் உதவுங்கள்
அவரைச் சமமாய் மதியுங்கள்

ஆய கலைகள் அறியுங்கள்
அறிவால் உம்மை நிறையுங்கள்
அறிவு அறிவாக அறிந் தன்பு
அனைவர்க்கும் செய்து உதவுங்கள்

அறிவில் இறைவன் உறைகின்றான்
அனைத்துமாக இருக்கின்றான்
அறிய அறிய அறியாமை
அகற்றிக் கொண்டே இருக்கின்றான்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

நல்லோர் நட்பால் நலம் பெருகும்
நலிவு நீங்கி பலம் மலரும்
செல்லிடம் எங்கும் துணையாகும்
சேர் இடத்தே வல்ல பிணையாகும்

தொல்லை நீங்கும் துயர்களையும்
தோழமையோடு உறவாடும்
எல்லா விளைவும் இனிதாகும்
இயல்பாய் யாவும் கைகூடும்

பல்கும் அன்பு பாசத்தால்
பரவும் புகழும் பண்புகளும்
எல்லையில்லா மகிழ்ச்சியினால்
இதய நிறைவும் உண்டாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாமுயற்சி

பஞ்சம் தீர்க்கும் பயிர் செய்வாய்
மண்ணை நன்றாய்ப் பண்படுத்தி
மிஞ்சும் படியாய் தானியங்கள்
மிக்க விளைவைப் பெற்றிடுவாய்

சிறுதானியங்கள் பருப்பு வகை
செழிக்கச் செய்து விளைச்சலினை
பெறுதற்கு உரிய கல்விகலை
பேணிப் பயில முயன்றிடுவாய்

பஞ்சம் போக்க பசிநீக்க
பாடுபட்டு உழைப்பாயேல்
அஞ்சா நெறியை அவை நல்கும்
ஆக்கம் ஊக்கம் அடிஓற்றி

ஓயா உழைப்பும் முயற்சியுமே
உயர்த்தும் ஏணி உண்மை இவை
தேயா செல்வம் அவை நல்கும்
திறனும் தெளிவும் அவை நல்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிர்க்க வேண்டுவன

வேண்டா எண்ணம் விலக்குங்கள்
வெறுப்பு பொறாமை விளைவுகளை
தூண்டி வளர வழி வகுக்கும்
தொல்லைக்குள்ளே செலுத்தி விடும்

மூண்டு பகைமை முற்கோபம்
முதலாம் கெடுதிப் போக்குகளில்
தூண்டா வண்ணம் எமைக் காக்க
தூய எண்ணம் வளருங்கள்

நல்லோர் நட்பை நாடுங்கள்
நாளும் அவர் வழி பேணுங்கள்
வல்லமை துணிவு வளருங்கள்
முன்னோர் வழியில் நடவுங்கள்

செல்வம் தேட உழையுங்கள்
தீயோர் செருக்கை அறுப்பதற்கு
வல்ல கருவி அதுவாகும்
வலிமை சேர்க்கும் துணையாகும்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வழி

உண்மை என்றும் பேசுங்கள்
உத்தமராக்கும் உலகெல்லாம்
எண்ணிய யாவும் ஈடேற்றும்
எதிலும் வெற்றி இணைவாகும்

கண்ணியமான நெறிகளிலே
கருத்தைச் செலுத்தி வழிநடத்தும்
திண்ணிய நெஞ்சில் ஒளிபரவும்
தேசு மிக்க சுடர் பரவும்

மண்ணில் மதிப்பு மிகவளரும்
மாட்சி பெருகி மதிப்பு உயரும்
விண் உயர் கீர்த்தி விளைந்து வரும்
விளக்காய் ஞானச் சுடர் மிளிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

தீமை இல்லாத சொல்லுங்கள்
தீர்க்க மாகப் பேசுங்கள்
யார்க்கும் அன்பு காட்டுங்கள்
அதிலும் உண்மை காட்டுங்கள்

அன்பை நன்றாய் வளருங்கள்
அறிவை என்றும் பெருக்குங்கள்
என்றும் இவற்றால் நன்மைகளை
எய்தி மேன்மை அடைவீர்கள்

சென்ற இடங்கள் எங்கும் நீர்
செல்வாக்கோடு மிளிர்வீர்கள்
நன்றே செய்வீர் பல செய்வீர்
நல்லோர் கேண்மை அடைவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய கருமம்

தூய மனமும் சிந்தனையும்
தொண்டு செய்யும் பக்குவமும்
தாயின் அன்பும் தண்ணளியும்
தயையும் கொடையும் நடுநிலையும்

தோயும் வாழ்வைத் தொடருங்கள்
தோழமை யோடு நடவுங்கள்
பகைமைப் போக்கை தவிருங்கள்
பாசத்தோடு உதவுங்கள்

முரண்படு எண்ணம் முளையாத
முதிர்ச்சி எய்த முயலுங்கள்
சரணம் இறையை அடையுங்கள்
தக்கோராக வாழுங்கள்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை பேசுவோம்

உண்மை ஒன்றே பேசுவோம்
உறுதி இன்றே பூணுவோம்
எண்ணும் எழுத்தும் கண் என
உண்மையும் உயிராம் என

எண்ணம் யாவும் எங்களின்
இலட்சிய மூச்சா மென
உண்மை பேசி வாழுவோம்
உயர்ந்த வழியைக் காணுவோம்

கண்ணியத்தின் ஊற்றினில்
கனவு யாவும் மெய்பட
திண்ணியத்தின் நெஞ்சோடு
செய்யும் உண்மை வார்த்தை

நன்மை கோடி நல்கிடும்
ஞானமும் முதிர்ந்திடும்
எண்ணிலா சிறப்புகள்
எங்குமே நிறைந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவாதீர்

உதவியை என்றும் மறவாதீர் - உயர்
பதவி வந்தாலும் பணம் வந்தாலும்
முன்செய் உதவியை என்றும் மறவாதீர்

துன்பம் துரத்தி சூழ்வே ளை
துயர்களை நீங்க தோள் கொடுத்தே
செய் உதவியை என்றும் மறவாதீர்
உயிர் உள்ள வரை மறவாதீர் - உதவியை

தோன்றாத் துணையாய் துயர்களையும்
தொல்லைகள் நீங்க எமைத் தாங்கி
அயரா தளித்த அன்பு நிறை
ஆக்கத்துணையாய் முன் செய்த - உதவியை

நன்றி மறவா நல்வாழ்வு
நம்மை உயர்த்தும் பேரேணி
என்றும் மறவோம் நன்றியை நாம்
ஏற்றம் தந்த உதவியை நாம் - உதவியை

என்றும் மறவோம் மறவோமே
இதயக் கனிய இருப்போமே
நன்றே செய்தீர் நலம் செய்தீர்
நாவார நாம் போற்றிடுவோம் - உதவியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

பத்து விரலாலும் பல நலம் விளைப்பாய்
புத்தம் புதிய துறை புவி முழுதான தோளா
நித்திய பத்திய நிலைவளர்
சித்திகளில் பல சிகரங்கள் சமைத்தே (பத்து)

எத்திசையும் இசை
இணையிலா முயற்சியால்
நற் பெறு பேறுகள்
நாம் தினம் பெறவே - பத்து

முற்பேறு அறிவின்
வெற்றியின் பேறாய்
நற் செல்வ மாய முயற்சி
நவநவமாகவே - (பத்து)

பொற்குகை குவிப்பாய்
புவி முழு தெங்கணும்
அற்புத முயற்சி செய்
ஆளுமை யாலே - பத்து

நற்பணி நாடி
நவ நவ மணியாய்
நல்லன விளைப்பாய்
நம் நாடு நலம் பெற - பத்து

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரை மதித்தல்

கல்வி அறிவு ஒழுக்கம் மிக்க
கண்ணியராய் வாழும் உயர்
பெரியோரைப் பணிந்திடுவோம்
பெற்றோரை மதித்திடுவோம்

மாட்சி நலன்கள் பலம்மிக்க
மாண்பு செறிந்த மூத்தோரை
போற்றி நின்று வழி நடப்போம்
பொறுமையுடன் அவர் சொற்கேட்போம்

மூதறியர் முன் மொழிந்த
முதுநெறியும் மூதுரையும்
ஆதியோடு அந்தமாக
அவர் வாய் வழிகேட்போம்

நீதி நெறி நல்லொழுக்கம்
நித்தம் அவர் சொல் வழியில்
போதனையாய் கொள்வோம்
புதிய உலகு அமைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறங்கூறாமை

போக விட்டு புறங் கூறல்
புனிதமான பண் பல்ல
போக விட்டு புறங்கூறிப்
புறணி சொல்லல் மிக்க கேடு

சான்றோர் போற்றா ஒழுக்க மது
தக்கோர் நாணும் செய்கை யது
ஈன்றாள் விருப்பா இயல்பும் மது
இதனைத் தவிர்த்தல் ஏற்ற மது

உலகம் தூற்றும் வழக்க மது
உயர்ந்த குணத்தை மாற்று மது
கலகம் பலவே ஆக்கு மது
கவலை வளர்த்து கெடுக்கு மது

தூற்றித் திரியும் பழக்கமிது
தூய நல்ல பண்பல்ல
சேற்றில் குளித்தல் ஒக்குமிது
செய்யாதீர் இச்சிறுமையையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி செய்

இன்றே செய்நீ நன்றே செய்
நாளை என்று நிறுத்தாதே
என்றும் செய்நீ எல்லோருக்கும்
இனிதே செய் எவ் ஏழைக்கும்

நன்றி மறந்து வாழாதே
நல்லோர் வார்த்தை மீறாதே
என்றும் ஊக்கம் குன்றாதே
ஏழை என்றும் இகழாதே

என்றும் ஒன்றாய் இணையுங்கள்
ஏற்ற கருமம் புரியுங்கள்
நன்றே ஆகும் யாவையுமே
நாளும் நன்றாய் யாவையுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதமும் கதையும்

படலையில் என்ன
மணிச்சத்தம்?
பார் பார் தம்பி பார் தம்பி
படலையில் டிங்! டிங்!! மணிச்சத்தம்
பார்த்து வருகின்றேன் அப்பா.

கடிதம் வந்தது
பிடியுங்கள்
கடிதம் பிரிச்சுப் படியுங்கள்
வடிவாய்ப் படிச்சுப்
பாருங்கள்
"வந்த புதினம் சொல்லுங்கள்,

மாமா போட்ட
கடிதம் பார்
மச்சான் அத்தை நற்சுகமாம்
பூமா இப்போ கதைப்பாளாம்
பொங்கலுக்கே வருவோமாம்.

●

# பம்பரம் சுற்றுது

பம்பரம் சுற்றுது பம்பரம் சுற்றுது
பாலா மாலா பாருங்கள்.
பச்சை சிவப்பு வட்டங்கள் சுற்றுது
வந்து வடிவைப் பாருங்கள்.

மாமா தந்த பம்பரம் சுற்றுது
மஞ்சு சிறீ பாருங்கள்
மணலில் கூட பம்பரம் சுற்றுது
மங்கை அக்கா பாருங்கள்.

ஒற்றைக் காலில் பம்பரம் சுற்றுது
ஓடிவந்து பாருங்கள்
ஊசிக் காலில் பம்பரம் ஆடுது
ஒதுங்கி நின்று பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயலார் ஓட்டம்

கொம்புச் செவியைக்
கூராய் நீட்டிக்
கொண்டே முயலார்
ஓடுறார்.
அம்பைப் போன்று
கெதியாய்ப் பாய்ந்து
அவசரமாய் போகிறார்.

அம்பிப் பாப்பா
கையைத் தட்டி
ஆசையாகப் பார்க்கிறான்.
தம்பி கூடத்
தப்பி ஓடும்
முயலார் ஓட்டம் பார்க்கிறான்.

●

# பட்டம் பார்

ஊயிங்....ஊ...யிங்
விண் கூவ
உயரப் பறக்குது
பட்டம் பார்

நூலில் நின்று
வாலாட்டி
மேலே ஏறுது
பட்டம் பார்

வாயில் விரலை
வைத்துப் பார்க்க
வைச்ச அழகுப்
பட்டம் பார்

வாலை அறுத்துத்
தலை கீழாக
வருகுது கீழே
பட்டம் பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கு மச்சாள்

கொக்கு மச்சாள்
ஏன் குளத்தருகே
ஒற்றைக் காலில் நிற்கின்றாள்
அக்கம் பக்கம்
பாராமல்
அவள் ஏன்
குனிந்து நின்கின்றாள்

குஞ்சு மீன்கள் கூட்டம்
வரக்குனிந்தேன்
சும்மா நிற்கின்றாள்
கொஞ்சம் பெரியமீன் வர
ஏன் கொத்திக் கொண்டு
பறக்கின்றாள்.

●

# நத்தையாரே!

நத்தையாரே! நத்தையாரே!
எங்கே போகிறீர்
நாள் முழுவதும் ஊர்ந்து ஊர்ந்து
எங்கே போகிறீர்

அத்தை சித்தி வீடோ தேடி
அரைந்து போகிறீர்
ஆரைத் தேடி ஊரெல்லாம்
அளந்து போகிறீர்

மெத்தை வீட்டைச்
சுமந்து கொண்டு
எங்கே போகிறீர்
மிகக் களைத்தால்
தூங்குதற்கா
கொண்டு போகிறீர்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈயாரே!

ஈயாரே நீர்
ஏன் வந்தீர்
இங்கே
ஏனோ பறக்கின்றீர்

ஓயாமல் ஏன்
திரிகின்றீர்
ஊத்தை அளைந்தா
வருகின்றீர்

நோயோ கொண்டு
வருகின்றீர்
வேண்டாம்
நமக்கோ
நோய் வேண்டாம்.

# நிலாத்தோணி

வானக் கடலில்
நிலாத் தோணி
வருகுது பாருங்கோ!
வரவரப் பெரிதாய்
வளர்ந்து பின்னாளில்
கரையுது பாருங்கோ!

பொள்ளல் விழுந்த
வெள்ளி வலைக்குள்
போகுது பாருங்கோ!
பஞ்சுப் பொதிபோல்
முகிலுள் ஓடி
மறையுது பாருங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணில் அண்ணா

வாலை வாலை ஆட்டி
மாவில்
வந்திருக்கும் அணில் அண்ணா
மேலும் கீழும்
பார்த்து எதற்கு
மிகவும் சத்தம் போடுறீர்

வரிவிழுந்த முதுகு மயிரின்
வடிவைக் காட்டிக் கத்துறீர்
பெரிய சிறிய
கொப்புக் கெல்லாம்
பாய்ந்து தாவிப் போகிறீர்

காலை மாலை மரத்தில் வந்து
மாம் பழத்தைக் கடிக்கிறீர்
வேலை இன்றி
நாங்கள் காவல்
வேலை செய்ய முடியுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமை மாமா

ஆமை மாமா
அவசரம் இல்லை
என்றா அசைகின்றீர்
ஆறுதலாகப்
போனால் போதும்
என்றா நடக்கின்றீர்

மாமா மழை வெயில்
படாது என்றா
மெதுவாய் அசைகின்றீர்
மரம்போல் உடம்புள்
தலையைக் காலை
ஏன்நீர் மறைக்கின்றீர்

அமைதியைத் தானே
விரும்பி மாமா
மெதுவாய் அசைகின்றீர்
சுமை மிகக் கனத்தோ
தூக்கமாட்டாமல்
துன்பப் படுகின்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சுகளும் கோழியும்

கோழிக் குஞ்சைக்
கூட்டி அம்மாக்
கோழி குப்பை கிண்டுது

கோழிப் பிள்ளைக்
குஞ்சுக் கூட்டம்
கொத்தி உணவை உண்ணுது

கோழிப் பிள்ளைக்
குஞ்சைத் தூக்கப்
பருந்து வட்டம் போடுது

கோழி சத்தம்
போட ஓடிக்
குஞ்சு மறைந்து கொள்ளுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டியார்

பளபள பளபள
கண்ணைக் காட்டும்
பட்டுப் பூனைக் குட்டியார்
பாலைக் குடிக்கக்
கண்ணை மூடும்
பஞ்சுப் பூனைக் குட்டியார்.

எலிகளை வளைகளில்
கண்டால் பதுங்கும்
எங்கள் பூனைக்குட்டியார்
ஏறிப் பிடிக்கத்
தாவிப் பாய்வார்
எங்கள் பூனைக்குட்டியார்

காலை நக்கி
முகத்தைக் கழுவும்
சின்னப் பூனைக்குட்டியார்
வாலை ஆட்டிக்
காலில் உரசும்
வடிவுப் பூனைக் குட்டியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்டுக் கப்பல்

வண்டுக் கப்பல்
வருகிறது
வானில் பறந்து
திரிகிறது
குண்டுப் பூவில்
இருக்கிறது
தேனை
உறிஞ்சிக் குடிக்கிறது

வண்டுக் கப்பல்
பறக்கிறது
வளைந்து
சுழன்று இரைகிறது
கொண்டைப் பூவில்
சுழல்கிறது
குந்தப் பயந்து
பறக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்டின் வருகை

எட்டுக்காலை
ஊன்றி அதோ
நண்டார் வருகிறார்
இரண்டு காலைப்
படம் எடுத்து
நண்டார்
வருகிறார்

வட்டக் குடை
பிடித்து மெல்ல
நண்டார் வருகிறார்
வயலில் வேலை
முடித்துக் கொண்டோ
நண்டார் வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டுக்குட்டி

ஆட்டுக் குட்டி
துள்ளி ஓடித்
திண்ணையில் பாயுது

வீட்டுத் தோட்ட
வெண்டிச் செடியை
விரும்பிக் கடிக்குது

சின்னச் சொட்டு
வாலை ஆட்டித்
திரும்பிப் பார்க்குது

என்னைக் கண்டு
முட்டக் கிட்ட
எழும்பித் தாவுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிமின்னல்

மின்னல் அடிக்குது
மின்னல் அடிக்குது
மினுங்கி மின்னல் அடிக்குது

மேள தாள
கோலத்தோடு
பெரிய மின்னல் அடிக்குது

கரைந்த பொன்னாய்
வானம் எங்கும்
கட்டித் தங்கம் சிரிக்குது

கண்ணைப் பறிக்குது
காதை அடைக்குது
கட கடவென வெடிக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவி அக்கா

தத்தித் தத்திக்
குருவி அக்கா
முற்றத்திலே வருகிறாள்

தனது சொண்டால்
இறகைக் கோதிச்
சரிப்படுத்தி விடுகிறாள்

கொத்திக் கொத்திக்
கொஞ்ச நெல்லை
எடுத்து மெல்லத் தின்னுறாள்

குஞ்சுத்தம்பி
பிடிக்கப்போகக்
கொஞ்சம் தத்தி
இருக்கிறாள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பாப்பா

பாப்பாப் பா
பாப்பாப்பா
பாட வாருங்கோ!
பாலர்களே!
ஒன்று கூடிப்
பாடிப் பாருங்கோ.

பூப்போன்ற
கையைத் தட்டிப்
பாட வாருங்கோ!
புதுப் பாடல்
நீங்களும் கொஞ்சம்
பாடி ஆடுங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவும் கன்றும்

காலைக் காதைத்
தாய்ப்பசு நக்கக்
கன்றுக்குட்டி நனையுது
மேலும் கீழும்
நாக்கால் நக்க
மிகவும் குனிந்து நிற்குது.

வாலைக் கிளப்பித்
தூக்கிக் கொண்டு
வந்து திரும்பி ஓடுது
பாலை மடியில்
முட்டி இடித்துப்
பார்த்துப் பார்த்துக்
குடிக்குது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் ஆட்டம்

தம்பி ஊஞ்சல் ஆடுறான்
தங்கை பாட்டுப் பாடுறாள்
அம்பிப் பாப்பா ஊஞ்சலின்
ஆட்டம் இருந்து பார்க்கிறான்.

அண்ணா ஊஞ்சல் ஆட்டுறான்
ஆசைத் தம்பி ஆடுறான்
எண்ணி அக்கா ஊஞ்சலின்
ஆடும் கணக்கை எடுக்கிறாள்,

உஞ்சல் ஆட்டம் நடக்குது
ஓடி வந்து பாருங்கோ
ஊஞ்சல் ஆட நீங்களும்
ஒன்றுகூடி வாருங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறா

குறுக்கூ! என்று
கூவும் புறா
குஞ்சைக் கூட்டிக்
கொஞ்சும் புறா.

கறுப்பு வெள்ளை
வண்ணப் புறா
கழுத்தில் அழகு
மின்னும் புறா.

வாழைப் பூவைப்
போன்ற புறா
வாணம் போலப்
பறக்கும் புறா

தாழம்பூப் போல்
மாறும் புறா
தலையை சிறகுள்
மறைக்கும் புறா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வௌவால் தம்பி

தலை கீழாய்த் தொங்குவதேன்
வௌவால் தம்பி!
தப்பேதும் செய்தீரோ
வௌவால் தம்பி!

பகல்வேளை எங்கு
சென்றீர்
வௌவால் தம்பி!
பழம் தேடிச் சென்றீரோ
வௌவால் தம்பி!
மிகப் புதினம் காட்டுதற்கா
வௌவால் தம்பி!

தோலாம் உனது
இறக்கை
வௌவால் தம்பி!
தொட்டுப் பார்க்க
ஆசையடா வௌவால் தம்பி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலார் நடனம்

கண் நிறைந்த
தோகை விரிச்சு
நடனம் ஆடுறார்
மயிலார்
நடனம் ஆடுறார்
காலைத் தூக்கித்
தாளத்தோடு
நடனம் ஆடுறார்
தெய்! தெய்!
தெய்! தெய்!
ஆட்டம் ஆடுறார்
திரண்ட மேகம்
இருண்டு வர
ஆட்டம் ஆடுறார்
மயிலார்
ஆட்டம் ஆடுறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் பசுவும்

பறந்து வந்தாள்
காக்கா
பசுவின் மேலே இருந்தாள்
கறுப்பி அக்கா
காக்கா கத்திச்
சத்தம் போட்டாள்
கொத்திப் பூச்சி
பிடித்தாள்
கொஞ்சம்
தத்தி இருந்தாள்
கொத்திக் கொத்திக்
கொஞ்சம்
குறும்பும் செய்து
பார்த்தாள்
வெள்ளைப் பசு மாமி
வீசி விட்டாள் வாலால்
மெல்ல
எழும்பிக் காக்கா
மேலே பறந்து போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வீட்டு நாயார்

வள்! வள்! வள்! வள்!!!
நாயார்
வாலை வாலை ஆட்டி
உள்ளே தலையை நீட்டி
உட்கார்ந்திருப்பார்
வீட்டில்.
வீட்டு வாசல்
படியில்
நீட்டிக் கிடந்து
பார்ப்பார்
பாட்டி போக
முன்னால்
கூட்டிக் கொண்டு
போவார்.
ஆட்டை மாட்டைக்
கண்டால்
அதை மறித்துக் குலைப்பார்
சேட்டை விட்டால்
உறுமி
சிறிது துரத்திக் கலைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைக் கோச்சு

கடகட கடகட
கடுகதி அட்டைக்
கோச்சு வருகிறது
தொடுபடப் பெட்டிகள்
இல்லா எஞ்சின்
கோச்சு வருகிறது

தண்டவாளம்
இல்லா தோடிக்
கோச்சு வருகிறது
சனங்கள் ஏறாக்
கறுப்புச் சிவப்புக்
கோச்சு வருகிறது

மண்ணும் மரமும் ஏறி
அட்டைக்
கோச்சு வருகிறது
மாரிகாலம் என்பதைச் சொல்லக்
கோச்சு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்பார்

கீ… கீ… கீ… கீ… நுளம்பார்
கீதம் பாடிப்
பறந்தார்
காதின் அருகில்
சுழன்றார்,
கனக்க ஏதோ
பறைந்தார்.

கழுத்தில் மெல்ல
இருந்தார்
கடித்தார் இரத்தம்
குடித்தார்
கொழுத்து ஊதிச்
சிவந்தார்
கையால் வெளுக்க
இறந்தார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைகீழாய் தொங்குவதேன்

தலைகீழாய் தொங்குவதேன் வௌவால்தம்பி
தப்பேதும் செய்தீரோ வௌவால் தம்பி
பகல் வேளை எங்கு சென்றீர் வௌவால் தம்பி
பழம் தேடி சென்றீரோ வௌவால் தம்பி

மேலையே தொங்கிறியே வௌவால் தம்பி
மிக புதினம் காட்டுதற்கா வௌவால் தம்பி
தோலாம் உனது இறக்கை வௌவால் தம்பி
தொட்டுப் பார்க்க ஆசையடா வௌவால் தம்பி.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிறைந்த தோகை விரித்து

கண்ணிறைந்த தோகை விரித்து நடனமாடுகிறார் மயிலார் நடனமாடுகிறார்
காலைத்தூக்கி தோகை விரித்து நடனமாடுகிறார் மயிலார் நடனமாடுகிறார்

தெய் தெய் தெய் தெய்தெய் ஆட்டமாடுகிறார் மயிலார் ஆட்டமாடுகிறார்
திரண்ட மேகம் இருண்டு வர ஆட்டமாடுகிறார் மயிலார் ஆட்டமாடுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கார் கூத்து

டிங்கிடிக்கிடி மூன்று குரங்கார் ஆடுறார் மூன்று குரங்கார் ஆடுறார்
டங்குடங்கட டங்குடக்கட மேளத்துக்கே ஆடுறார்

குட்டிக்கரணம் போடச் சொல்ல கும்பிட்டுக்கரணம் போடுறார்
சட்டை போட்டுச் சலங்கை கட்டி பாலக்காவடி ஆடுறார்

தட்டித் தட்டிச் சொல்லச் சொல்ல தாளத்தோடுமாடுறார்
கட்டைக் குறவன் காசைக் வேண்டக் கையை நீட்டி கேட்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமி குயில் மாமி

மாமி குயில் மாமி
மாமி குயில் மாமி
மாந்தளிரை கோர மாமி குயில் மாமி
மாமரத்தில் வாரீ மாமரத்தில் வாரீ

புள்ளி குயில் மாமி
புள்ளி குயில் மாமி
புதிய பாட்டுப்பாடு பிள்ளை நானும் கூவ
பின்தொடர்ந்து கூவு பின்தொடர்ந்து கூவு

கூக்கூ என கூவி கூப்பிடுவது யாரை
கூக்கூ என நாங்கள்
கூவகூவ மாமி கூவ கூவு மாமி

கரிய குயில் மாமி
கரிய குயில் மாமி
பாதி நிக்க கூவு கருமை குயில் மாமி - உன்
கட்சி வந்தது என்ன

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலரெல்லாம் கூடுவோம்

பாலரெல்லாம் கூடுவோம் பாட்டு நிறையப் பாடுவோம்
காலைத்தூக்கி ஆடுவோம் கையசைத்தே ஓடுவோம்
பள்ளிக்கூடம் சொல்லுவோம் பாடமெல்லாம் சொல்லுவோம்
மெல்லவீடு நாடுவோம் மேல கீழே ஆடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படலையிலிருந்து மணிச்சத்தம்

படலையிலிருந்து மணிச்சத்தம் பார்ப்பார் தம்பி பார் தம்பி
படலையடிக்கு மணிச்சத்தம் பார்த்து வருகின்றேன் அப்பா

கடிதம் வந்தது படியுங்கள் கடிதம் விரித்துப் படியுங்கள்
வடிவாய் படித்துப் பாருங்கள் வந்து புதினம் சொல்லுங்கள்
மாமா போட்ட கடிதம் பார் மச்சான் அத்தை நற்சுகமாம்
பூமா இப்ப கதைப்பாளாம் பொங்கலுக்கு வருவமாம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலருகே

வயலருகே நின்ற பல தென்னைகளில் ஒன்று தென்னைகளில் ஒன்று
வயலருகே நின்ற பல தென்னைகளில் ஒன்று தென்னைகளில் ஒன்று
புயலடித்து வட்டுவிழ பட்டுப்போச்சு

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பரம் சுத்துது

பம்பரம் சுத்துது
பம்பரம் சுத்துது
பாலா பாலா பாருங்கள்
பச்சை சிவப்பு வட்டங்கள் சுத்துது வந்து வரவைப் பாருங்கள்

மாமா தந்த பம்பரம் சுத்துது
மழலை காட் பம்பரம் சுத்துது மங்கையக்கா பாருங்கள்

ஒற்றைக் காலில் பம்பரம் சுத்துது
ஓடிவந்து பாருங்கள்
ஊசிக்காலில் பம்பரம் ஆடுது
ஒதுங்கி நின்று பாருங்கள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா வளர்க்கும் முயல்குட்டி

அண்ணா வளர்க்கும் முயல்குட்டி
அழகு வெள்ளை முயல் குட்டி
கண்ணோ சிவப்பு முயல் குட்டி
காதை உயர்த்தும் முயல் குட்டி

துள்ளிப் பாயும் முயல் குட்டி
தூரப் போகா முயல் குட்டி
அள்ளித் தூக்கி நான் கொஞ்சும்
அழகு வெள்ளை முயல் குட்டி.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு நல்ல வீடு

வீடு நல்ல வீடு மெல்ல அசையும் வீடு
வீடு நல்ல வீடு மெல்ல அசையும் வீடு
ஓடு போட்ட வீடு உடையார் தந்த வீடு
ஓடு போட்ட வீடு உடையார் தந்த வீடு

நாலு காலில் வீடு நதியில் நீந்தும் வீடு
வாலும் தலையும் நாலுகாலும் உள்ளவீடு
கதவு யன்னல் இல்லை காற்று ஒளியும் இல்லை
உறவு பேசியாரும் உள்ளே வருவதில்லை
பெருமை பேசி உள்ளே ஒருவர் வாழுகின்றார்
அருமையான வீடு ஆமையாரின் வீடு

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டா வெளியே வாருங்கள்

பாட்டா வெளியே வாருங்கள் பாருங்கள்
பாட்டா வெளியே வாருங்கள் பாருங்கள்
பாட்டி தன் காலை நீட்டிக்கொண்டேயிருக்கின்றார்
பாட்டா பாட்டா வாருங்கள் பாருங்கள்
பாட்டி பாக்கு உரலுக்குள் உரலுக்குள்
போட்டு வெற்றிலை இடிக்கின்றாள்
பொக்கு வாயால் சிரிக்கின்றாள்.

பாட்டா பாட்டா வாருங்கள் பாருங்கள்
பால் போல் நிலவைப் பாருங்கள் பாருங்கள்
பாட்டி முதுகு மிகக் கூனி போற்றி பொல்லை கொடுப்போமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா தோசை சுடுகின்றார்

அம்மா தோசை சுடுகின்றார்
அருகில் ஓடிச் செல்கின்றோம்
சும்மா இருங்கள் என்கின்றார்
சுட்டு சுளகில் இடுகின்றாள்

அடுப்பை நன்றாய் எரிக்கின்றாள்
அகப்பையில் மா எடுக்கின்றாள்
தடுக்கை நாங்கள் விரிக்கின்றோம்
தருவேன் பொறுங்கள் என்கின்றாள்

தட்டைக் கரண்டி பிடிக்கின்றாள்
சரியா பெரிய நிலவைப் போல்
வட்டத் தோசை சுடுகின்றாள்
வடிவாய் தின்பீர் என்கின்றாள்

சம்பல் அரைத்து தாளித்து
சட்டி நிறைய இருக்கிறது
தம்பி உண்ண தொடங்குவேமோ
சாப்பாடென்றால் விடுவோமோ.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் நாங்கள்

சேவல் கூவ விடிந்தது
கோவில் மணி
கேட்டது
பாலர் நாங்கள்
எழும்பினோம்
காலை வேலை
தொடங்கினோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மா அச்சாச் சாப்பாடு
அணைத்துத் தருவா
அன்போடு
நம்மை நன்றாய்
நீராட்டி
நாளும் பார்ப்பா
அன்போடு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் கூடம்

பாடசாலை செல்வோம்
பாடம்
நன்றாய்க் கேட்போம்
பாடம் பண்ணிக்
கொள்வோம்
பாட்டுப் பாடிப்
பார்ப்போம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் படிப்பு

பாமா வா வா
பந்தை அடி
இராமா ஓடிப் பந்தைப் பிடி
பூமா வந்து கிந்திப்பிடி
புனிதா பாய்ந்து
முந்தி அடி
மாமா வாறார்
கொஞ்சம் படி
ஓமோம் போறார்
பந்தை அடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கு

அன்பாய் இருப்போம்
ஆனந்தம் அடைவோம்
இன்பம் பெறுவோம்
ஈசனைத் தொழுவோம்
உயர முயல்வோம்
ஊக்கம் எடுப்போம்
எழுதிச் சிறப்போம்
ஏற்றவை கற்போம்
ஐயம் தவிர்ப்போம்
ஒளியை வளர்ப்போம்
ஓர்மம் காப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

வணக்கம் அம்மா
வணக்கம் அப்பா
வணக்கம் அண்ணா
வணக்கம் அக்கா
வணக்கம் வணக்கம்
வணக்கம் வணக்கம்
எல்லோருக்கும்
எமது வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்தையாரே!

இருண்ட பின்னர் வருகின்றீர்!
ஆந்தையாரே!
எப்படித்தான் பார்க்கின்றீர்
ஆந்தையாரே!
வெருண்டு நாங்கள் போம்படியாய்
பார்ப்பீரோமே!
வேலை வெட்டி செய்வீரோ
ஆந்தையாரே!
பகல் நேரம் எங்கு சென்றீர்
ஆந்தையாரே!
பற்றைக்குள்தான் இருப்பீரோ
ஆந்தையாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் படித்திடுவோம்

சேவல் விடியக் கூவிற்று
சின்னத் தம்பி எழும்பென்றோ
கொக்கரக்கோ! கொக்கரக்கோ!!
கொக்கரக்கோ! கொக்கரக்கோ!!

கூவிற்(று) எங்கோ குயில் ஒன்று
குஞ்சுத் தங்கை எழும்பென்றோ
கூகூ கூகூ கூக்கூக்கூ!
கூகூ கூகூ கூக்கூ!

காகம் கரைந்து கத்திற்று
காலை எழுந்து படியென்றோ
காகா காகா காகாகா!
காகா காகா காகாகா!

ஆகா நாமும் எழுந்திடுவோம்
அனைவரும் பாடம் படித்திடுவோம்
அம்மா அப்பாவுடன் கூடி
அச்சாப் பாட்டும் பாடிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக் குஞ்சுக்கிளி

எங்க(ள்) வீட்டுக் குஞ்சுக்கிளி
இறக்கை இல்லாக் குஞ்சுக்கிளி
சாழை கொட்டுமாம் குஞ்சுக்கிளி
சாய்ந்து ஆடுமாம் குஞ்சுக்கிளி
காலை ஆட்டுமாம் குஞ்சுக்கிளி
கண்ணைக் காட்டுமாம் குஞ்சுக்கிளி
எங்க(ள்) வீட்டுக் குஞ்சுக்கிளி
இரண்டு கால் குஞ்சுக்கிளி.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைனாக் குஞ்சே!

வண்ணைக் கிண்டிப் புழுப் பிடிக்கும்
மைனாக் குஞ்சே!
மஞ்சல் எங்கே பூசி வந்தாய்
மைனாக் குஞ்சே!
மைனாக் குஞ்சே! மயினாக் குஞ்சே!
கண்ணுக்கு இதைப் பூசும்போதோ
மைனாக் குஞ்சே!
கால்களிலும் பிரட்டிக் கொண்டாய்
மைனாக் குஞ்சே!
மைனாக் குஞ்சே! மயினாக் குஞ்சே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கார்

கூனிக் கூனிக் கொப்பால்
குரங்கார் நடந்து
போகிறார்
வேப்பங் காயைக்
குழையை
உருவி
விரும்பித் தின்கிறார்
குட்டி வயிற்றில்
ஒட்டிக் கட்டிப் பிடிக்கத்
தாவுறார்
நீட்டு வாலைக் கிளப்பி
நிமிர்ந்து நடந்து
காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயார் வேலை

பரக்குப் பரக்கு
பின்னங் காலால்
வயிற்றில் சொறிந்து கொள்கிறார்

பல்லைக் காட்டிச்
சுற்றிப் பறக்கும்
ஈயைக் கௌவப் பார்க்கிறார்

வளைந்து வளைந்து
வாயைத் திறந்து
களைத்துக் கிடந்து பார்க்கிறார்

நாக்கை நீட்டி
இளைத்து இளைத்து
முன்னங் காலை நீட்டிறார்

வாலைக் கடித்து
மெல்ல உறுமி
சுழன்று வளையம் போறுடுறார்

நிலத்தைத் தோண்டி
வளைஞ்சு மணந்து
நாயார் சுருண்டு படுக்கிறார்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு

அரிசிக் காகம் கரைகிறது
ஆரோ
வரப்போகினம் என்று
பெரிதாய் என்று
பெரிதாய் அம்மா
சொல்கின்றா
பெரியண்ணாவோ ஓடிப்போய்
தெருவைப் பார்த்துக்
காணாமல்
திரும்பிவர நாம் சிரிக்கின்றோம்.

அண்டம் காகம் கரைகிறது
ஆரோ போகப் போகினமாம்
என்றே பாட்டி
சொல்கின்றா
எல்லோரும் நாம்
சிரிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டி ஆடு

கூழை வாலை ஆட்டிக்
குதித்து வந்தது

குழையைப் பிடுங்கிக் காட்ட
எழும்பி நின்றது

அடிக்கத் தடியை ஓங்க
ஓடிச் சென்றது

ஆட்டுக் குட்டி வாலை
ஆட்டி வந்தது

அந்தக் குழையைக் கொடுக்ககக்
கடித்துத் தின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழியார்

கொக் கொக் கொக்கோக் கோழியார்
கொண்டை மஞ்சள் கோழியார்
முட்டை இட்டுப் போட்டவர்
கொக்கரித்துக் கத்தினார்!

கொண்டை மஞ்சள் கோழியைக்
கண்டார் அண்டம் காக்கையார்
அண்டை அயலில் முட்டையை
அவசரமாய்த் தேடினார்!

கொக்கரித்தார் கோழியார்
“கொக்கோ கொக்கோக் கொக்கொக்கோக்”
அக்காள் வந்தாள் முட்டையை
எடுத்துக் கொண்டு போய்விட்டாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக் குஞ்சாரே!

சொட்டுக் குஞ்சுக் காலாலே
சுறுக்காய் ஓடிப் போகின்றீர்
செட்டை விரித்துக் சிறுதூரம்
சிறக டித்துப் பறக்கின்றீர்

உழுந்து போலக் கண்ணாலே
ஓடிப் போய் எதைப் பார்க்கின்றீர்
விழுந்த தீனைப் பொறுக்காதீர்
வெள்ளைக் கோழிக் குஞ்சாரே!

அரிசிக் குறுணல் நான்தாறேன்
அள்ளி வந்து போடுறேன்
கரியைக் கிண்டப் போவேண்டாம்
சோக்குப் பஞ்சுக் குஞ்சாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லியும் பூனையும்

"இச்சிச் இச்சிச் இச்சிச்" என்றே
என்ன சொல்கிறார் - பல்லி
என்ன சொல்கிறா?

பச்சைப் பூச்சி பாரும் - சுவரில்
பிடிப்பேன் என்கிறார் - பாய்ந்து
பிடிப்பேன் என்கிறார்!

வாலை மெல்ல மெல்ல அசைத்து
வயிறால் ஊர்கிறார் - கொஞ்சம்
வயிறால் ஊர்கிறார்!

வந்தார் பூனை பாய்ந்து பல்லியைக்
கௌவிச் செல்கிறார் - வாயில்
கவ்விச் செல்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பளப் பூச்சி

பூப்பூத் தம்பளம்
பொட்டுப் போலத் தம்பளம்
மாரி காலம் வந்ததும்
மண்ணில் ஊரும் தம்பளம்

குஞ்சுக் குஞ்சுத் தம்பளம்
பஞ்சு போலத் தம்பளம்
பிடிச்சுப் பார்க்க
அம்மா ஏன்
அடிச்சுப் பறிச்சு எறிகிறார்?

பூப்பூத் பூப்பூத் தம்பளம்
பொட்டு நிறத் தம்பளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியைச் சொல்லும்

பொட்டுப் போட்ட பட்டுச் சிறகைப்
பூவில் இருந்தேன் அடிக்கிறீர்
தொட்டுத் தொட்டோ பூவின் நிறங்கள்
ஒட்டிக் கொண்டீர் சிறகிலே!

பட்டுச் சட்டை போல் இருக்கு
பார்க்கப் பார்க்க ஆசைதான்
சிட்டுக் குருவி போல நன்றாய்ச்
சுற்றிச் சுற்றிப் பறக்கிறீர்!

கண்கள் எத்தனை உண்டு உமக்கு
கணக்கைச் சொல்லும் எண்ணுவோம்
வண்ணப் பூச்சி நானும் பறக்க
வழியைச் சொல்லும் பார்க்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சொல்வேன்

பூவில் இனிக்கும்
தேன் இருக்கும் புதினம்
உனக்கு யார் சொன்னார்?

காதில் இனிக்கும்
பாட்டைப் பாடிக்
காட்டும் என்று
யார் சொன்னார்?

தேனைத் தேடிக்
கூடு கட்டிச்
சேர்த்து வைக்க
யார் சொன்னார்?

தேனீ உன்னைத்
"தேன் ஈ" என்று
திரும்பத் திரும்ப
நான் சொல்வேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சு மீனாரே

நீருக்குள்ளே அழகாக
நீந்தும்
குஞ்சு மீனாரே!

நீரை விட்டு
வெளியாலே
நீரும் கொஞ்சம்
வருவீரோ?

நீருக்குள்ளே
நான் வந்தால்
நீந்தச் சொல்லித்
தருவீரோ?

நீருக்குள்ளே
நீர் என்ன
நிறையத் தின்ன
வைத்துள்ளீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பட்ட பாடு

பானைக்கு உள்ளே
மீன் இருந்தது
பாய்ந்து பூனை பிடித்துக் கொண்டது.

மீனைப் பூனை
தூக்கி வந்தது
வீட்டு நாயும் துரத்தி வந்தது.

பூனை மீனைப்
பறித்துச் சென்றது
புளிய மரத்துக் காக்கை கண்டது.

வானில் பறந்து
வட்டம் இட்டது
வாயில் கொத்தி எடுத்துச் சென்றது.

பூனை மீயாவ்
மீயாவ் என்றது
நாயும் வள்! வள்! எனக்குரைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிலார்

குஞ்சு வால் அணிலார்
கொப்புத் தாவும் அணிலார்
பிஞ்சு காய் பழத்தைப்
பிடுங்கிக் கடிக்கும் அணிலார்!

முன்னங் காலைக் கையாய்
முகத்தின் முன்னால் ஏந்திக்
கொந்தல் கொய்யாப் பழத்தைக்
கொண்டே ஓடும் அணிலார்!

வந்து தருவராமோ
வாய் சிவந்த பழத்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மினி

மின்மினி அக்கா மின்மினி அக்கா
என்ன தேடுறாய் இருட்டு வேளையில்?

மினுக்கு மினுக்கி வெளிச்சம் போட்டு
என்ன தேடுறாய் மின்மினி அக்கா?

பொன்னைத் தொலைச்சியோ?
பொருளைத் தொலைச்சியோ?

என்னவென்று சொல் நானும் தேடுறேன்
எதனைத் தேடுறாய் எடுத்துத் தருகிறேன்

என்ன தொலைச்சியோ?
எங்கே தொலைச்சியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தாளம்?

தவளைப் பிள்ளை யாரே என்ன
தாளம் போட்டுக் காட்டுறீர்?
பளையை விட்டு வெளியே வந்து
பக்க வாத்தியம் போடுறீர்.

நாக்கை நீட்டப் பூச்சி வந்து
நைசாய் ஒட்டிக் கொள்ளுதே
மூக்கை அடைச்சுப் பிடிச்சுக் கொண்டோ
முறட்டுக் கத்தல் கத்துறீர்?

மாரி கொட்டு மாரி என்றோ
மகிழ்ந்து பாட்டுப் பாடுறீர்?
சாரைப் பாம்பு வந்து கண்டால்
சாப்பா டாகிப் போவிரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம்

நூலில் ஏற்றி
விட்ட பட்டம்
வாலை வாலை ஆட்டுது

மேலே மேலே
ஏற ஏற
நூலை நூலை இழுக்குது

மூச்சை கட்டி
விட்ட பட்டம்
உச்சி
உச்சி ஏறுது

பச்சை நிறமோ
நீல வானப்
பந்தலுக்குள் போகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் அலை

அலை உருண்டு வருகுது
அக்கா காலைத்
தொடுகுது

மலை எழும்பி
வருதல் போல்
மடிஞ்சு இடிஞ்சு
வருகுது

கரையில் கட்டிய
வீட்டினைக்
கரைத்துக் கொண்டு
போகுது

இரைஞ்சு எழும்பி
அலையுது
என்ன கோவஞ் சொல்லுங்கோ?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரம்

பூவாணம் போல் வானத்திலே
பூப்பூப் பூப்பூ
நட்சத்திரம்

வாவா என்று சிமிட்டிக்கண்
வடிவைக் காட்டும்
நட்சத்திரம்!

வாடாப் பூப்போல்
வானத்திலே
வாரிக்கொட்டி
விட்டவர் யார்?

ஓடிப் பொறுக்க முடியாமல்
உயரக் கிடந்து மின்னுவதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா தந்த குதிரை

எங்கள் வீட்டுக் குதிரையார்
நாங்கள் ஓடும் குதிரையார்
இங்கும் அங்கும் ஆடுவார்
எங்கும் ஓடிப் போய்விடார்!

தவிடு புல்லுப் பிண்ணாக்கு
தண்ணீர் கூடக் கேட்டிடார்
செவியைப் பற்றி இழுக்கினும்
திரும்பி எம்மைப் பார்த்திடார்!

எங்கள் வீட்டுக் குதிரையார்
நாங்கள் ஓடும் குதிரையார்
ஆசை மாமா அன்புடன்
தந்த மரக் குதிரையார்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கு

சூரியர் நேரம் தவறாமல்
கிழக்கினில் தோன்றி வெளிச்சத்தை
ஊர் ஒளி பெறவே உதவிப்பின்
மேற்கினிலே மறைகின்றார்
ஆரிடம் கேட்டு வருகின்றார்?
ஆரைத் தேடிப்
போகின்றார்?
யாரிடம் தங்கி வருகின்றார்?
நாங்களும் கேட்டால் சொல்வாரோ?

- நீ எதை நினைக்கிறாயோ
அதுவாகவே ஆகிறாய் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனித்துளி

முத்து முத்தாய்ப் பனித்துளி !
மொட்டு மேலும் பனித்துளி !
கொத்துப் பூவில் பனித்துளி !
குஞ்சுக் குண்டுப் பனித்துளி !!

புல்லும் சுமக்கும் பனித்துளி !
பூவும் சுமக்கும் பனித்துளி!!
மெல்ல வெயிலைக் கண்டதும்
மின்னல் போல மறைஞ்சதேன்?

புதியன விரும்பு
பூமி இழந்திடேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரை

ஊருக்கு உள்ளே - வயல் வெளி !
வயலுக்கு உள்ளே - ஒரு குளம் !
நீருக்குள்ளே - தாமரை !
நீரின் மேலே - பார் இலை !
இன்னும் மேலே - பார் மலர் !
எங்கும் நிறைந்த - பொன்மலர் !
என்னை பார்த்து - நிற்கிறாய் ?
இறங்கிப் பிடுங்க - வாறியா?

- எண்ணுவது உயர்வு.
- சொல்வது தெளிந்து சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்

அணில் விளையாடுது முற்றத்தில் !
அசையுது கொப்புகள் பக்கத்தில் !
புலுணிகள் மேயுது முற்றத்தில் !
புல்லுகள் சாயுது பக்கத்தில் !
மணி ஒலி கேட்குது பக்கத்தில் !
மாணவர் படிக்கிறோம் எட்டத்தில் !

- அச்சம் தவிர்.
- உடலினை உறுதி செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்?

பூனை புல்லைத் தின்னாதாம் !
புலியும் புல்லைத் தின்னாதாம் !

ஆனால் நேற்றோ எங்கள் தோட்டத்தில்
அப்பாவோடு நான் நிற்கப்

பூனை புல்லைத் தின்கிறது !!
என்று புனிதா ஓடிவர

நானும் கண்டேன் அறுகம்புல்
நன்றாய் நின்று தின்பதனை!

பூனை புல்லைத் தின்றவுடன்
புதினம் பார்த்த புளுகத்தில்

கத்திக் கழுத்தை வளைத்தது பின்
கக்கிப் போட்டு நின்றது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவர் சொல்

தவளை கத்த மழை வருமாம் !
தட்டாப் பூச்சி முகில் இருளாம் !
பவள மல்லிகை மணம் தருமாம் !
பச்சைத் தளிர் புல் தருமாம் !

பாசி படர் நிலம் வழுக்காம் !
பத்திரமாய் நடக்கட்டுமாம் !
பேசுவதார் பாட்டியடா !
பெரியவர் சொல் கேட்பமடா !!

- தையலை உயர்வு செய்
- குன்றென நிமிர்ந்து நில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிந்தாமல் வாருங்கள்

தாமரைப் பூக்குளத்திலே
தவளை கத்துது இரவிலே !
மாமி வீட்டுச் சுவரிலே
பல்லி சொல்லுது பகலிலே !

சோற்றுப் பானை அடுப்பிலே
கொதகொதக்குது நெருப்பிலே !
காற்றடிக்குது வெளியிலே !
கறியைப் போடுங்கோ இலையிலே!

பசி இருக்குது வயிற்றிலே !
பார்வை சொல்லுது கெதியிலே
பிசைந்து தின்னலாம் பிள்ளைகளே
பிந்தாமல் முன் வாருங்கள் !

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியும் பூட்டியும்

பாட்டி காதில் தோட்டைப் பூட்டி
ஆட்டிக் காட்டினாள் !
பழைய பவுணில் செய்தது என்று
நீட்டிக் காட்டினாள் !

"ஓட்டை போட்ட கதையைச் சொல்லேன்"
பூட்டி ஆட்டினாள் !
"உனக்கும் காதைக் குத்தச்
சொல்லிறன் என்றே" ஆட்டினாள்

✧ இளைத்தல் இகழ்ச்சி
✧ ஏறு போல் நட.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுவோம் வா

தம்பி விளையாட வா !
தங்கை விளையாட வா !
கிந்தி விளையாட வா !
கிளித்தட்டு ஆட வா !
பந்தடித்து ஆடவா !
கொந்தல் மாங்காய் ஆயவா !
குந்திச் சேர்ந்து உண்ணவா !

✧ ஒற்றுமை வலிமையாம்.
✧ கூடித் தொழில் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் குடிக்கும் குருவி

சின்னச் சொண்டுக் குருவி
தேன் குடிக்கும் குருவி
சின்னச் சின்னச் செட்டை !
சின்னக் காலும் கட்டை !

சின்ன மணிக் கண்கள்
சிறகிலே வண்ணங்கள்
அதனைப் பிடிக்கப் பதுங்க !
காற்றில் பறக்கும் ஒதுங்க !

சின்னச் சின்னக் குருவி
தேன் குடிக்கும் குருவி
இன்னும் வரவில்லை !
இன்னும் எங்கே போச்சோ !

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிப் பாட்டு

குஞ்சுப் பாப்பா
தூங்கட்டும் !
குருவிக் குஞ்சு
பாடட்டும் !
குஞ்சுக் கண்கள் உறங்கிட
குருவி பாட்டுப்
பாடட்டும் ! !

✧ நாளெல்லாம் வினை செய்.
✧ நினைப்பது முடியும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செண்பக மாமி

செண்பக மாமி வருகின்றா !
சிறகை ஒடுக்கி நடக்கின்றா !
கண் சிவப்பாகப் பார்க்கின்றா !
சருகுகளைப் பொறுக்கி எடுக்கின்றா !

பூமரத்தருகே போகின்றா !
புழுக்களைத் தேடிப் பிடிக்கின்றா !
மாமரக் கிளைக்குப் பறக்கின்றா !
மரத்துக்குள்ளே மறைகின்றா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோகை மயில்

புள்ளிப் புள்ளித் தோகை மயில்
துள்ளித் துள்ளி ஆடுது !
துள்ளித் துள்ளித் தோகை மயில்
சுழன்று சுழன்று ஆடுது !
மெள்ள மெள்ளக் கால் தாளம்
போட்டுப் போட்டு ஆடுது !
பள்ளிப் பாப்பாப் பிள்ளைகள்
பார்க்க நன்றாய் ஆடுது !

✧ வீரியம் பெருக்கு.
✧ சிதையா நெஞ்சு கொள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய மழை

நீல நிற வானம்
நிறம் கறுத்த நேரம்
ஆலமரம் காற்றில்
அசைகின்றது தூற்றல் !
மேல் முழுதும் மெல்ல
நனைக்கிறது செல்ல
பள்ளிக் கூட நேரம்
பாதி வழி போற
பிள்ளைகளே ஓடுங்கோ
பெரிய மழை பாருங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்குக்குட்டிக் கூட்டம்

அஞ்சு பனை ஓரம்
ஆடுமேயும் நேரம்
பிஞ்ச பனங்காயை
முயல் கடிச்சுச் சோரும் !

மஞ்சள் நிறப் பூக்கள்
வண்டு பாடும் பாக்கள்
கொஞ்சி விளையாடும்
குரங்குக் குட்டிக் கூட்டம் !!

✧ கூடித் தொழில் செய்.
✧ கெடுப்பது சோர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழப்பாட்டு

ஐயா பழம் வேணுமா ?
அப்பிள் பழம் வேணுமா ?
கொய்யாப் பழம் வேணுமா ?
கொய்த பழம் வேணுமா ?

பையா பழம் வேணுமா ?
வாழைப்பழம் வேணுமா ?
கையாப் பழம் வேணுமா ?
கரும்பைப் பழம் வேணுமா ?

மாலா பழம் வேணுமா ?
மாம் பழம் வேணுமா ?
பாலா பழம் வேணுமா ?
பலாப் பழம் வேணுமா ?
எல்லாப் பழமும் வாங்கிட
உங்கள் சம்பளம் காணுமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையும் நாமும்

வாழை மரம் மேலே !
வாழைக் குட்டி கீழே !
வாழைக் குலை மேலே !
வாழைப்பூ அதன் கீழே !

கீழே குலையை இறக்கி
ஆளுக்கு ஒன்று கொடுத்து
வாழைப்பழம் தின்போம்
வயிறு நிறையும் நன்றாய் !

✧ துன்பம் மறந்திடு
✧ நன்று கருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவும் விடையும்

மங்கை எங்கு போனாய்?
மல்லி வாங்கப் போனேன்.
நங்கை எங்கே போனாய்?
நாயைத் தேடிப் போனேன்.

தம்பி எங்கு போனான்?
தமிழ் படிக்கப் போனான்.
நம்பி எங்கே போனான்?
நாடகம் பார்க்கப் போனான்.

கண்ணன் எங்கே போனான்?
கடற்கரைக்குப் போனான்.
அண்ணன் எங்கே போனார்?
அப்பாவோடு போனார்.

புனிதா எங்கு போனாள்?
பூப்பிடுங்கப் போனாள்.
இனி நாம் நிற்க மாட்டோம்.
கோயிலுக்குப் போவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை வானம்

சின்னத் தம்பி பாரடா
சிவந்து வானம் போவதை!
மின்னும் இடத்தில் கறுப்பிலே -
மேகம் திரண்டு போவதை !

குஞ்சுத் தங்கை பாரடி
கோலம் போடும் சூரியன்!
கொஞ்சங் கொஞ்சமாகவே
மறைஞ்சு கொண்டு போவதை !

மேற்கு வான வெளியிலே
மேயும் நிறங்கள் அழகுபார்!
ஆற்ரை வேலை இப்படி?
அவசரமேன் செப்படி!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் சுற்றி...

ஊர் சுற்றப் போவோம் !
எங்கும் உலாவி வருவோம் !
நீர் நிற்கும் குளத்தில்
கல் எறிந்து பார்ப்போம் !
நீர்க்குமிழி தோன்றும்
நின்றதனை ரசிப்போம் !
ஊர்க்குருவி உதிர்த்த
இறக்கைகள் பொறுக்கி
இன்னும், பலதைச் சேர்த்துக்
கொண்டு
வீடு வந்து சேர்வோம் !

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிப் பூக்கள்

தங்கத் தூளை வானத்திலே
தட்டிக் கொட்டிச் சிதறிய தார்?
அங்கும் இங்கும் எங்குமாக
அள்ளி எறிந்து விட்டதார்?

கூட்டி அள்ளி எடுத்திட
கூடவரப் போவதார்?
பாட்டி கூட வாறியா?
பாப்பா போவம் வாறியா?

புள்ளிப் புள்ளி வெள்ளிகளாய்
பூப்போல் மின்னி மின்னிகளாய்
துள்ளி ஓடிப் பொறுக்கிட சொல்லுங்கோ
ஆர்வரப் போறீங்க?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தாடு

முல்லைப் பூவே சாய்ந்தாடு !
முத்தே மணியே சாய்ந்தாடு !
செல்லக்கிளியே சாய்ந்தாடு !
தேவர்க்கு அரசே சாய்ந்தாடு !

மல்லிகைப் பூவே சாய்ந்தாடு !
மருக் கொழுந்தே நீ சாய்ந்தாடு !
நெல்லிக் கனியே சாய்ந்தாடு !
நிறைஞ்ச வாழ்வே சாய்ந்தாடு !

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக் குஞ்சே!

கோழிக் குஞ்சே கிட்ட வா!
கொஞ்சம் முட்டை இட்டுத்தா
பழுப்பு வெள்ளை என்றாலும்
விரைவாய் முட்டை இட்டுத்தா!
உடனே அதனை விற்கலாம்
அரிசி கொஞ்சம் வாங்கலாம்.

✧ மிடிமையில் அழிந்திடேல்
✧ மீளுமாறு உணர்ந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயல் குட்டி

அண்ணா வளர்க்கும் முயற்குட்டி!
அழகு வெள்ளை முயற்குட்டி!
கண்ணோ சிவப்பு முயற்குட்டி!
காதை உயர்த்தும் முயறகுட்டி!
துள்ளிப் பாயும் முயற்குட்டி
தூரப் போகா முயற்குட்டி!
அள்ளித் தூக்கி நான் கொஞ்சும்
அழகு வெள்ளை முயற்குட்டி!
கிள்ளிப் போட்ட குழைக்காக
கீழே இருந்து முகம் பார்க்கும்
வெள்ளை வெள்ளை முயற்குட்டி
வீட்டில் வளர்க்கும் முயற்குட்டி!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைத் தாத்தா

சுளகுச் செவியை
அசைத்து அசைத்து
யானைத் தாத்தா
வருகிறார்

தும்பிக் கையைத்
தூங்க விட்டு
யானைத் தாத்தா
வருகிறார்.

சுவரைப் போன்ற
உடம்பைத் தூக்கி
யானைத் தாத்தா
வருகிறார்

தோளில் எம்மை
ஏற்றிப் போக
யானைத் தாத்தா
வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு பார்

கொந்தின கொய்யாப்
பழத்தைப் போல
குஞ்சுச் சிவப்பு வாயைப் பார்
பந்தினைப் பிடிக்க
நீட்டும் கையின்
பஞ்சு போன்ற அழகைப் பார்
நெஞ்சினை இழுத்துத்
தவழுகின்ற
நீலக் கண்ணன் வடிவைப் பார்
கொஞ்சிடத் தூக்க
நெஞ்சில் உதைக்கும்
குஞ்சுக் காலின்
கொழுப்பைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்காரின் கூத்து

டிங்கி டிக்கிடி
டிங்கி டிக்கிடி
கூத்துக் குரங்கார் ஆடுறார்
டங்கு டக்கட
டங்கு டக்கட
மேளத்துக்கே ஆடுறார்
குட்டிக் கரணம்
போடச் சொல்ல
கும்பிட்டுக் கரணம் போடுறார்
சட்டை போட்டுச்
சலங்கை கட்டித்
தாளக் காவடி ஆடுறார்
தட்டித் தட்டிச்
சொல்லச் சொல்லத்
தாளத்தோடும் ஆடுறார்
கட்டைக் குறவன்
காசை வேண்டெனக்
கையை நீட்டிக் கேட்கிறார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளை அண்ணா

தவளை அண்ணா
தவளை அண்ணா
தத்தித் தத்தி ஓடுகிறார்

தாளம் போட்டுக்
களைச்சதாலோ
தாண்டித் தாண்டிப்
போகிறார்

கவனம் மாறி
காலம் என்று
கத்திக் கத்தி மாய்கிறார்

காகம் வந்து
கொத்தித் தூக்கக்
கண்கலங்கிப் போகிறார்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டியார்

பளபள பளபள
கண்ணைக் காட்டும்
பட்டுப் பூனைக் குட்டியார்
பாலைக் குடிக்கக்
கண்ணை மூடும்
பஞ்சுப் பூனைக் குட்டியார்

எலிகளை வளைகளில்
கண்டால் பதுங்கும்
எங்கள் பூனைக்குட்டியார்
ஏறிப் பிடிக்கத்
தாவிப் பாய்வார்
எங்கள் பூனைக்குட்டியார்

காலை நக்கி
முகத்தைக் கழுவும்
சின்னப் பூனைக்குட்டியார்
வாலை ஆட்டிக்
காலில் உரசும்
வடிவுப் பூனைக் குட்டியார்

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தார்

சடையைச் சிலுப்பிச் சிங்கத்தார்
தலையை நிமிர்த்திப் பார்க்கிறார்
அடி எடுத்து நடந்தவர்
அங்கு நின்று பார்க்கிறார்

கொடிய சிங்கம் ஆயினும்
கொஞ்சம் கூடப் பயமின்றி
முடியும் பார்க்க நீங்களும்
மிருகக் காட்சிச் சாலையில்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்வயல் வே.குமாரசாமி

ஈழத்துக் கவிதை உலகில் பேச்சோசைப் பாங்கான முறையில் கவிதையில் பல்வேறு வகையான உத்திமுறைகளை கையாண்ட கவிஞர்களுள் கல்வயல் வே.குமாரசாமி மிகமுக்கியமானவர். "கல்வயலார்" என்று பிறந்த இடத்தினை அடையாகக் கொண்டு அழைக் கப்பட்ட ஒரு கவி ஆளுமை. வெறும் சொற்சித்திரங்களாலோ, சொற் களின் அடுக்குகளாலோ கவி புனைதலன்றி உயிரோட்டமான கவிதை களை புனைந்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் முக்கியமாக அடையாளப்படுத்தப்படும் கவிஞராக திகழ்கிறார் கல்வயலார்.

தமிழ்க்கவிதை உலகில் பன்முக ஆளுமை கொண்டவரான இவர் மரபுக்கவிதை, புதுக்கவிதை, குழந்தைக் கவிதைகள் என தனது கவிதைப் புலமைத்துவத்தினை முப்பரிமாணங்களாக வெளிக்காட்டி இருக்கின்றார். தமிழ் யாப்பியலில் சிறந்த புலமைத்துவம் உடையவரான இவரது கவிதைகள் ஓசைப்பண்பு நிறைந்தவையாக விளங்குகின்றன. கிராமிய வாழ்வும் கிராமங்களில் பேசப்படுகின்ற புழங்கு சொற்களும், எள்ளலும், நையாண்டியும் இவரது கவிதைகளை அழகுபடுத்தியிருக் கின்றன. பேச்சோசைப்பாங்கான கவிதைகளை புனைவதில் வல்லவ ரான இவர் தனது கவிதைத் திறத்தினை குழந்தைக் கவிதைகள், குழந்தைப் பாடல்கள் என குழந்தைகளுக்கான ஒரு உலகத்தினையும் படைத்திருக்கின்றார். ஈழத்தின் குழந்தை இலக்கிய மரபிலும் மிக முக்கியமாக அறியப்படுகிறார்.

கு.றஜீபன்

9 789557 331102

எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம். 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org